
# குமரன் தமிழ் வாசகம்

183



183/54

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
13 JUL 1954

TB
031(6)
N54
131535

...சாமி நாயுடு அண்டு சன்ஸ்

# குமரன் தமிழ் வாசகம்

(முதற் படிவம்)

## பொதுப்பகுதி

ஆசிரியர் :

**வித்துவான் ந. சண்முகம்**

தமிழாசிரியர், தொண்டைமண்டலம்

துளுவவேளாளர் உயர்நிலைப்பள்ளி, சென்னை.

APPROVED BY THE MADRAS TEXT-BOOK COMMITTEE

(*For use in Secondary & High Schools.*

*Vide Fort St. George Gazette dated 19-5-'54, Page 119.*)

OFFICE OF THE REGISTRAR OF BOOKS

13 JUL 1954

ஸி. குமாரசாமி நாயுடு அண்டு சன்ஸ்,

சென்னை. 1.

பதிப்புரிமை

TB
0316
N54

விலை 12 அணா

131535
600 008.

1954.

# முன்னுரை

குமரன் தமிழ் வாசகம் என்னும் பெயருடன் வெளிவரும் புத்தக வரிசையுள் இது 1–ஆம் படிவத்திற்கேற்ற பொதுப்பகுதிக்குரியதாகும். அரசாங்கத்தார் வெளியிட்டுள்ள பாடஅமைப்புத்திட்டத்தின்படியும், அளவின்படியும் இந்நூலில் உரைநடைப் பகுதியும், செய்யுட் பகுதியும் அவ்வகுப்பின் தகுதிக்கேற்ற முறையில் எழுதப்பட்டுள்ளன.

நம் நாட்டு மாணவர்கள் எதிர்காலப் பெருமக்களாக விளங்கி, மொழிப்பற்றும், நாட்டுப்பற்றும் உடையவர்களாய்த் திகழவேண்டும் என்னும் குறிக்கோளுடன் இந்நூலில் பல அறிஞர் பெருமக்களின் வரலாறுகளும், நீதிக்கதைகளும், தலைவர்களின் வரலாறுகளும், கைத்தொழில் மேன்மையும், பிறவும் வகுப்பின் தகுதிக்கேற்ற நடையில் எழுதப்பட்டுள்ளன. ஒவ்வொரு பாடத்தின் இறுதியிலும் அருஞ்சொற்பொருள், வினுக்கள், பயிற்சிகள், கட்டுரைப் பயிற்சிகள் முதலியன கொடுக்கப்பட்டுள்ளன.

செய்யுட்பகுதியில் நீதிப் பாடல்களும், இயற்கைக் காட்சிப் பாடல்களும், கதைப் பாடல்களும், பல்சுவைப் பாடல்களும், பாரதியார் முதலான கவிஞர் பெருமக்களின் பாடல்களும் சேர்க்கப்பட்டுள்ளன. முதற் படிவத்திற்குரிய திருக்குறட் பாக்களும் சேர்க்கப்பட்டுள்ளன. இறுதியில் குறிப்புரையும் கொடுக்கப்பட்டுள்ளது.

இந்நூலில் தங்கள் பாடல்களைச் சேர்த்துக்கொள்ள உரிமையளித்த பெருமக்கள் நாமக்கல் கவிஞர் கவிமணி அவர்கள், பாரதிதாசன் அவர்கள், சுத்தானந்த பாரதியார் அவர்கள் ஆகிய அனைவர்க்கும் என் நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கின்றேன். இப்புத்தகத்தை நல்ல முறையில் அச்சிட்டு வெளியிடும் **ஸி. குமாரசாமி நாயுடு அண்டு சன்ஸ் உரிமையாளருக்கும்** என் நன்றி உரித்தாகுக.

கல்வித் துறையினரும், தலைமையாசிரியர்களும், தமிழாசிரியர்களும் இப்புத்தகத்தை ஏற்றுத் தங்கள் மாணவர்களுக்கு உதவி, ஆதரிக்குமாறு வேண்டிக் கொள்கிறேன்.

ஆசிரியர்.

## பொருளடக்கம்

---

### உரைநடைப்பகுதி


| | | |
|---|---|---|
| 1. | நாம் வணங்கும் தெய்வம் ... ... | 1 |
| 2. | நல்ல மாணவன் ... ... | 7 |
| 3. | மானும் நரியும் ... ... | 13 |
| 4. | முயற்சியினுல் வந்த பெருமை ... | 20 |
| 5. | ஆறுகளும் அவற்றின் பயன்களும் ... | 26 |
| 6. | தீயவருடன் சேராதே (பஞ்சதந்திரக் கதை) | 33 |
| 7. | மதுரை மாநகரம் ... ... | 41 |
| 8. | கைத்தொழில் வளர்ச்சி ... ... | 47 |
| 9. | ஜப்பானியர் வாழ்க்கை ... ... | 53 |
| 10. | உடற் பயிற்சி ... ... | 60 |
| 11. | நமது தலைவர் ... ... | 65 |
| 12. | கடிதம் எழுதுதல் ... ... | 75 |
| 13. | டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் ... | 81 |
| 14. | புத்தர் ... ... | 89 |

## செய்யுட்பகுதி

1. வாழ்த்து
1. திருவாசகம் .... .... 93
2. நாலாயிரப் பிரபந்தம் .... .... 93
3. கலைமகள் .... .... 94
4. கடவுள் யார் ? .... .... 94

2. நீதி
1. நல்வழி .... .... 95
2. நீதி வெண்பா .... .... 96
3. திருக்குறள் .... .... 97
4. திருவேங்கட சதகம் .... .... 101

3. வருணனை
1. பொதிமலைச் சிறப்பு .... .... 102
2. மங்கிய வானம் .... .... 102

4. கதை
1. தேசிங்குராஜன் கதை .... .... 102
2. கர்ன மகாராஜன் சண்டை .... 104
3. பஞ்சதந்திரம் .... .... 105

5. பல்சுவை
1. தனிப்பாடல் .... .... 108
2. வேண்டுவதென்ன ? .... .... 108
3. தமிழ் நாடு வாழ்க .... .... 109

— குறிப்புரை .... .... 110

# குமரன் தமிழ் வாசகம்

(முதற் படிவத்திற்குரியது)


---

## 1. நாம் வணங்கும் தெய்வம்

'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' என்று நீங்கள் முன் வகுப்பில் படித்தீர்கள் அல்லவா ? மக்களாகப் பிறந்தவர்களுக்கு, நன்மை தீமைகளை நாடியுணரும் நல்லறிவு உண்டு. அவ்வறிவை நல்வழியில் பயன்படுத்தி வாழவேண்டியது மக்கள் கடமையாகும். அதற்கு அவசியமானது தெய்வ வழிபாடு ஆகும்.

அங்கு இங்கு எனாதபடி எங்கும் பிரகாசமாய் இருக்கின்ற ஆண்டவனை வழிபட்டு, அவன் அருளைப் பெற்று வாழ விரும்புவோர் முதலில் தாயையும் தந்தையையும் வழிபட வேண்டும். ஏனென்றால் நம்மைப் பெற்றுப் பாலூட்டிச் சீராட்டி வளர்க்கும் தாயே நமது முதல் தெய்வமாகும். இரண்டாவதாக, நமக்கு வேண்டுவன எல்லாம் தந்து கல்வி புகட்டி நம்மை அறிஞர்களாகச் செய்யும் தந்தை ஒரு தெய்வமாகும். இதனால்தான் தாயும் தந்தையுமே நாம் வழிபட வேண்டிய முதல் தெய்வங்கள் என்று பெரியோர்கள் சொல்லியுள்ளார்கள்.

தாய் தந்தைக்குச் செய்ய வேண்டிய வழிபாட்டினைச் செய்து, அவர்கள் வார்த்தைக்குக் குறுக்குச் சொல்லாமல் நடந்த பலருடைய வரலாறுகள் நம்மைப்போன்ற



இளைஞர்களுக்கு எடுத்துக்காட்டாக விளங்குகின்றன. 'தாயிற் சிறந்ததொரு கோயிலும் இல்லை.' 'தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை' என்னும் உண்மையுரைகள் எல்

லாம் தாய் தந்தையர்களின் பெருமையை எடுத்துக் காட்டவே சொல்லப்பட்டுள்ளன. தாயையும் தந்தையையும் வழிபாடு செய்யாமலும், அவர்கள் வார்த்தைகளைக் கேளாமலும் வேறு எப்படிப்பட்ட உயர்ந்த முறையில் கடவுளை வணங்கினாலும் அது உண்மையான வழிபாடாகாது. இவ்வுண்மையை விளக்க ஒரு வரலாற்றைக் கவனிப்போம்.

ஓர் ஊரில் வாழ்ந்துவந்த ஏழைப் பெற்றோர்களுக்கு, ஒரு மகன் இருந்தான். அவன் பெயர் குமரன் என்பது. அவன் மற்ற எல்லோரைப் போலவே விளையாடுதல், படித்தல் முதலியவற்றில் ஈடுபட்டிருந்தான். ஆயினும் அவன் பள்ளியில் படித்துக்கொண்டிருந்தபோது தாய் தந்தையரே தனிப்பெருந் தெய்வம் என்பதை அவனுடைய ஆசிரியர் பல கதைகளின் மூலம் ஒரு நாள் விளக்கிச் சொன்னார். அன்று முதல் அவன் தன் தாய் தந்தையர் கூறும் எதையும் மீறி நடந்தது கிடையாது. அவர்கள் சொல்வதை யெல்லாம் செய்துகொண்டு வந்தான். அதனால் அவன் பெற்றோர்கள் அவனிடம் அளவு இல்லாத அன்பு கொண்டனர்.

இவ்வாறு இருக்கும்பொழுது ஒரு நாள் அவன் தாய் நோய்வாய்ப்பட்டாள். அப்போது அந்த இளைஞன் நோயினால் வருந்தும் தன் தாயின் அருகிலிருந்து, தானே பல உதவிகளையும் செய்து வந்தான். அச்சமயம் அயலூரில் ஒரு பெருந் திருவிழா நடைபெற்றது. அந்த இளைஞனுடைய நண்பர்கள் எல்லோரும் திருவிழாவைக் காணச் சென்றனர். அவர்கள் குமரனையும் அழைத்தனர். அப்பொழுது அவ்விளைஞன் ‘நான் திருவிழாவிற்கு வர

முடியாது. ஏனெனில், வீட்டில் என் தாயார் நோயினல் வருந்திக்கொண்டிருக்கிருர்கள். அவர்களுக்குச் செய்ய வேண்டிய கடமைகளை நான் செய்யவேண்டும்' என்ருன். தாயார் வீட்டில் வருந்தும்போது தான் திரு விழாவிற்குச் செல்வது தவறு என்பதை உணர்ந்த அவ் விளைஞன் தன் வீட்டிலேயே தங்கி, தாயைக் கவனித்து வந்தான். அவனுடைய கவனிப்பினல் அவன் தாயாரும் விரைவில் குணம் அடைந்து விட்டார்கள், இச் செய்தி நாளடைவில் அவ்வூர் முழுவதும் பரவிற்று. ஊர் மக்கள் அனைவரும் இளைஞன் கொண்ட இணையற்ற தாயன்பைக் கண்டு 'தாயைக் காத்த தனயன்' என்று அவனைக் கொண்டாடினுர்கள். அவ்விளைஞன் செயல் போற்றத் தகுந்த தல்லவா ?

இதனல் ஒவ்வொருவரும் தாய் தந்தையரை வழிபட வேண்டும். அவர்களே நமது முதல் தெய்வம். அவர்களுக்கடுத்த தெய்வம் நமக்கு எழுத்தறிவித்து, நல்லறிவு புகட்டி, நம்மை அறிஞர்களாகச் செய்யும் ஆசிரியர் ஆவர். 'எழுத்தறிவித்தவன் இறைவன் ஆகும்' என்பது இக்கருத்தை விளக்கும். குருவைத் தெய்வ மாகக் கொண்டு வழிபட்ட பெருமை வாய்ந்த பலர் வரலாறுகளை மேல் வகுப்பில் படிப்பீர்கள். அர்ச்சுனன், ஏகலைவன் முதலானவர்கள் வரலாறுகள் அவற்றுள் முக்கியமானவைகளாகும்.

'மாதா, பிதா, குரு, தெய்வம்' என்று சொல்லப் படுவதின் உண்மையை உணர்ந்து நாம் உய்யும் வழி கண்டு உயர்வடைய வேண்டும். மாதா, பிதா, குரு இம்மூவரும் தெய்வம் என்றும், முதலில் மாதா, பிறகு

பிதா, பிறகு குரு, பிறகு தெய்வம் என்றும் இதற்குட பொருள் கொள்ளலாம். தாய், தந்தை, குரு ஆகியவா களைத் தெய்வமாகக் கருதி வழிபடுகின்றவர்களே கல்வி யின் பயனையும், மக்களாய்ப் பிறந்ததன் பயனையும் அடை வர். ஆகையினால் மாதா, பிதா, குரு இம்மூவரும் நாப வழிபடும் தெய்வங்களாவர். இத்தெய்வங்களை வழி பட்டபிறகு நினைப்பவர் மனம் கோயிலாக் கொண்ட ஆண்டவனை வழிபடுவது முறையாகும். நம்மிடம் அன்ட கொண்ட தாய், தந்தை, குரு ஆகியவர்களை வழிபட டால் அன்பே உருவாக விளங்கும் ஆண்டவனை வழி பட்டதற்கு நிகராகும். மகாத்மா காந்தி அடிகள் இவ வுண்மையைத் தம் வாழ்நாளில் கடைப்பிடித்தா மற்றவர்களையும் இவ்வாறு நடக்கும்படி அறிவுறுத்தி வந்தார். அவர் உரையின்படி நாம் நடப்போமாக.

---

அருஞ்சொற் பொருள் : *நாடி – ஆராய்ந்து; எடுத துக்காட்டாக - உதாரணமாக; பணி விடைகள் – தொண்டுகள் (வேலைகள்); தன யன் – பிள்ளை: இறைவன் - கடவுள் உய்யும் – வாழும் (மகிழும்); நிகர் - ஒப்ப சமம்.*

### கேள்விகள்

1. *முன் அறி தெய்வம் எவை ?*
2. *தாய் தந்தையரை வழிபட வேண்டியது ஏன் ?*
3. *இளைஞர்களுக்கு எடுத்துக்காட்டாக விளங்குவது யார் வரலாறு ?*

4. தாய் தந்தையரின் பெருமையை விளக்கும் பெரியோர் வாக்குகள் எவை ?

5. 'தாயைக் காத்த தனயன்' வரலாற்றைச் சுருக்கமாக எழுது.

6. குரு வழிபாட்டிற் சிறந்தவர் யாவர் ?

7. நாம் வணங்கும் தெய்வங்கள் எவை ?

8. எது உண்மையான தெய்வ வழிபாடு ஆகும் ?

9. ஆண்டவன் அருளைப்பெற சிறந்தவழி யாது ?

## பயிற்சிகள்

1. உண்மை, உயர்வு, இல்லை, பெருமை — இவற்றிற்கு எதிர்ப்பதம் எழுது.

2. பணிவிடை, எடுத்துக்காட்டு, நாடி — இவற்றை வாக்கியத்தில் அமைத்து எழுது.

3. எழுத்தறிவித்தவன், அவ்விளைஞன் — பிரித்து எழுதுக.

4. இப்பாடத்திலிருந்து நான்கு பெயர்ச்சொற்களும், நான்கு வினைச்சொற்களும் எழுதுக.

5. அவன் பெற்றோர் அவனிடம் அளவிலா அன்பு கொண்டனர் — எழுவாய் பயனிலைகளை எழுது.

# 2. நல்ல மாணவன்

நல்லூர் என்பது ஓர் ஊர். அந்த ஊரில் அழகான சோலைகளும், தண்ணீர் நிறைந்த தடாகங்களும் இருந்தன. அங்கு இருந்த வயல்களிலே உழவர்கள் நன்றாக உழுது நெல், கேழ்வரகு முதலான தானியங்களையும். வாழை, கருமபு, காய்கறிகள் முதலியவைகளையும், பயிரிட்டுத் தாங்களும் உண்டு மற்றவர்களுக்கும் உண்ணக் கொடுத்து வாழ்ந்து வந்தனர். அவ்வூரில் வாழ்ந்த மக்கள் அனைவரும் வீண்பொழுது போக்காமல் காலத்தைப் பொன்னாகக் கருதிப் பயன் உள்ள வேலைகளையே செய்துகொண்டு வந்தனர். எல்லோரும் நன்றாகக் கல்வி கற்றிருந்தனர். எழுதப்படிக்கத் தெரியாதவரே அவ்வூரில் கிடையாது. காரணம் என்ன ? அங்கு இருந்த நல்லார் சிலர். அவ்வூரைப் பல துறைகளிலும் முன்னுக்குக் கொண்டுவர முயற்சியுடன் பாடுபட்டனர். இரவுப் பள்ளிக்கூடம் வைத்து எல்லோருக்கும் கல்வி போதித்தனர். மருத்துவச் சாலைகள் அமைத்து நோயற்ற வாழ்வை உண்டாக்கினர். நூல் நிலையங்கள் ஏற்படுத்தி அவரவர்களுக்கு விருப்பமான நூல்களைக் கொடுத்துப் படிக்கச் செய்தனர். வானொலி அமைத்துத் தினமும் உலக நிகழ்ச்சிகளை அறியச் செய்தனர். அறிஞர் பலரை வரவழைத்து அரிய சொற்பொழிவுகளை ஆற்றச் செய்தனர். இவ்வாறு பலரும் பாராட்டத்தக்க அரிய செயல்கள் பலவும் ஆற்றிப் பார்ப்போர் அதிசயிக்கும்படியான வகையிலே அந்நல்லூரை உண்மையிலேயே நல்ல ஊராகத் திகழுமாறு செய்தனர்.

அந்த நல்லூரிலே செவ்வேள் என்று ஒரு மாணவன் ஆருவது வகுப்பில் படித்துக்கொண்டுவந்தான். அவன் கல்வியில் அளவற்ற ஊக்கத்துடன் கருத்தூன்றிப்படித்து வந்தான். 'இளமையில் கல்' என்பதை அவன் முதல் வகுப்பில் படித்தது முதல் அதன்படி இளமையிலேயே அனைத்தையும் கற்க ஆசை கொண்டான். 'இளமை யில் கல்வி சிலையில் எழுத்து' என்றபடி அவ்வன் எல்லாப்



பாடங்களையும் நன்ருக மனப்பாடம் செய்துகொண் டான். ஆசிரியர் கேட்கும் கேள்விகளுக்குத் தவருமல் பதில் கூறி வந்தான். அவனுடைய கையெழுத்தும் மிக அழகாக அமைந்திருந்தது. அவன் படித்த பள்ளிக் கூடத்தில் ஆண்டுதோறும் கையெழுத்துப் போட்டி நிகழும். அப்போட்டிகளில் பரிசுகளை இளைஞன் செவ் வேளைத்தவிர வேறு ஒருவரும் பெற்றதே கிடையாது.

அவ்வளவு அழகான கையெழுத்தும், அதற்குத் தகுந்த படிப்பும் அவனிடம் அமைந்து இருந்ததனுல் அவனுடன் படித்து வந்த மாணவரனைவர்க்கும் அவனிடத்தில் ஒரு தனி மதிப்பு உண்டாயிற்று.

படிப்பில் திறமைசாலியாக இருந்த செவ்வேள் நல்ல குணங்கள் உடையவனுகவும் விளங்கினுன். வீட்டிலும் வெளியிலும், படிக்கும் இடத்திலும், விளையாடும் இடத்திலும் அவன் நடந்துகொண்ட முறை மிகவும் போற்றத்தக்கதாக இருந்தது. அடக்கத்துடனும், அன்புடனும் இனிமையாகவும் பேசினுன். எவர் மனமும் வருந்தும்படியாக எதையும் சொல்லமாட்டான். அற்ப செயல்களுக்காகக் கூடப் பொய்சொல்லும் பழக்கம் அவனிடம் அணுவளவும் கிடையாது. ஒரு மாணவனைப் பற்றி இன்னெருு மாணவனிடம் கோள் சொல்லுவதில்லை. வேறு யாரேனும் கோள் சொல்வதைப் பார்த்தால் அவர்களுக்கு நல்ல புத்தி உண்டாகும்படி பல நல்லுரைகூறி அவர்களுடைய தவரைத் திருத்துவான்.

இவ்வாறு நல்ல குணங்கள் பலவும் அமைந்திருந்ததைக் கண்ட அவனுடைய ஆசிரியர்களும் உறவினர்களும் மற்றவர்களும் அளவில்லா ஆனந்தம் கொண்டனர். அவனைப் பார்க்கும்போதெல்லாம் அவனுடைய பெற்ருேர்களுக்கு உண்டாகும் மகிழ்ச்சி இவ்வளவு என்று சொல்ல இயலாது. ஆசிரியர் அடைந்த ஆனந்தம் அளவிடலாகாது. ஊரார் அடைந்த உவகையும் இவ்வளவு என்று உரைக்க இயலாது. அவனை அனைவரும் 'நல்ல மாணவன்,' 'நல்ல மாணவன்' என்றே பாராட்டிக் கூறி வந்தனர். அவனைக் காணும்

பெரியோர்கள், 'உலக வாழ்க்கையில் உயர்வு பெற்று எல்லோரும் போற்ற நல்லவனாக வாழ்ந்து நாட்டுக்குத் தலைவனாக விளங்கி நல்ல பணிகள் ஆற்றி நெடுநாளைக்கு அவன் வாழ வேண்டுமென்று' வாழ்த்தினார்கள்.

இளமையிலேயே கல்வியிலும் குணத்திலும் சிறப்புற்றுக் காண்போர் போற்றுமாறு விளங்கிய அவன் பொன் மலரில் நறுமணம் உண்டானாற்போல் நாளடைவில் சிறந்த பேச்சாளனாகவும் விளங்கினான். அவனுடைய பேச்சுத்திறமை கேட்போர் அனைவரையும் தன் வயப்படுத்தியது. நாள் செல்லச்செல்ல பெரியோர்களின் வாழ்த்துக்களைப் பெற்ற செவ்வேள் கல்லூரிப் படிப்புவரை முடித்து, நாடுபோற்றும் நல்லவனாகவும், உலகம் புகழும் உத்தமனாகவும் புகழ்பெற்றுத் திகழ்ந்தான்.

நல்லூரிலே தோன்றிய நல்ல மாணவனாகிய செவ்வேள், நாடு புகழும் நல்லவனாக விளங்கி நாட்டு முன்னேற்றத்திற்காக நற்பணிகள் பல செய்தான். நல்லூர் மேலும் புகழ்பெற்றது. செவ்வேளும் சிறப்புப் பெற்றான். அவனை எல்லோரும் வாழ்த்தினர்.

சிறுவர்களே! நீங்களும் செவ்வேளைப்போல் கல்வியில் கருத்தூன்றிக் கற்று, அடக்கம் முதலிய அரிய குணங்கள் பலவும் பெற்று, நமது நாட்டிற்காக உழைக்க வேண்டும். என்றும் நன்னோக்கம் கொண்டு, எல்லோரும், 'நல்லவன்' என்று சொல்லுமாறு நடந்து, நல்வாழ்வு வாழ முயற்சி செய்யவேண்டும்.

அருஞ்சொற் பொருள் : தடாகம் - குளம் ; போதித்தனர் - கற்பித்தனர் ; ஆற்றி-செய்து ; சிலை-கல் ; நறுமணம் - நல்ல வாசனை ; பணி - தொண்டு.

## வினாக்கள்

1. நல்லூர் மக்கள் எவ்வாறு தம் வாழ்க்கையை நடத்தி வந்தனர் ?
2. 'நல்லூரை உண்மையிலேயே ஒரு நல்ல ஊராக விளங்கச் செய்தனர்' — எவ்வாறு ?
3. செவ்வேள் எப்படிப் படித்து வந்தான் ?
4. செவ்வேளிடம் அமைந்திருந்த அரிய குணங்கள் எவை ?
5. பெரியோர்கள் எவ்வாறு செவ்வேளை வாழ்த்தினர் ?
6. நல்ல மாணவராக விளங்க நீங்கள் என்ன செய்ய வேண்டும் ?

## பயிற்சிகள்

| | |
|---|---|
| வேலை, வேளை<br>பனி, பணி<br>மணம், மனம்<br>நாள், நால் | இவற்றின் வேறுபாடுகளை உணர்ந்து வாக்கியங்களில் அமைத்து எழுது. |

2. எதிர்ப்பதம் எழுது :

| | | | |
|---|---|---|---|
| நல்லவன் | × | வெளி | × |
| தெரியாதவர் | × | நிறைந்த | × |

3. ஆசிரியர் முருகனை வாழ்த்தினார்—இத்தொடரில் உள்ள எழுவாய், பயனிலை, செயப்படு பொருள்களை எழுது.

4. பிரித்து எழுது :—

நோயற்ற, அளவற்ற, பேச்சுத்திறமை, நாட்டு முன்னேற்றம்.

5. நீங்களும் செவ்வேளைப்போல் கல்வியில் கருத் தூன்றிக் கற்று, அடக்கம் முதலிய அரிய குணங்கள் பலவும் பெற்று, நமது நாட்டிற்கு உழைக்க வேண்டும் என்ற நன்னோக்கம் கொண்டு நல்வாழ்வு வாழ முயற்சி செய்ய வேண்டும் — இத் தொடர் வாக்கியத்தைத் தனித்தனி வாக்கியங்களாக எழுது.

6. இப்பாடத்திலிருந்து ஐந்து இறந்தகால வினை முற்றுக்களை எடுத்தெழுது.

# 3. மானும் நரியும்

ஒரு காட்டில் மானும் காகமும் நட்புடன் இருந்தன. மான் காட்டில் உள்ள புல்லை மேய்ந்து நன்ருகக் கொழுத்து இருந்தது. அந்த மானை ஒரு நரி பார்த்தது. மான் கொழுத்து இருப்பதைக் கண்ட நரி எப்படியாவது அந்த மானைக் கொன்று புசிக்க வேண்டும் என்று எண்ணியது. ஆனல் மானும் காகமும் நட்புடன் இருத்தலை அறிந்த நரி, ஏதேனும் வஞ்சனையான செயலைச் செய்துதான் இதைக் கொல்ல வேண்டும் என்று தனக்குள் தீர்மானித்துக்கொண்டது.

மறுநாள் மான் அங்கு மேய்ந்துகொண் டிருக்கும் போது, நரி அங்கே வந்து மானை நோக்கி, 'நண்பனே ! நலமா ?' என்று வினவியது. அதைக் கேட்ட மான் நரியைப் பார்த்து 'நீ யார் ?' என்று கேட்டது. அதற்கு நரி 'நான் இந்தக் காட்டில் ஒருவருடைய ஆதரவும் இல்லாமல் திரிந்துகொண் டிருப்பவன். என் பெயர் குத்திரபுத்தி என்பது. இப்பொழுது இங்கு உன்னைப் பார்த்ததனுல் நான் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். எனக்குத் துணை ஒருவரும் இலர். அதனுல் இன்று முதல் நான் உன்னிடம் வேலை செய்துகொண்டு உன்னுடனே இருக்கலாம் என்று கருதுகின்றேன்' என்று மிகவும் தந்திரமாகக் கூறியது.


நரியின் நயவஞ்சக வார்த்தைகளை உண்மை என்று நம்பிய மான் 'அப்படியே செய்' என்று சொல்லி, நரியை அழைத்துக் கொண்டு தான் வசிக்கும் இடத்திற்குச் சென்றது. அப்பொழுது மானின் நண்பனுகிய சுபுத்தி

என்னும் காகம் மானைப் பார்த்து 'உன் அருகில் இருப்பவன் யார்?' என்று வினவ, மான், நரியின் வரலாற்றைக்கூறி 'இவன் என்னிடம் நட்புடன் இருக்க விரும்புகிறான்' என்று உரைத்தது. உடனே காகம் மானை நோக்கி, 'நண்பா! எப்பொழுதும் திடீரென்று நட்புப் பாராட்டுபவர்களை நம்புதல் தகாது. ஒருவருடைய குணம், ஒழுக்கம் இவற்றை ஆராயாமல் சிநேகம் செய்துகொள்ளுதல் பெருந் தவறாகும். முடிவில் உயிருக்கே ஆபத்தாக முடிந்தாலும் முடியும். ஆதலால் எவரையும் பார்த்த உடனே நம்பிவிடக் கூடாது,' என்று பல மேற்கோள்களைக் காட்டி 'ஆராய்ந்து பாராமல் செய்யும் கேண்மை ஆபத்தில் முடியும்' என்று சொல்லிற்று.

ஆனால், காகம் சொன்னவற்றைக் கேளாத மான் நரியை நம்பி, அப்படி 'எல்லாம் இவனைச் சந்தேகப்பட வேண்டாம். இவன் நல்லவன் என்பது இவன் பேசும் நயவுரையிலிருந்தே தெரிந்து கொள்ளலாம். அதனால் இவன் நமது நண்பனாக இருக்கட்டும்' என்று கூற, 'அப்படியானால் சரி! உன் விருப்பம்போல் செய். எதற்கும் சிறிது பத்திரமாகவே இரு' என்று காகம் எச்சரிக்கை செய்து விட்டுச் சென்றது.

தினமும் மான், காகம், நரி இம்மூன்றும் காலையில் எழுந்தவுடன் தத்தமக்கு வேண்டிய இரைகளைத் தேடிச் சென்று வயிறாரவுண்டு மாலை நேரத்தில் அங்கிருந்த ஒரு சண்பக மரத்தடியில் வந்து சேரும். இவ்வாறு இருக்கையில் ஒருநாள் மானைப் பார்த்து 'நண்பா! அங்கு ஓரிடத்தில் பசசைப்பசேலென்று செழுமையான பயிர்

இருக்கின்றது. அது உனக்கு மிகவும் சிறந்த உணவாகும்' என்று வஞ்சக எண்ணம் கொண்ட நரி சொல்லி, அவ்விடத்தையும் காட்டியது. அன்று முதல் அந்த மான் தினமும் அங்கே சென்று அப்பயிரை மேய்ந்து வந்தது. அதனுல் அந்நிலத்துக்குரியவன் மிகவும்



கோபம் கொண்டு மானைக் கொன்றுவிட எண்ணி, அந்த மானைப் பிடிப்பதற்காக ஒரு வலையைக் கட்டி வைத்திருந்தான். வழக்கம்போல் பயிரை மேய வந்த மான் வலையில் அகப்பட்டுக் கொண்டது. அச்சமயம் நரி அங்கே வந்து மான் வலையில் சிக்கிக்கொண்டிருப்பதைக் கண்டு சிந்தை மகிழ்ந்து இன்றுதான் என் எண்ணம் நிறைவேறிற்று. இன்று நமக்கு நல்ல விருந்து என்று எண்ணிக்கொண்டே மானின் அருகில் சென்றது.

நரியைக் கண்ட மான் 'நண்பனே! ஏன் சும்மா இருக்கிருய்? உடனே வந்து இவ்வலையை அறுத்தெறிந்து என்னை விடுவிக்கக் கூடாதா? நண்பர்களின் கடமை ஆபத்துக் காலத்தில் உதவுவது அல்லவா?' என்று வேண்டிக்கொண்டது. அப்பொழுது நரி மானைப் பார்த்து 'நீ சொல்வது உண்மைதான். ஆனல் எனக்கு இன்று விரத நாள். ஆதலால் இந்தத் தோல் வலையை நான் இன்று தீண்டமாட்டேன். நாளைக்கு என்ன வேண்டுமானலும் செய்வேன். என் நண்பனுக்காக நான் உயிரையும் தியாகம் செய்யத் தயாராய் இருப்பவன்தான். ஆனல் இன்று ஒன்றும் செய்ய முடியாத நிலையில் இருப்பதற்காக வருந்துகின்றேன்' என்று சொல்லிவிட்டு ஒரு புதரருகில் ஓடி ஒளிந்துகொண்டது.

வழக்கம் போல் மான் இருப்பிடத்திற்கு வராததைக் கண்ட காகம் மானைத் தேடி எங்கும் அலைந்து, கடைசியில் வலையில் அகப்பட்டுக்கொண்டு கிடத்தலைக் கண்டது. உடனே 'நீ ஏன் இந்தத் துன்பத்திற்கு ஆளானய்?' என்று காகம் வினவ, மான் 'உன் பேச்சைக் கேளாததின் பயன்' என்று கூறிற்று. 'சரி! உன் நண்பன் எங்கே?' என்று காகம் கேட்க, 'என்னுடைய மாமிசத்தைத் தின்பதற்காக இங்கு எங்கேயாவது ஒளிந்து கொண்டிருப்பான்' என்றது மான். அப்பொழுது காகம், 'தனக்கு நன்மை செய்கிறவனுடைய பேச்சைக் கேளாதவனுக்கு விரைவில் ஆபத்து நிச்சயம் உண்டாகும்' என்று சொல்லிக்கொண்டிருக்கும்போது தோட்டக்காரன் கையில் தடியுடன் வருவதைக் காகம் கண்டது. உடனே மானை நோக்கி 'நண்பா! நீ இப்பொழுது மூச்சை

அடக்கிக்கொண்டு இறந்தவனைப் போல் இரு. நான் உன்மீது உட்கார்ந்துகொண்டு உன்னைக் குத்துவது போல் பாசாங்கு செய்கின்றேன். நீ இறந்து விட்டாய் என்று எண்ணித் தோட்டக்காரன் வலையை எடுத்து அப்பால் வைக்கச் செல்வான். நான் அப்பொழுது கத்து கின்றேன், உடனே நீ எழுந்து ஓடிவிடு' என்றது. மானும் அவ்வாறே இறந்த பிராணியைப் போல் இருந்தது.



தோட்டக்காரன் மானைக் கொல்லுவதற்காகக் கையில் தடியுடன் வந்தவன், மான் இருந்த தோற்றத் தைப் பார்த்து அது இறந்துவிட்டது என்று எண்ணி, வலையை எடுத்துச் சுருட்டி ஒரு பக்கமாக வைக்கச் சென்றான். அப்பொழுது காகம் கத்தவே மான் எழுந்து துள்ளிக் குதித்து ஓடிவிட்டது. இதைக் கண்ட தோட்டக் காரன் மிகுந்த சினம் கொண்டு கையில் இருந்த

தடியை மானின்மீது வேகமாக வீசினான். அத்தடி ஓடும் மான்மீது படாமல் அங்கு ஒளிந்துகொண்டிருந்த நரியின்மேற் படவே அது இறந்தது. மானின் மாமிசத் தைத் தின்று மகிழ விரும்பிய நரி மாண்டது. மான் காகத்தின் உதவியால் உயிருடன் மீண்டது.

ஆகவே, எப்பொழுதும் பிறரோடு நாம் பழகும் போது, அவருடைய குணத்தையும் மன நிலையையும் அறிந்து பழகவேண்டும். இல்லையானால் மீளாத் துயரத் திற்கு ஆளாக நேரிடும் என்பதை உயர்ந்த நீதியாக இக்கதை உணர்த்துகிறது அல்லவா.

---

அருஞ்சொற் பொருள்: கேண்மை-நட்பு; நய உரை-இனிய வார்த்தை; வயிளுர - வயிறு நிறைய; சிந்தை - மனம்.

## வினாக்கள்

1. மான் நரியைப் பார்த்து நீ யார் என்று கேட்டதற்கு அந்நரி கூறியவற்றை எழுது.
2. மானுக்குக் காகம் என்ன உபதேசம் செய்தது?
3. மானின் மாமிசத்தைத் தின்ன விரும்பிய நரி, மானை எப்படிப்பட்ட ஆபத்தில் சிக்க வைத்தது?
4. வலையில் அகப்பட்டுக்கொண்ட மான் தன்னை விடுவிக்குமாறு நரியிடம் சொன்னபோது நரி என்ன கூறிற்று?

5. காகம் மானை எவ்வாறு விடுவித்தது ?
6. இக்கதையினால் அறிந்துகொள்ளும் நீதி என்ன ?

## பயிற்சிகள்

1. நண்பா ! எப்பொழுதும் திடீரென்று நட்பு பாராட்டுபவர்களை நம்புதல் தகாது — இவ் வாக்கியத்தில் வேற்றுமை உருபு உள்ள சொற்களை எடுத்து எழுது.
2 'நீ ஏன் இந்தத் துன்பத்திற்கு ஆளானாய்' என்று காகம் வினவ, 'உன் பேச்சைக் கேளாத தின் பயன்' என்று மான் கூறிற்று — இவ் வாக்கியத்தை அயற்கூற்று வாக்கியமாக மாற்று.
3. செல்வான், சென்றான் — இவ்விரண்டும் உணர்த் தும் காலம் என்ன ?
4. மீளாத்துயரம், பாசாங்கு, பத்திரமாக—இவற்றை வாக்கியங்களில் அமைத்தெழுது.
5. கோடிட்ட இடங்களில் தகுந்த சொற்களை எழுது :

| இறந்தகாலம் | நிகழ்காலம் | எதிர்காலம் |
|---|---|---|
| கண்டது | — | — |
| பார்த்தான் | — | — |
| — | எழுதுகின்றான் | — |
| — | — | செய்வான் |
| — | செய்கிறேன் | — |

# 4. முயற்சியினுல் வந்த பெருமை

உலகில் பிறக்கும்பொழுதே செல்வராகப் பிறப்ப வரும் இல்லே ; ஏழையராகப் பிறுப்பவரும் இல்லே. செல்வர்கள் என்று மற்றவர்கள் நினேக்கும்படியான குடும்பத்தில் பிறந்தோர் பலர், தங்கள் வாழ்க்கையில் வறுமைப்பட்டு வருந்துகின்றனர். ஏழைக் குடும்பத்தில் பிறந்த பலர் மிக உயர்வு பெற்றுப் பெருமக்களாக வாழ் கின்றனர். காரணம் என்ன?'முயற்சி திருவினே ஆக்கும்,' 'முயற்சியின்மை இன்மை புகுத்திவிடும்' என்ற உண்மை யுரையேயாகும். சோர்வின்றி உழைப்பவர் தங்கள் உழைப்பின் பயனேப் பெற்றே தீர்வர். அதுபோலவே உழைப்பே இல்லாமல் முன்னேர் சேர்த்து வைத்த வற்றைச் சாப்பிட்டுக்கொண் டிருப்போரும் அவ்வாறு இருப்பதின் பயனே அனுபவிப்பர். அதனுல்தான் முயற்சி யினுல் ஒவ்வொருவரும் முன்னேற வேண்டும் என்று பலரும் கூறுகின்றனர். இவ்வாறு முயற்சியினுல்பெருமை பெற்ற **எல். டி. சாமிக்கண்ணுப் பிள்ளே** என்பவர் வரலாற்றைத் தெரிந்துகொள்வோம்.

**சோமனூர்** என்னும் ஊரில் **லூயிஸ் பிள்ளே** என்ற ஒரு கிறித்துவப் பெரியார் வாழ்ந்து வநதார். அவர் புதுச் சேரியில் உள்ள பள்ளி ஒன்றில் படித்துத் தமது சொந்த ஊரிலேயே காட்டு இலாக்கா உத்தியோகஸ்தரிடம் வேலே பார்த்து வந்தார். அதனுடன் ஆங்கிலேயர் களுக்கு பிரஞ்சு மொழியைக் கற்றுக்கொடுத்தும் வந்தார். இவற்றின் மூலம் வந்த பொருள் அவருக்குத் தன் குடும்பத்தை நடத்துவதற்கே போதுமானதாக இல்லே. அதனுல், சென்னே, போத்தனூர் முதலான

இடங்களுக்குச் சென்று வேறு வேலைகளிலமர்ந்து தனக்கு வேண்டிய பொருள் தேடலானுர். கடைசியில் நீலகிரியில் ஓர் ஆசிரியராக இருந்தார். அவருக்கு இரண்டு பிள்ளைகள் இருந்தனர். பொருட் செல்வத்



தைத் தன் மக்களுக்கு மிகுதியாகச் சேர்த்து வைக்க முடியாவிட்டாலும், எப்பொழுதும் எவராலும் கவரப்பட முடியாத கல்விச் செல்வத்தையாவது சேர்த்துவைக்க லூயிஸ் பிள்ளை எண்ணினுர். ஆனுல் தம் குடும்ப

நிலையை யுணர்ந்த அவர் எவ்வாறு தம் பிள்ளைகளைப் படிக்க வைப்பது என்று ஆலோசனை செய்து கொண்டிருந்தார்.

அப்பொழுது லூயிஸ் பிள்ளையின் எண்ணத்தை முடித்து வைக்க ஒரு பெரியார் அங்கு வந்து சேர்ந்தார். அவர் பிரெஞ்சு தேசத்திலிருந்து வந்த பாதிரியாராவர். அவர் பெயர் பயோலி என்பது. அறிவிலும் அனுபவத்திலும் முதிர்ந்த அம்முதியவர் இந்நாட்டு மக்களின் கல்விக்காகப் பெரிதும் உழைத்தார். அவருடைய ஆதரவில் லூயிஸ் பிள்ளையின் மக்கள் இருவரும் நாகப்பட்டினத்தில் இருந்த செயின்ட் ஜோசப்ஸ் கல்லூரியைச் சேர்ந்த பள்ளிக்கூடம் ஒன்றில் படிக்க ஏற்பாடு செய்யப்பட்டது. அப்பள்ளியில் சேர்ந்து படிப்பதற்காக லூயிஸ் பிள்ளையின் மக்கள் இருவரும் நீலகிரியிலிருந்து புறப்பட்டனர். நீலகிரியிலிருந்து வேறு எந்த ஊருக்கும் அக்காலத்தில் இரயில் போக்கு வரவு கிடையாது. அதனல் நீலகிரியிலிருந்து கோயம்புத்தூர் வரை நடந்துவந்து, அங்கிருந்து தான் இரயிலில் நாகப்பட்டினம் செல்ல வேண்டும். ஆகவே நீலகிரியிலிருந்து புறப்பட்ட இளைஞர்கள், பெற்ருேர் கொடுத்த கொஞ்சம் பணத்தைக் கையில் வைத்துக்கொண்டு பசி எடுக்கும் வேளையில் வழியில் ஏதேனும் வாங்கிச் சாப்பிட்டுக் கோயம்புத்தூர் வரை நடந்து சென்ருர்கள். ஏன்? படிப்பதற்காக. நீலகிரிக்கும் கோயம்புத்தூருக்கும் ஏறக்குறைய 60 மைல்கள் இருக்கும். அவ்வளவு தூரமும் நடந்தே சென்று அங்கிருந்து இரயில் ஏறி நாகப்பட்டினம் அடைந்தார்கள். அங்கு பயோலிப் பாதிரியார் உதவியினல் அவர்கள் பள்ளியில் சேர்ந்து நன்ருகப் படித்துத் தேறினர்கள்.

## 4. முயற்சியினுல் வந்த பெருமை

அவ்விருவருள் ஒருவர் தான் எல். டி. சாமிக் கண்ணுப்பிள்ளை என்பவர். அவர் அங்கேயே கல்லூரிப் படிப்பை முடித்து எம். ஏ. பட்டமும் பெற்ருர். கல்வியில் கண்ணும் கருத்துமாயிருந்து, கவனித்துப் படித்த காரணத்தினுல் நீலகிரியிலிருந்து நடந்து வந்த எழைச் சிறுவர் படிப்பில் பெரும்பட்டம் பெற்ருர். அது மட்டுமா? வான சாஸ்திரம், சட்டப்படிப்பு ஆகியவைகளில் வல்லவரானுர். பல மொழிகளையும் நன்கு கற்ருர். தமிழ், தெலுங்கு, மலையாளம், இந்தி, பிரெஞ்சு, லத்தின், ஆங்கிலம் முதலான பல மொழிகளிலும் புலமை பெற்றுப் பன்மொழிப் புலவராகத் திகழ்ந்தார்.

கல்லூரிப் படிப்பை முடித்த சாமிக்கண்ணுப் பிள்ளை, சென்னைஅரசாங்க அலுவலகத்தில் எழுத்தாளர் (கிளார்க்) வேலையில் அமர்ந்தார். பிறகு சென்னை அரசாங்கக் கல்லூரியில் லத்தீன் மொழியைப் போதிக்கும் பேராசிரியராக விளங்கினுர். பிறகு சட்டம் பயின்று பி. எல். பட்டம் பெற்ருர். பின்பு ஆங்கில நாட்டுப் பரீட்சை ஒன்றில் தேறி எல். எல். பி. பட்டம் பெற்ருர். இவ்வாறு பன்மொழிப் புலமையும், பல துறை அறிவும் பெற்ற அவ்வறிஞர் டெபுடி கலெக்டர், ரெவினியூ போர்டு துணைச் செயலாளர், செயலாளர் (செகரட்டரி), கூட்டுறவுச்சங்க ரிஜிஸ்டிரார். விவசாய இலாக்காத் தலைவர் முதலான பல உயர்ந்த பதவிகளில் இருந்து நேர்மையுடனும் திறமையுடனும் தமது கடமைகளைச் செய்து அரிய புகழையும் அளவிலாப் பொருளையும் ஈட்டினுர். இவ்வளவு பெரும் பெரும் பதவிகளை அவர் பெற்றது உண்மையான முயற்சியினுலேதான் என்ருல் அம்முயற்சியின் சிறப்பை என்னென்றுரைப்பது ?

**"தெய்வத்தால் ஆகா தெனினும் முயற்சிதன்
மெய் வருந்தக் கூலிதரும்"**

என்பது பொய்யா மொழி அன்றோ ?

பிறகு சென்னை சட்ட சபையின் முதல் செயலாள ராக இருந்தார். இங்கிலாந்து தேசத்தில் நடைபெறும் பாராளுமன்ற நடைமுறைகளை அறிந்துவருவதற்காக அங்கு அனுப்பப்பட்டார். சென்னை சட்டசபைத் தலை வராகவும் இருந்து புகழ் பெற்றார். ஏழைக் குடும்பத்தில் பிறந்த சாமிக்கண்ணுப் பிள்ளை வருந்தி முயன்று கற்றுத் தேறியதனாலும், இடைவிடாத உழைப்பினாலும் படிப்படி யாக உயர்ந்த பதவிகளை வகித்தார். முயற்சியால் முன்னேற்றம் அடைந்த பல பெரியார்களில் சாமிக் கண்ணுப் பிள்ளையும் ஒருவராவர். அவரைப்போல் ஒவ் வொருவரும் மெய் வருத்தம் பாராமல் கருமமே கண்ணா யிருந்து முயலுதல் வேண்டும். "ஊக்கம் உடையவனைத் தேடிக்கொண்டு ஆக்கம் வந்தடையும்" என்பதை நினைவில் இருத்தி, முயன்றால் முன்னுக்கு வரலாம். முயற்சியின் பெருமையை அறிந்து உழைத்திடுதல் நம் கடமையாகும்.

---

**அருஞ்சொற் பொருள் :** இன்மை – வறுமை; முதியவர் – கிழவர் (வயதானவர்); புலமை - அறிவு; ஈட்டினர் - சேர்த்தார்; ஆக்கம் - செல்வம்.

## வினாக்கள்

1. முயற்சி மிகவும் அவசியமானது என்பது எப் படித் தெரிகிறது ?

2. சாமிக்கண்ணுப் பிள்ளையின் தந்தை எங்கு என்ன வேலையில் இருந்தார்? அவர் தம் பிள்ளைக்கு எச்செல்வத்தைத் தேடிவைக்கக் கருதினுர்? ஏன்?

3. பிள்ளைகள் இருவரும் எவ்வாறு நாகப்பட்டினம் சேர்ந்தனர்? அதிலிருந்து தெரிவது என்ன?

4. சாமிக்கண்ணுப் பிள்ளை முதலில் என்ன வேலையிலமர்ந்தார்? பிறகு என்னென்ன உயர்ந்த பதவிகளைப் பெற்ருர்?

5. சாமிக்கண்ணுப் பிள்ளையின் வரலாற்ருல் நீங்கள் தெரிந்துகொள்ளும் உண்மை என்ன?

6. சாமிக்கண்ணுப் பிள்ளையின் கல்விச் சிறப்பை எழுது.

### பயிற்சிகள்

1. 'பிறக்கும்பொழுதே செல்வராகப் பிறப்பவரும் இல்லை; ஏழையராகப் பிறப்பவரும் இல்லை'— ஒரே வாக்கியமாக மாற்றி எழுது.

2. முன் பாடத்திலிருந்து இரண்டு வினு வாக்கியங்களை எடுத்து எழுது.

3. 'கல்விச் செல்வத்தைத் தன் மக்களுக்குச் சேர்த்து வைக்கக் கருதினுர்' — இவ்வாக்கியத்தில் உள்ள வேற்றுமை உருபுச் சொற்கள் எவை? என்ன வேற்றுமை?


# 5. ஆறுகளும் அவற்றின் பயன்களும்

நமது பாரதநாடு நீர் வளமும் நில வளமும் நிறைந்தது. மலைகளும் காடுகளும் மலிந்து, மற்றுமுள்ள வளங்கள் அனைத்தும் மிகுந்து மாண்பு பெற்றது. மலைகளிலே உயர்ந்த இமயமலையும், நதிகளிலே சிறந்த கங்கை, காவேரி முதலியனவும் அவற்றிற்கு எடுத்துக்காட்டாக விளங்குகின்றன. மலைகளிலிருந்து உற்பத்தியாகும் நதிகள் நாட்டின் வளத்தை நாள்தோறும் வளர்த்துக் கொண்டு இருக்கின்றன. அதனால்தான் நம் நாட்டு மக்களில் பெரும்பாலோர் உழவுத் தொழிலில் ஈடுபட்டுள்ளனர்,

நமது நாட்டில் உள்ள நதிகளில் காவேரி, கங்கை, யமுனை, பிரம்மபுத்திரை, துங்கபத்திரை, கிருஷ்ணை, வைகை, கோதாவரி முதலான நதிகள் சிறந்தவைகளாகும். இமயமலையிலிருந்து உற்பத்தியாகும் கங்கை யமுனை முதலியவை எப்பொழுதும் புனல் நிறைந்து செல்லும் நதிகள் ஆகும். கங்கை பாயும் பகுதியும், காவிரி பாயும் பகுதியும் பயிர்த்தொழில் செழிப்பாக நடைபெறும் சிறந்த இடங்களாகும்.

மலைகளில் பெய்யும் மழை நீரும், மலைமீது உள்ள பனிக்கட்டிகள் உருகுவதால் உண்டாகும் நீரும் திரண்டு சிறு சிறு கால்களாகச் சென்று அவை அனைத்தும் ஒன்றுகூடிப் பெரிய நதிகளாக மாறுகின்றன. அந் நதிகள் நாட்டின் நாலாப் பக்கங்களிலும் பரந்து சென்று வளத்தைப் பெருக்கி மக்களை வாழவைத்துக் கடைசியில் கடலில் கலக்கின்றன. ஆறுகள் கடலில் கலக்கும் இடத்திற்கு சங்கமத்துறை என்று பெயர். இரண்டு

நதிகளுக்கு இடையில் உள்ள இடத்திற்கு அரங்கம் என்பது பெயர். 'திருவரங்கம்' என்னும் தலம் காவேரி, கொள்ளிடம் என்னும் இரண்டு நதிகளுக்கும் இடையில் உள்ள காரணத்தினுல் அப்பெயர் பெற்றுள்ளது.



சில ஆறுகளில் எப்பொழுதும் நீர் வற்ருது ஓடிக் கொண்டிருக்கும். இவற்றிற்கு உயிருள்ள நதிகள் (ஜீவநதிகள்) என்று பெயர். சில நதிகளில் சிற்சில சமயங்களில்தான் நீர் செல்லும் ; மற்றக் காலங்களில் வறண்டு காணப்படும். இப்படிப்பட்டவற்றிற்குக் காட்டாறுகள் என்று பெயர். சில ஆறுகளில் நீர் எப்பொழுதும் ஊற்றின் மூலமாகத் தோன்றும். அப்படிப்பட்ட ஆறுகளில் வாய்க்கால் தோண்டி அதன்மூலம் நீரைப்பெற்று விவசாயத்தை நடத்துவர். அந்த ஆறுகளுக்கு ஊற்று நதிகள் என்று பெயர். அதற்கு உதாரணமாக பாலாற்றைச் சொல்லலாம்.

**"ஆற்றுப் பெருக்கற்று அடிசுடும் அந்நாளும் அவ்வாறு ஊற்றுப் பெருக்கால் உலகூட்டும்'**

என்ற பாடலின் கருத்து கவனிக்கத்தக்கது ஆகும்.

'ஆறில்லாத ஊருக்கு அழகு பாழ்' என்று நீங்கள் படித்திருப்பீர்கள். ஓர் ஊருக்கு அழகு செய்வது அவ்வூரின் அருகே செல்லும் ஆறேயாகும். 'ஆறில்லா ஊருக்கு அழகு பாழ்' என்பது இதனுல்தான். விவசாய விருத்திக்கும், வாணிப வளர்ச்சிக்கும், தொழில் வளர்ச் சிக்கும் ஆறுகள் பல்வகையிலும் பயன்படுகின்றன. அதனுல்தான் பண்டைக்காலத்தில் பெரிய நகரங்கள் எல்லாம் ஒவ்வொரு நாட்டிலும் ஆற்றின் கரையில் அமைக்கப்பட்டன. காவேரிக் கரையில் சோழநாட்டின் தலைநகரமான காவிரிப்பூம் பட்டினமும், வைகைக் கரையில் பாண்டிய நாட்டின் தலைநகரமான மதுரையும், பொருநைக் கரையில் சேரநாட்டின் தலைநகரமான வஞ்சியும் திகழ்ந்தன. இப்பொழுதும் இந்தியாவின் தலைநகரான டில்லி, யமுனை நதிக் கரையிலும், இங்கி லாந்து தேசத்தின் தலைநகரமான இலண்டன் மாநகரம் தேம்ஸ் நதிக் கரையிலும் விளங்குகின்றன. இவை போன்றே ஒவ்வொரு நாட்டின் தலைநகரமும் ஒவ்வோர் ஆற்றங்கரையில் அமைந்துள்ள தன்மையை நாம் சிந் தித்துப் பார்த்தால் ஆறுகளின் சிறப்பு நமக்கு நன்ருகப் புலப்படும்.

ஆறுகள், போக்குவரத்துக்குப் பயன்படும் நீர்வழிக ளாகவும் இருக்கின்றன. நம் நாட்டில் உள்ள கங்கை, கோதாவரி முதலிய நதிகளில் சிறு சிறு படகுகள் வியா பாரப் பொருள்களை ஏற்றிக்கொண்டு செல்கின்றன.

கடலில் செல்லும் பெரிய கப்பல்களும் செல்லக்கூடிய பெரிய ஆழமான ஆறுகளும் பிற நாடுகளில் இருக்கின்றன. ஆப்பிரிக்காவில் உள்ள நைல் நதியும், அமெரிக்காவில் உள்ள அமேசான் நதியும், சீன தேசத்திலுள்ள யாங்-ட்-ஸிகியாங் நதியும், பிறவும் அதற்கு உதாரணங்களாகும். பயிர்த்தொழிலுக்கு வேண்டிய நீர்ப்பாசனத்திற்குப் பெருந் துணையாக இருப்பவை நதிகள் என்று முன்பே படித்தீர்கள் அல்லவா ? ஆற்றுக்கால்வாய்களின் மூலம் நீரைப் பாய்ச்சுவது ஒரு முறையாகும். ஆற்றின் குறுக்கே அணைகட்டி வீணாக நீர் கடலில் பாயாதபடி, நீரைத தேக்கி அந்த நீரைக் கால்வாய்கள்மூலம் பாய்ச்சுவது மற்றொரு சிறந்த முறையாகும். நம் நாட்டில் உழவுத் தொழில் செழிக்க வேண்டுமானால் பல அணைக்கட்டுகள் வேண்டும் என்பதை எண்ணியே இப்பொழுது நம் அரசாங்கத்தார் பல அணைக்கட்டுகள் கட்டத் திட்டமிட்டுள்ளனர். இப்பொழுது நம் தென்னிந்தியாவில் இருக்கும் அணைக்கட்டுகளில் சிறந்தவை, காவேரியில் கட்டப்பட்டுள்ள கண்ணம்பாடி அணைக்கட்டு, மேட்டூர் அணைக்கட்டு முதலியனவாகும். இந்தியாவில் மகாநதி அணைக்கட்டு, துங்கபத்திரை அணைக்கட்டு, பவானி அணைக்கட்டு முதலிய பல அணைக்கட்டுகள் கட்டிக்கொண்டு வருகின்றனர். இன்னும் சில ஆண்டுகளில் நம்நாடு விவசாயத்தில் முதன்மை பெற்று விளங்கும் என்பதற்கு இத் திட்டங்களே ஏற்ற சான்றுகளாகும்.

மேலும் பல தொழில்களுக்கும் மிக அவசியமாகத் தற்காலத்தில் விளங்கும் மின்சாரம் தயாரிப்பதற்கும் ஆறுகள் பயன்படுகின்றன. முன்பு நாம் படித்தவாறு

அணைக்கட்டுகள் கட்டி அதன்மூலம் நீரை வெளிவிடும் போது அந்நீர் விழும் வேகத்தைக்கொண்டு மின்சாரம் உற்பத்தி செய்கின்றனர். மேட்டூர் அணைக்கட்டிலிருந்து இவ்வாறு செய்யப்படுகின்றது. சில இடங்களில் இயற்கையாக அமைந்துள்ள நீர்வீழ்ச்சிகளிலிருந்தும் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது. பைக்காரா நீர்வீழ்ச்சி, சிவசமுத்திரம் நீர்வீழ்ச்சி முதலியவை அதற்கு உதாரணங்கள் ஆகும். மேலும் பல அணைக் கட்டுகள் அமைத்து மின்சாரமும் மிகுதியாக உற்பத்தியாகுமானால்,

"பாரத தேசம் என்று சொல்லுவார் — மிடிப்
பயங் கொல்லுவார் — துயர்ப்
பகை வெல்லுவார்"

என்ற பாரதியார் பாடலின் கருத்து உண்மையாக விளங்கும்.

மலைகளிலிருந்தும் பிற இடங்களிலிருந்தும் வண்டலை அடித்துக்கொண்டு வந்து பூமியைச் செழிக்கச் செய்வதும் ஆறுகளேயாம். சில ஆறுகளின் தண்ணீர் மக்களின் பிணியை நீக்கி உடலை உறுதிப்படுத்தும் தன்மை வாய்ந்ததாக உள்ளது. கங்கை, காவேரி போன்ற நதிகள் இத்தகைய புனித நதிகளாகும். பூமி செழிக்க, விவசாயம் வளர, கைத்தொழில் பெருக, பல வளங்களும் மல்க நமக்குப் பல வகையிலும் பயன்படும் ஆறுகளை நமக்கு அளித்துள்ள ஆண்டவன் அருளை நினைத்து நன்றி மறவாமல் போற்றுவோமாக.

———

அருஞ்சொற் பொருள்: மாண்பு - பெருமை; அரங்கம் - மேடை; பெருக்கு - வெள்ளம்; உலகு + ஊட்டும் = உலகூட்டும் - உலகத்தவரை உண்பிக்கும்; புலப்படும் - விளங்கும்; மிடிப்பயம் - வருமை என்னும் பயம்; பிணி - நோய்.

## வினாக்கள்

1. நீர், நிலவளம் நிறைந்தது நம் நாடு — எப்படி?
2. நம் நாட்டின் நதிகள் சிலவற்றை எழுது.
3. நதிகள் எப்படி ஏற்படுகின்றன?
4. அரங்கம், உயிருள்ள நதி, காட்டாறு—விளக்கு.
5. மூவேந்தர் தலைநகரங்களின் அருகில் இருந்த ஆறுகளின் பெயர்களை எழுது.
6. டில்லி, லண்டன், மதுரை — இவை எந்தெந்த நதிக்கரையில் உள்ளன?
7. கப்பல் செல்லும் பெரிய நதிகள் இரண்டெழுது.
8. ஆறுகள் விவசாய அபிவிருத்திக்கு எவ்வெவ்வாறு பயன்படுகின்றன என்பதை விளக்கு.
9. நதிகள் நமக்கு பயன்படும் விதங்களை எழுது.
10. சிறந்த அணைக்கட்டுகள் எவை? எங்கெங்கு புதிதாகக் கட்டத் தீர்மானித்துள்ளனர்?

## பயிற்சிகள்

1. சேர்த்து எழுது :— பயிர் + தொழில்; ஆறு + பெருக்கு; ஆறு + கரை; இமயம் + மலை.

2. ஒருமைக்குப் பன்மையும், பன்மைக்கு ஒருமையும் எழுது :— நகரங்கள், ஆண்டு, வளம், நீர் வீழ்ச்சி, ஊற்று.

3. பல நதிகள் நாட்டின் வளத்தை நாள்தோறும் வளர்க்கின்றன — எழுவாய், பயனிலை, செயப்படுபொருள்களை எழுது.

4. கோடிட்ட இடங்களைப் பூர்த்தி செய் :—

   1. மதுரை ——— ஆற்றின் கரையில் இருக்கிறது.
   2. ———நதிக்கரையில் இலண்டன் மாநகரம் இருக்கிறது.
   3. ——— அணைக்கட்டி விருந்து மின்சாரம் உற்பத்தியாகிறது.
   4. இந்தியத் தலைநகரான ———, நதியின் கரையில் உள்ளது.
   5. இரண்டு நதிகளுக்கு இடையில் உள்ள இடம் ——— எனப்படும்.

5. இப்பாடத்திலிருந்து நான்கு இறந்தகால வினை முற்றுக்கள், மூன்று பெயரெச்சங்கள், நான்கு வினையெச்சங்களை எடுத்து எழுது.

6. நீ அறிந்த சில நதிகளின் பெயர்களை எழுது.

# 6. தீயவருடன் சேராதே

## (பஞ்சதந்திரக் கதை)

ஓர் ஊரில் துஷ்டபுத்தி, சுபுத்தி என்ற இரண்டு நண்பர்கள் இருந்தார்கள். அவ்விருவரும் பணம் சம்பாதிப்பதற்காக ஒரு நாள் அயல் ஊருக்குச் செல்ல எண்ணினார்கள். அவ்வெண்ணப்படியே இருவரும் சோற்று மூட்டை கட்டிக்கொண்டு திரவியந் தேடப் புறப்பட்டனர். நெடுந்தூரம் சென்று ஒரு குளக்கரையில்தங்கி இருவரும் தாங்கள் கொண்டுவந்திருந்த சோற்று மூட்டையை அவிழ்த்துச் சாப்பிட்டனர்.

பின்பு, நெடுந்தூரம் நடந்துவந்த களைப்பும், உண்ட இளைப்பும் ஒன்றுசேர துஷ்டபுத்தி உடனே அவ்விடத்தில் அயர்ந்து உறங்கிவிட்டான். ஆனால் சுபுத்தி அவ்விடத்தில் சிறிது நேரம் உலாவிக்கொண்டிருந்தான். அங்கு ஓரிடத்தில் யாரோ எதையோ புதைத்து வைத்திருப்பது போல் அவனுக்குத் தெரிந்தது. உடனே விரைந்து சென்று அவ்விடத்தை அவன் தோண்டிப் பார்த்தான். அங்கு அவனுக்கு ஒரு பெரும் 'பணப்புதையல்' கிடைத்தது. பணம் சம்பாதிக்கச் சென்ற சுபுத்திக்கு உண்டான மகிழ்ச்சிக்கு ஓர் அளவே இல்லை. அவன் களங்கமற்ற உள்ளம் உடையவன். ஆதலின் உடனே துஷ்டபுத்தியைத் தூக்கத்திலிருந்து எழுப்பி, தனக்குப் பணப் புதையல் கிடைத்ததை, மறைக்காமல் கூறினான். இதைக் கேட்ட துஷ்டபுத்தி, விரைந்து சென்று அப்புதையலைப் பார்த்தான். சுபுத்திக்கு இவ்வளவு பணம் கிடைத்துவிட்டதே. தனக்குக் கிடைக்க வில்லையே

என்ற பொருமையால் அவன் சுபுத்தியைப் பார்த்து, 'இப்பொழுது கொஞ்சம் பணத்தை எடுத்துக்கொண்டு செல்வோம். மீதியைப் பிறகு எடுத்துக் கொள்ளலாம்; அதுவரைக்கும் இங்கேயே வேருெரு இடத்தில் பத்திரமாகப் புதைத்து வைத்துவிட்டுச் செல்லலாம். ஏனென்ருல் இவ்வளவு பெரும் புதையலை நாம் எடுத்துக்



கொண்டு செல்வோமாஞல் வழியில் கள்வர்கள் கவர்ந்து கொள்வார்கள்' என்று அவன் நம்பும்படியாக நயவஞ்சக வார்த்தைகளைச் சொன்னுன். துஷ்டபுத்தி கூறியதை உண்மையென்று நம்பிய சுபுத்தி அவ்வாறே செய்யலாம் என்று கூறி, அப்புதையலிலிருந்து சிறிதளவு பணத்தை எடுத்து இருவரும் பங்கிட்டுக்கொண்டு மீதியை ஒரு மரத்தின் கீழே புதைத்து வைத்துவிட்டு ஊருக்குத் திரும்பினர்.

இரண்டு நாட்கள் கழித்து துஷ்டபுத்தி என்பான் தன் நண்பனுக்குத் தெரியாமல் பணத்தைப் புதைத்து வைத்து இருந்த இடத்திற்கு வந்து புதையலிலிருந்த வற்றை யெல்லாம் எடுத்துக்கொண்டு சென்று விட்டான். பின்பு சில நாட்கள் சென்ற பிறகு துஷ்ட புத்தி, சுபுத்தியிடம் சென்று 'நாம் முன்பு புதைத்து வைத்த பொருளை எடுத்துக்கொண்டு வரலாம் வா' என்று அழைத்தான். அவ்வாறே சுபுத்தியும் துஷ்டபுத் தியும் சென்றனர். தாங்கள் முன்பு புதைத்து வைத்த இடத்தை அடைந்து பார்த்தபொழுது சுபுத்திக்கு ஏற்பட்ட வேதனைக்கு அளவேயில்லை. பணம் வைத்த இடத்தில் மண்தான் இருந்தது. துஷ்டபுத்தியும், 'ஐயையோ! எவரோ புதையலை எடுத்துக்கொண்டு போய்விட்டனரே' என்று தானும் வருந்துவதுபோல் பாசாங்கு செய்தான். ஆனல் சுபுத்தி அவன் அகத்தின் தன்மையை முகத்தால் அறிந்து 'இந்தப் பணத்தை நீதான் கவர்ந்து கொண்டு சென்றுவிட்டாய். இப் பொழுது ஒன்றும் அறியாதவன்போல் நடிக்கின்றுய். வஞ்சகமாகப் பொருளைக் கவர்ந்தவன் நீதான்' என்று கூறினன். பின்பு, சுபுத்தி அவ்வூர் அரசனிடம் சென்று நடந்தவற்றைக் கூறினன். அது கேட்ட மன்னன் நீதி பதியை அழைத்து இவ்வழக்கினை நன்கு விசாரித்துத் தீர்ப்பளிக்குமாறு கூறினன். நீதிபதியும் ஐந்து நாட்களில் இவ்வழக்கினைத் தீர்ப்பதாக மன்னனிடம் தெரிவித்து வழக்கினை விசாரிக்கத் தொடங்கினர்.

சுபுத்தி நடந்த நிகழ்ச்சிகள் அனைத்தையும் உரைத் தான். துஷ்டபுத்திதான் புதைத்து வைத்த பொருளை எல்லாம் கவர்ந்து கொண்டான் என்று கூறினன்.

அது கேட்ட துஷ்டபுத்தி, நீதிபதியை நோக்கி. 'ஐயனே, நான் எடுக்கவில்லை என்பதற்கு எனக்குச் சாட்சி இருக்கிறது. அச்சாட்சியை நீங்கள் விசாரித்துப் பிறகு தீர்ப்புக் கூறுங்கள்' என்ருன். நீதிபதியும் அதற்குச் சரியென்று உரைத்து 'நாளைக்கு உனது சாட்சியை விசாரிப்போம்' என்று உரைத்தார்.

உடனே துஷ்டபுத்தி தன் வீடு சென்று தன் தந்தையை அழைத்து 'தந்தையே! நீங்கள் இப்பொழுது எனக்கொரு உதவி செய்ய வேண்டும், உங்கள் உதவியால் எனக்குப் பதினுயிரம் வராகன் பொன் கிடைக்கும்' என்ருன்.

அவன் தந்தை 'நான் என்ன செய்ய வேண்டும் சொல்' என்ருர்.

இன்றிரவு "நீங்கள் நான் சொல்லுமிடத்தில் உள்ள மரத்தின் பொந்தில் உட்கார்ந்துகொள்ள வேண்டும். அங்கு நாளைக்காலை நீதிபதி முதலானவர்கள் வந்து 'இம் மரத்தடியில் இருந்த பணத்தை எடுத்துக்கொண்டு சென்றவன் யார்?' என்று அம்மரத்தை நோக்கி வினவும் போது, நீங்கள் அப்பொந்தினுள்ளிருந்துகொண்டு 'சுபுத்திதான் எடுத்துக்கொண்டு போனுன்' என்று உரைக்க வேண்டும். அவ்வளவுதான், பிறகு நமக்கே வெற்றி" என்று புகன்ருன்.

இது கேட்ட தந்தை, மைந்தனை நோக்கி, 'இத்தீய செய்கை வேண்டாம். பிறருடைய பொருளைக் கவர்ந்த பொல்லாங்கு நமக்கு வேண்டாம். பிறர்

பொருளைக் கொள்ளையடித்து நாம் சுகமாக வாழ்ந்தாலும் அது நல் வாழ்வு ஆகாது. தீய செயல்கள் செய்யாதே' என்று நல்லுரைகள் நவின்றார். தாம் அப்படிப்பட்ட செயல் செய்ய முடியாதென்று மறுத்தார். ஆனால் துஷ்டபுத்தி தந்தையின் வார்த்தைகளைக் கேட்கவில்லை. அவரை வற்புறுத்தி அம்மரப்பொந்தில் உட்காரவைத்து விட்டு மறுநாட் காலை நீதிபதியிடம் சென்றான்.


'எங்கே உன் சாட்சி' என்று நீதிபதி வினவினார்.

'என் சாட்சி இங்கு வரமுடியாது. நாம்தான் அங்கே செல்ல வேண்டும்' என்று சொல்லி அம்மரம் உள்ள இடத்திற்கு நீதிபதியை அழைத்துச் சென்று 'இந்த மரத்தைக் கேளுங்கள். இந்த மரத்தின் கீழ்தான் அப் புதையல் புதைக்கப்பட்டது' என்றான்.

அதுபோல் நீதிபதி அந்த மரத்தை நோக்கிக் கேட்க, உடனே 'இம்மரத்தடியில் புதைத்து வைத்திருந்த பொருளை எல்லாம் சுபுத்திதான் எடுத்துக்கொண்டு சென்றான்' என்று ஒரு குரல் கேட்டது. இதைக் கேட்டோர் அனைவரும் 'இது என்ன ஆச்சரியமாக இருக்கின்றதே' என்று அதிசயித்தனர்.

சுபுத்தியும் திகைத்துவிட்டான். எப்படி இந்தக் குரல் கேட்டது என்று சுற்றுமுற்றும் பார்த்துவிட்டுப் பின் மரத்தின்மேல் ஏறிப்பார்த்தான். அம்மரத்தில் ஒரு பெரும் பொந்து இருப்பதைக் கவனித்தான். சிறிது ஆலோசனை செய்தான். ஏதோ சூழ்ச்சி நடந்திருக்கிறது என்று தன் மனதில் எண்ணிக்கொண்டு கொஞ்சம் நெருப்பை மூட்டிப் பற்ற வைத்து அப்பொந்தில்

போட்டான். மரம் தீப்பிடித்து எரியத் தொடங்கியது. பொந்தினுள் ஒளிந்துகொண்டிருந்த பெரியவர் நெருப் பின் வெம்மையைத் தாங்க முடியாதவராய் 'ஓ' வென்று அலறிக்கொண்டு வெளியில் வந்து விழுந்தார்.



அங்குக் கூடியிருந்தோர் 'இதென்ன ! இதென்ன !' என்று திகைத்தனர். பின்பு துஷ்டபுத்தியின் தந்தை, தன் மகன் செய்த கொடுஞ் செயல்களை விளக்கமாகத் தெரிவித்தார். நீதிபதி, துஷ்டபுத்தியே குற்றவாளி என்பதை மன்னனுக்கு அறிவித்தார். மன்னன் துஷ்ட புத்தியின் கொடுஞ் செயலுக்கு ஏற்ற கடுந்தண்டனை கொடுத்து நீதியை நிலைநாட்டினர்.

நண்பனுக்கே தீங்கு செய்து, தான் நல்வாழ்வு வாழ நினைத்த துஷ்டபுத்தி எவ்வளவு கொடியவன் என்பது

விளங்குகிறதல்லவா ? நண்பர்களைப்போல நடித்துத் தீமை செய்ய விரும்பும் தீயோர்களுடன் சேரக்கூடாது என்னும் உண்மை இக்கதையினால் தெரிகிறதல்லவா ?

"இணக்கம் அறிந்து இணங்கு",

---

அருஞ்சொற் பொருள்: திரவியம் - செல்வம் ; உறங்கினான் - தூங்கினான் ; களங்கம் - குற்றம் (வஞ்சனை) ; வேதனை - வருத்தம் ; கவர்ந்து - திருடி ; வினவும்போது - கேட்கும்போது ; இணக்கம் - நட்பு ; நவின்றார் - சொன்னார் ; புகன்றான் - சொன்னான்.

## வினாக்கள்

1. பொருள் தேடச் சென்றவர் யார் யார்? எவ்வாறு சென்றனர் ?
2. சுபுத்தி களங்கமில்லாதவன் என்று எப்படித் தெரிகிறது ?
3. துஷ்டபுத்தியின் கெட்ட எண்ணம் எப்படித் தெரிகிறது ?
4. புதைத்து வைத்த இடத்தில் பொருளைக் காணாத சுபுத்தி துஷ்டபுத்தியைப் பார்த்து என்ன கூறினான் ?

5. துஷ்டபுத்தி தன் தந்தையிடம் கூறியது என்ன? அதைக்கேட்ட தந்தை அவனுக்குச் சொன்ன நல்லுரை என்ன?

6. துஷ்டபுத்தி தனக்குச் சாட்சியாக இருப்பது எது என்று கூறினன்?

7. மரத்திலிருந்து ஒலி உண்டானவுடன் சுபுத்தி என்ன செய்தான்?

8. இப்பாடத்தினல் விளங்கும் நீதி என்ன?

## பயிற்சிகள்

1. வாக்கியத்தில் அமைத்து எழுது :—

களங்கமற்ற, பாசாங்கு, பொல்லாங்கு, அதிசயித்தனர்; திகைத்தனர்.

2. எதிர்ப்பதம் எழுது :

| | |
|---|---|
| விரைந்து × | வெற்றி × |
| முன்பு × | தீமை × |

3. பிரித்து எழுது :— வேறொரு; சோற்றுமூட்டை; குளக்கரை.

4. சேர்த்து எழுது :—பணம் + புதையல்; மரம் + பொந்து; வேறு + ஒரு.

5. இப்பாடத்திலிருந்து இரண்டு நேர்க்கூற்று வாக்கியங்களும், இரண்டு அயற்கூற்று வாக்கியங்களும் எடுத்தெழுது.

# 7. மதுரை மாநகரம்


நமது செந்தமிழ் நாடு சேர, சோழ, பாண்டியர் என்னும் முடியுடைய மூவேந்தர்களால் ஆளப்பட்டு வந்தது. அம்மூன்று நாடுகளிலும் அறிவிலும், ஆற்றலிலும் சிறந்த அரசர்கள் பலர் செங்கோல் செலுத்தி வந்தனர். அவர்களுடைய சிறப்பியல்புகளெல்லாம் சங்க நூல் களிலே விளக்கமாகக் காணலாம்.

அம்மூன்று நாடுகளுக்கும் முறையே வஞ்சி, **காவிரிப்பூம்பட்டினம், மதுரை** என்பன தலைநகரங் களாக அமைந்திருந்தன. அவற்றுள் தமிழ் நாட்டின் சிறந்த நகரம் எனப் போற்றப்படும் மதுரை மாநகரத்தின் பெருமைகளை இங்குக் கவனிப்போம்.

பாண்டிய நாட்டின் பழம்பதி என்றும், சங்கம் வளர்த்த நகரமென்றும், தமிழ்ப் பேரறிஞர்களால் புகழப் படுவது மதுரை மாநகரமாகும். அந்நகரத்தில் இருந்து அரசு ஆண்ட பாண்டிய மன்னர்கள் அறமும், அருந் தமிழும் வளர்த்து அழியாத புகழைப் பெற்றனர். தமிழ் நாட்டில் சிறப்புற்றிருந்த முதல் சங்கம், இடைச் சங்கம், கடைச் சங்கம் என்னும் முப்பெருஞ் சங்கங்களிலே கடைச் சங்கம் இருந்தது அந்நகரத்திலேயாகும். இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழையும் முறையாக வளர்த்து, புலவர் பெருமக்கள் கூடித் தேனினும் இனிய செந்தமிழின் பெருமையை நானிலம் போற்ற வளர்த்த தும் அந்நகரத்திலிருந்துதான்.

அந்நகரத்தின் அருகே வைகை என்னும் வற்றாத நதி அந்நாட்டின் வளத்தைப் பெருக்க வளத்துடன் செல்


கிறது. வைகைக் கரையில் உள்ள வையகம் புகழும் மதுரை மாநகரம், பல்வகை நலங்களும் பெற்ற பழம் பெரும்பதி என்பதை இன்றும் நாட்டு மக்களுக்கு விளக்கி வருகின்றது. சிவபெருமான் அடியார்கள் பொருட்டுப் பற்பல அற்புதத் திருவிளையாடல்களைப் புரிந்து அருள் செய்ததும் அப்பதியேயாகும்.



அவ்வூரிலே பண்டைக் காலத்திய சிற்ப ஓவியச் சிறப்புகளையும், கலையின் மாண்பினையும் அறிவிக்கும்படியான அற்புத வேலைப்பாடுகளுடன் கூடிய ஆலயங்கள் பல அழகுடன் காட்சி தருகின்றன. அவைகளில் மீனாட்சி அம்மன் கோயில் மிகச் சிறந்ததாகும். அந்த ஆலயத்தில் அழகான பொற்றாமரைக் குளமும், ஆயிரக்கால் மண்டபமும் பிறவும் கண்ணைக் கவரும் காட்சிகளாக விளங்கு

கின்றன. அங்கிருந்து கலை வளர்த்து, நாடு செழிக்க நல்லரசாண்ட பாண்டிய மன்னர்களுள் நெடுஞ் செழியன், மாறவர்மன், அரிகேசரி முதலானவர்கள் சிறப்புற்றவர்களாவார்கள்.

கால மாறுபாட்டின் காரணமாக மூவேந்தர் ஆட்சி இந்நாட்டிலிருந்து மறையத் தொடங்கிற்று. அப்பொழுது விஜயநகரத்து மன்னர்களான நாயக்க மன்னர்கள்



ஆளத்தொடங்கினர். அவர்கள் தென்தமிழ் மதுரையைத் தங்கள் தலைநகராகக் கொண்டு தென்னாட்டை ஆண் டனர். அவர்கள் காலத்திலும் மதுரை மாண்புமிக்க நகர மாகவே விளங்கிற்று. அங்கு 'திருமலை நாயக்கன்

மஹால்' என்று ஒரு பெரிய மண்டபம் இன்னும் சிறப்புடன் திகழ்கின்றது. அது நாயக்க மன்னர்களுடைய ஆட்சியின் நினைவுச் சின்னமாகவும் அக்காலக் கட்டிட அமைப்பிற்கோர் எடுத்துக்காட்டாகவும் விளங்கி வருகின்றது. அதைக் காண்போர் எவரும் அதன் சிறப்பையும், அமைப்பையும் புகழாமல் இருக்க முடியாது. மேலும், அங்கு ஓர் அழகான தெப்பக்குளம் இருக்கின்றது. அதுவும் எல்லோரும் பார்த்து வியக்கும் இடமாகும். இவ்வாறு 'பழம் பெருமையும், புதுப் பெருமையும் அமைந்து தென்னாட்டின் தலைசிறந்த நகரமாக விளங்கும் மதுரையைத் தமிழ் மக்கள் அவசியம் கண்டு களிக்க வேண்டும்.

மதுரை மாநகரத்துக்குக் கூடல், ஆலவாய் முதலான வேறு பெயர்களும் உண்டு. அவ்வூரைச் சுற்றிலும் பல்வகை சிறப்புக்களும் பெற்ற பல பதிகள் இருக்கின்றன. அவற்றுள் **திருப்பரங்குன்றம்** என்னும் ஊர் மிகவும் சிறந்ததாகும். அங்குள்ள மலையைக் குடைந்து அழகாக அமைக்கப்பட்டிருக்கும் முருகப் பெருமான் ஆலயமும், அம்மலைமீது உள்ள காட்சிகளும் கண்டு களிக்கத்தக்க இடங்களாகும்.

இப்பொழுதும் மதுரை பல்வகைத் துறையிலும் சிறப்புற்று விளங்குகின்றது. அங்கே பல கல்லூரிகளும், தமிழ்ச் சங்கமும் இருக்கின்றன. நூல்நூற்கும் இயந்திர சாலைகளும், பலவிதமான கைத்தொழிற் சாலைகளும் இருக்கின்றன. தென்பகுதி இரயில்வேயில் ஒரு பெரிய நிலையமாக பல இடங்களுக்குச் செல்லும் சந்திப்பு இடமாக (ஜங்ஷன்) அவ்வூர் அமைந்துள்ளது.

பண்டைக் காலத்தில் சிறப்புற்றிருந்த ஏழு நகரங்களுள் ஒன்றாக விளங்கிய மதுரை மாநகரம், இன்றுள்ள சிறந்த பல நகரங்களிலும் ஒன்றாக விளங்குகிறது. அதன் பெருமையை நாம் அறிந்துகொள்வது நல்லதல்லவா? மதுரை போன்ற பழம் பெருமை வாய்ந்த நகரங்களுக்குச் சென்று பார்த்து, நாட்டின் சிறப்பை அறிந்துகொள்ள ஒவ்வொரு மாணவனும் ஆசையுற வேண்டும்.

---

**அருஞ்சொற் பொருள் :** தேனினும் - தேனைக் காட்டிலும்; வையகம் - உலகம் (பூமி); ஓவியம் ; சித்திரம்; சிற்பம் - சிலை ; மாண்பு - பெருமை - நினைவுச் சின்னம் - ஞாபகக் குறி.

## வினாக்கள்

1. முடியுடை மூவேந்தர்கள் யாவர்?
2. மூவேந்தர் இருந்து அரசாண்ட தலைநகரங்கள் எவை?
3. பாண்டியர்கள் தமிழை வளர்த்தது எங்ஙனம்?
4. மதுரையின் சிறப்புக்களில் மூன்று எழுது.
5. மதுரைக்கு வழங்கும் வேறு பெயர்கள் எவை?
6. மதுரையில் கண்டு களிக்கவேண்டிய இடங்கள் எவை?

7. பாண்டிய மன்னர்களில் சிறந்த இருவர் பெயர்களை எழுது.

8. மதுரைக்கருகிலுள்ள சிறந்த பதி எது? அதன் சிறப்பு என்ன?

9. மதுரை கைத்தொழிலில் சிறந்த இடம் — ஏன்?

## பயிற்சி

1. பிரித்து எழுது : மூவேந்தர், நானிலம், ஓவியச் சிறப்பு, பொற்றாமரை, தென்னாடு.

2. தொடங்கினர், ஆண்டனர், இருக்கின்றது — இவை என்ன வினைமுற்றுக்கள்?

3. அழியாத, இருக்கமாட்டார், பெருக்கம், நல்லது — எதிர்ப்பதம் எழுது.

4. அ, இ, உ, — இம்மூன்றும் சுட்டெழுத்துக்கள். அந்த, இப்புத்தகம், உந்த என்றுவரும். ('உ' என்ற சுட்டெழுத்து இப்பொழுது வழக்கில் இல்லை.)

எ, யா. ஆ, ஓ, ஏ என்பன வினா எழுத்துக்கள். எவன்? யார்? அவனா? அவனோ? எது? இவனே? என்பன உதாரணங்களாகும். இப்பாடத்திலிருந்து சுட்டு வினாக்களுக்கு உதாரணம் எழுது.

# 8. கைத்தொழில் வளர்ச்சி

ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்குக் காரணமா யிருப்பவை உணவுப்பொருள் உற்பத்தியும், கைத் தொழில் வளர்ச்சியும், வாணிகப்பெருக்கமும் ஆகும். எந்த நாட்டில் உணவுப்பொருள்கள் மிகுதியாக உற் பத்தி செய்யப்படுகின்றனவோ அந்த நாட்டில் மக்கள் வயிருர உண்டு வன்மை பெற்று வாழ்வர். எந்த நாட்டில் கைத்தொழில் வளர்ச்சியடைந் திருக்கின்றதோ அந்த நாட்டு மக்கள் சோம்பலின்றி வறுமை என்னும் கொடு மைக்கு ஆளாகாமல் வாழ்வர். அதுபோலவே வாணிகப் பெருக்கம் ஒரு நாட்டின் பொருளாதாரப் பெருமையை விளக்குவதாகும். ஆகவே இம்மூன்றும் ஒவ்வொரு நாட்டிலும் சிறப்புற்றுத் திகழவேண்டும். அப்பொழுது தான் நாடு நன்ருடாக இருக்கும்; நாட்டிற்கு இருக்க வேண்டிய நலமெல்லாம் பெற்றுத் திகழும்.


கைத்தொழில் என்பது மக்களுக்குத் தேவையான பொருள்களைத் தயாரிக்கும் வேலையாகும். பல பொருள் களைப் பெரிய இயந்திரங்களின் மூலமும், பலவற்றைக் கையின் மூலமாகவும் செய்வர். பெரிய இயந்திரங் களின் மூலம் தயாரிக்கப்படும் பொருள்கள் மோட்டார், நீர் இறைக்கும் பொறிகள் முதலியனவாகும். மக்களுக்கு மிக அவசியமாக வேண்டிய ஆடைகள் இப்பொழுது பெரிய பெரிய இயந்திரங்களின் மூலம் நெய்யப்படுகின்றன. இப்படிப்பட்ட பெரும் இயந்திரங் களை அமைத்து வேலைசெய்யும் இடங்கள் பெரிய தொழிற் சாலைகள் எனப்படும். இத்தொழிற்சாலைகளில் ஆயிரக்

கணக்கான மக்கள் வேலை செய்வர். கையினல் செய்யப்படும் வேலைக்கும், இயந்திரத்தின் மூலம் செய்யப்படும் வேலைக்கும் ஒரு பெரிய வித்தியாசம் உண்டு. அதாவது குறைந்த செலவில் நிறைந்த பொருள்களை விரைவாக இயந்திரத்தின்மூலம் தயாரிக்கலாம். ஆனல் கையினல் செய்யப்படும் முறையில் பல நாட்கள் கஷ்டப்பட்டுக் குறைவான பொருளை அதிகச் செலவில் தயாரிக்கவேுண்டும். சிலர் இயந்திரத்தின் மூலம் உற்பத்தி செய்வது மக்களை, வேலையில்லாத் திண்டாட்டத்திற்கு உள்ளாக்குகிறது என்று கூறுகின்றனர். ஏனென்ருல் சாதாரணமாக நூறு பேர் செய்யவேண்டிய ஒரு வேலையை இயந்திரத்தின் மூலமாகச் செய்யும்போது பத்துபேர் இருந்தால் போதும். இதனல் மீதித் தொண்ணூறு பேர் பிழைப்பதற்கு என்ன செய்வது ? என்பது அவர்கள் கருத்து.

ஆம். அவர்கள் கருத்து உண்மைதான். ஆயினும் மக்களின் தேவைக்கேற்ப விரைவில் மிகுதியான பொருள்களைத் தயாரித்து அனுப்பவேண்டும். அதற்கு இயந்திரங்கள் தேவை. என்ருலும் சில பொருள்களை இயந்திரத்தின் மூலமாகவே செய்யவேண்டு மென்றும், சில பொருள்களைக் கையினலேயே செய்யவேண்டும் என்றும் பிரித்துவிடலாம். இயந்திரத்தின் மூலம் உற்பத்தி செய்யும் பொருள்களைப் பற்றிப் பிறகு தெரிந்து கொள்வோம். இப்பொழுது இந்நாட்டிற்கு ஏற்றவாறு அமைத்துள்ள குடிசைத் தொழில்கள் பல இருக்கின்றன. அவற்றைப்பற்றிச் சிறிது கவனிப்போம்.

கைத்திறமையுள்ள தொழிலாளர்கள் தனித்தோ, சிலர் சேர்ந்தோ சில தொழில்களைச் செய்யலாம். அவ்

வாறு செய்வதனல் நாட்டின் தொழிலும் பெருகும். அவர்களும் பிழைப்பதற்கு வழியுண்டாகும். அத்தகைய தொழில்கள் சில; மர வேலை செய்தல், நகை செய்தல், நார் எடுத்துக் கயிறு திரித்தல், பிரஷ் செய்தல், கூடை முடைதல், பாய் பின்னுதல், தேன் எடுத்தல், நூல் நூற்றல், பொம்மைகள் செய்தல் முதலியனவாகும். இவற்றைச் சிலர் சேர்ந்து செய்து விற்பதனல் அதன் மூலம் உண்டாகும் பொருள்களைக்கொண்டு அவர்கள் பிழைக்கலாம்.




மேலே சொல்லப்பட்ட பல தொழில்களில் இளைஞர்கள் ஏதேனும் ஒன்றைத் தெரிந்துகொள்ளுதல் அவர்களுக்கு நல்லது. ஏனென்றல் அவர்கள் வேறு எந்தத் துறையில் சென்று உத்தியோகம் செய்தாலும், அல்லது உழவுத் தொழிலை மேற்கொண்டாலும் தமக்கென்று

தனித்திறமை வாய்ந்த தொழில் ஒன்றைத் தெரிந் திருப்பின் என்றும் சோம்பலில்லா வாழ்வு நடத்தவும், பொருள் மிகுதியாகத் தேடவும் எளிதாகும். ஆதலின் இளைஞர்கள் ஏதாவது ஒரு தொழிலில் தங்களைத் திறமை யுள்ளவர்களாக்கிக் கொள்ளல் மிக மிக அவசியமான தாகும். பள்ளிக்கூடங்களில் சிறுவர்களுக்குக் கைத் தொழிற் கல்வி மேலே சொல்லப்பட்ட நோக்கத்துடன் தான் போதிக்கப்படுகிறது. ஆங்காங்கு எந்தெந்தத் தொழில்கள் கற்றுக்கொடுக்கப் படுகின்றனவோ அவற்றை மாணவர்கள் நன்குகப் பயின்று, திறமையுள்ள வர்களாக விளங்க வேண்டும்.

களிமண்ணைக் கொண்டு பொம்மைகள் செய்தல், அவற்றிற்குப் பல வர்ணங்களைப் பூசுதல், ஒட்டுப்பலகை (ப்ளைவுட்) என்ற பலகைகளைக் கொண்டு விளை யாட்டுப் பொருள்களான குதிரை, யானை, பூனை, மாடு, வண்டி முதலிய பொருள்கள் தயாரித்தல் போன்ற பல பயனுள்ள கைத்தொழில்களை பல இடங்களில் கற்றுக்கொடுக்கின்றனர். இவை சிறுவர்கள் கற்றுக் கொள்வதற்கும் எளிதாகும். எப்பொழுதும் பயன்படு வனவுமாகும். சிறு சிறு கைத்தொழில்களை முயற்சியுடன் செய்ய விரும்புபவரே பிற்காலத்தில் பெரிய தொழில் களையும் செய்யும் பெரு முயற்சியுடையவராவர்.

'அரும்பும் வேர்வை உதிர்த்துப் புவிமேல்
ஆயிரம் தொழில்கள் செய்திடு வீரே'

என்று கூறும் பாரதியார், இன்னின்ன தொழில்களைச் செய்யவேண்டு மென்று குறிப்பிட்டு இந்நாட்டு மக்கள் இன்ப வாழ்வு நடத்த வழிகாட்டியுள்ளார். அத்தொழில்

களையும், நாட்டுக்குத் தேவையான பயனுள்ள தொழில்களையும் நாம் செய்வோம். 'பாருக்குள்ளே நல்ல நாடு நம் பாரத நாடு' என்று எல்லோரும் புகழுமாறு செய்திடுவோம். தொழில் பெருகினல் மக்கள் வாழ்வு நலமடையும் : மக்கள் நலமடைந்தால் நாடு முன்னேறும்; நாடு முன்னேற்றம் அடைந்தால் நாட்டின் புகழ் நாற்றிசையிலும் பரவும். அதன் மூலம் அனைவரும் சிறப்புப் பெற்றுச் செம்மையாக வாழலாம். ஆதலினல் 'கைத்தொழில் வளர்க' என்று நாம் வாழ்த்துவதோடு நாமும் அத்துறையில் முயற்சி செய்வோம்.

---

**அருஞ்சொற் பொருள்:** *வாணிகப் பெருக்கம் - வியாபார மிகுதி ; பொறி - இயந்திரம் ; அரும்பும் - உண்டாகும் ; உதிர்த்து - சிந்தி.*

### வினுக்கள்

1. *ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்குக் காரணமாய் இருப்பவை எவை? எவ்வாறு?*
2. *கைத்தொழிலை எத்தனை வகைகளாகப் பிரிக்கலாம் ?*
3. *இயந்திரத்தின் மூலம் தொழில் நடத்துவதால் உண்டாகும் நன்மைகள் எவை ?*
4. *இயந்திரத்தின் மூலமும், கையினுலும் செய்யப் படும் தொழிலில் உள்ள வேற்றுமை என்ன*

5. குடிசைக் கைத்தொழில்கள் சிலவற்றைக் குறிப்பிட்டு நீ விரும்புவது எது என்று எழுது.

5. பள்ளிக்கூடங்களில் கைத்தொழிற் கல்வி போதிக்கப்படுவதின் நோக்கம் என்ன?

7. கைத்தொழில் வளர்ச்சியினுல் உண்டாகும் நன்மைகள் யாவை?

## பயிற்சிகள்

1. பிரித்து எழுது: நாற்றிசை, கைத்தொழில், வாணிகப்பெருக்கம்.

2. இப்பாடத்திலிருந்து தொழிற்பெயர், இடப்பெயர் இவற்றிற்கு இரண்டிரண்டு உதாரணம் எழுதுக.

3. சிறு கைத்தொழில்களை முயற்சியுடன் செய்பவர் எதிர்காலத்தில் எதையும் செய்வதற்குத் தகுதியுள்ளவராவர் — இவ் வாக்கியத்தில் வேற்றுமை உருபுகள் உள்ள வார்த்தைகளை எடுத்தெழுதி என்ன வேற்றுமை யென்றும் எழுது.

4. செய்வோம், உடையவர், கவனிப்போம் — இவற்றை ஒருமை வினைமுற்றுக்களாக்கு.

5. இப்பாடத்திலிருந்து இரண்டு இறந்தகால வினைமுற்றுக்களும், இரண்டு நிகழ்கால வினைமுற்றுக்களும் எடுத்தெழுது.

# 9. ஜப்பானியர் வாழ்க்கை

சிறுவர்களே! இவ்வுலகில் பல நாடுகள் இருக்கின் றன அல்லவா? ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொரு விதமான பழக்க வழக்கங்கள் காணப்படுகின்றன. அவற்றுள் பல நமக்குப் புதுமையாகவும், விநோதமாக வும் இருக்கின்றன. அவைகளை நாம் தெரிந்துகொள்வ தனுல் 'உலகம் பல விதம்' என்ற பழமொழியின் உண் மையை அறிந்துகொள்ளலாம். அதனுல், இப்பொழுது ஜப்பான் தேசத்து மக்களின் வாழ்க்கை முறையைத் தெரிந்துகொள்வோம்.

ஜப்பான் தேசத்தைப்பற்றி அனைவரும் கேள்விப் பட்டிருக்கலாம். சிறுவர்கள் எழுதும் பென்சில்களும், விளையாடும் சிறு சிறு விளையாட்டுப் பொம்மைகளும் பெரும்பாலும் ஜப்பான் தேசத்தில் செய்யப்பட்டவை யாகும். சோம்பல் சிறிதும் இன்றி எப்பொழுதும் ஏதே னும் பயனுள்ள செயல்களையே செய்துகொண்டிருக்கும் மக்கள் நிறைந்த தேசம் ஜப்பான் ஆகும். அது ஆசியாக் கண்டத்தின் கிழக்குத் திசையில் பசிபிக் கடலில் இருக்கின்றது. ஜப்பான், நான்கு பெரிய தீவுகளையும், பல சிறிய தீவுகளையும் கொண்ட தேசமாகும். அதன் தலைநகரம் டோக்கியோ என்னும் பெயருடைய பெரிய நகரமாகும். அந்நகரம் இவ்வுலகில் உள்ள பெரிய நகரங் களுள் மூன்ருவதாகும். ஜப்பான் தேசத்தின் அரசாங்கம் அநத நகரத்தில் இருந்துதான் நடைபெற்று வருகிறது. ப்பானியர் தங்கள் அரசரையே கடவுளாகக் கருதி வழிபடும் தன்மை வாய்ந்தவர்.

ஜப்பானில் மக்கள் தாங்கள் வசிக்கும் வீடுகளை மரத்தாலேயே கட்டுவர். ஏனென்றால் அங்கே அடிக்கடி பூகம்பமும், சூறுவளிக் காற்றும் ஏற்பட்டுப் பெரும் துன்பத்தை உண்டாக்கும். வீடுகள் இடிந்து விழும்



அதனால் அவர்கள் தங்கள் வீடுகளைக் கல்லால் கட்டாமல் மரத்தாலேயே செய்கின்றனர். அவ்வீடுகள் பார்ப்பதற்கு மிகவும் எளியனவாகவும், அழகாகவும் காணப்படும். வீட்டின் ஜன்னல்களுக்கு அவர்கள் கண்ணாடிக்குப் பதிலாகத் தடித்த காகிதத்தையே பயன்படுத்

துவர். ஜப்பானியர் வீடுகளில் நாற்காலி, கட்டில் இவைகள் இரா. அவற்றிற்குப் பதிலாகக் கம்பளங்கள் விரிக்கப்பட்டிருக்கும். அவர்கள் தங்கள் வீட்டிற்குள் காலில் செருப்புடன் செல்லமாட்டார்கள். ஜப்பான் தேசத்திலுள்ள ஆலயம் ஒன்றின் படம் முன்பக்கத்தில் இருக்கிறது. அதன் அமைப்பு எவ்வளவு அழகாக இருக்கிறது பாருங்கள்.

ஜப்பானியர்களுடைய முக்கியமான உணவுப் பொருள்கள் அரிசியும் மீனும் ஆகும். அவர்கள் தம் ஆகாரத்தை மிகச் சூடாகவும் சாப்பிட மாட்டார்கள். நன்ருக ஆறவைத்தும் சாப்பிடமாட்டார்கள். அவர்கள் உணவில் இனிப்பும் காரமும் அதிகமாக இரா. அவர்களுக்கு மிகவும் விருப்பமான பானம் தேநீரே யாகும். ஜப்பானியர்களின் தேசீய பானம் தேநீர்தான். அவர்கள் குடிக்கும் தேநீரில் சர்க்கரையும் பாலும் சேர்க்காமல் வெறும் தேத்தண்ணீரையே பருகுவர். அந்நாட்டுப் பெண்கள் தேநீர் தயாரிப்பதைச் சிறந்த கலையாகக் கருதுகின்றனர். அதனுல் அவர்கள் தயாரிக்கும் தேநீர் அந்நாட்டாருக்கு மிகவும் இனிய பானமாக இருக்கின்றது.

ஜப்பானியர் கைத்தொழிலில் மிகவும் சிறந்தவர்கள் அரிய வேலைப்பாடும் அழகும் உள்ள பொருள்களைத் தயாரிப்பதில் அவர்கள் ஆர்வம் உடையவர்கள். எப்பொருளையும் வீணுக்கும் பழக்கம் அவர்களிடம் கிடையாது. தங்களுக்குக் கிடைக்கும் அழகிய பொருள்களை அவர்கள் தம் குடும்பச் சொத்தாகச் சேர்த்து வைத்து மகிழ்வர். அவர்கள் மீன்பிடிக்கும் தொழிலில் மிகவும் திறமை பெற்றவர்கள்.

ஜப்பானியர்களிடம் காணப்படும் விநோத வழக்கங்கள் பலவற்றுள் அவர்கள் வெள்ளை ஆடையைத் துக்க காலங்களில் அணிவதும் ஒன்று. வெண்மை நிற ஆடையைத் துக்கத்தின் அறிகுறியாக அவர்கள் கொண்டுள்ளனர். அவர்களுடைய திருமணக் காலங்களில் மணமகளுக்கு வெள்ளை நிற ஆடையையே உடுத்துவார்களாம். ஏனென்றால், மணமகள் பெற்றோர்களை விட்டுப் பிரிந்து செல்வதனால் அது ஒரு துக்கமான நிகழ்ச்சி என்று அவர்கள் நினைக்கின்றனர்.



ஜப்பான் தேசத்துப் பெண்கள் தங்கள் வீட்டிற்கு வரும் விருந்தினர்களை வரவேற்கும் முறை ஒரு தனிச் சிறப்பு வாய்ந்தது. விருந்தினர் தம் வீட்டிற்குள் வரும் போது கீழே விழுந்து வணங்குவர். விருந்தினரும் பதிலுக்குக் கீழே விழுந்து வணங்குவர். இம்முறை ஒரு புதிய முறையாகும்.

ஜப்பானியர் பேசும் மொழி ஜப்பான் மொழியாகும். அது படிப்பதற்கு மிகவும் கடினமான மொழியாகும். அவர்கள் எழுதும்பொழுது சீன எழுத்துக்களையே உப யோகிக்கின்றனர். அவ்வெழுத்துக்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு சித்திரம் போல் காணப்படும். அதனுல் அதை எழுதுவது மிகவும் கடினமாகும். அவர்கள் எழுதுவது நமக்கு ஒரு புதுமையாக உள்ளது. ஏனென் ருல் அவர்கள் எழுத்துக்களை ஒன்றன் கீழ் ஒன்ருக எழுதுவார்கள். அதாவது புத்தகத்தில் வரிகள் மேலிருந்து கீழ்நோக்கிற் செல்லும். அன்றியும் அவர்கள் எப்பொழு தும் கடைசிப் பக்கத்திலிருந்தே எழுத ஆரம்பிப்பார்கள்.

ஜப்பானில் கோடைக் காலத்தில் அதிக வெப்ப மாகவும், குளிர் காலத்தில் அதிகக் குளிராகவும் இருக்கும். குளிர் மிகுதியாக இருக்கும்போது நெருப்புச் சட்டிகளை அருகில் வைத்துக்கொண்டு குளிர் காய் வார்கள்.

ஜப்பான் தேசத்துப் பெண்மணிகள், தங்கள் வீடு களை மிக அழகாகவும் சுத்தமாகவும் வைத்துக்கொள்வர். மலர்கள் கட்டுவதிலும், காகிதப் பூவேலை செய்வதிலும், வீடுகளை அலங்காரம் செய்வதிலும், குடும்பம் நடத்து வதிலும், கைத்தொழில்கள் பல செய்வதிலும் சிறந்தவர் களாக விளங்குகின்றனர். இத்தகைய ஜப்பான் தேசத்து மக்கள் இணையிலா நாட்டுப்பற்றும் வீர உணர்ச்சியும் கொண்டு விளங்குகின்றனர்.

பல நாடுகளைப் பற்றியும் இளைஞர்கள் தெரிந்து கொள்ள முயலுதல், படிப்பின் முக்கியமான நோக்கங் களுள் ஒன்ருகும். ஆதலின், பிற நாடுகளைப்பற்றிய செய்திகளைத் தெரிந்துகொள்ளுதல் நல்லதாகும்.

அருஞ்சொற் பொருள் : விநோதம் - ஆச்சரியம் ; சூறு வளி - புயல் ; அறிகுறி - அடையாளம்.

## வினாக்கள்

1. ஜப்பான் தேசம் எங்கே இருக்கின்றது ? அது எவ்வாறு உள்ளது ? அதன் தலைநகரம் என்ன ? அதன் பெருமை யாது ?

2. ஜப்பானியர் தங்கள் வீடுகளை எவ்வாறு கட்டுகின்றனர் ? காரணம் என்ன ?

3. ஜாப்பானியர்களுடைய முக்கியமான ஆகாரப் பொருள்களும் பானமும் எவை ? அவற்றை எவ்வெவ்வாறு சாப்பிடுகின்றனர் ?

4. ஜப்பானியர் தேநீர் அருந்துவதற்கும், நம் நாட்டார் அருந்துவதற்கும் உள்ள வேறுபாடு என்ன ?

5. ஜப்பானியரிடம் காணப்படும் விநோத வழக்கம் ஒன்றை எழுது.

6. ஜப்பானியர் பேசும் மொழி எது ? அதை எழுதுவது ஒரு புதுமையாக இருக்கிறது. ஏன் ?

7. ஜப்பானியப் பெண்களின் சிறப்பை எழுது.

## பயிற்சி

1. எப்பொழுதும் பயனுள்ள செயல்களை ஜப்பானியர் செய்வர் — இவ்வாக்கியத்தில் உள்ள எழுவாய், பயனிலை, செயப்படுபொருள்களை எழுது.

2. அதன் தலைநகரம் டோக்கியோ என்னும் பெரிய நகரம் ஆகும் — இவ்வாக்கியத்தில் உள்ள பெயர்ச் சொற்களை மட்டும் எடுத்துக் காட்டு.

3. சேர்த்து எழுது :— நாடு + மக்கள் ; குடும்பம் + சொத்து ; குளிர் + காலம் ; கிழக்கு + கரை.

4. அவர்கள் ஆகாரத்தை மிகச் சூடாகவும் சாப்பிடமாட்டார்கள் ; மிக ஆற வைத்தும் சாப்பிடமாட்டார்கள் — ஒரே வாக்கியமாக மாற்றி எழுது.

5. மணம் மனம், விளை விலை, களம் கலம், ஒளி ஒலி } இவற்றின் வேறுபாடு விளங்க வாக்கியத்தில் அமைத்து எழுது.

| | |
|---|---|
| மணம் | மனம் |
| விளை | விலை |
| களம் | கலம் |
| ஒளி | ஒலி |

6. யாது, யானை, எங்கே, எண்ணம், எப்படி, நானோ, ஏணி — இவற்றில் வினாப்பொருளில் வந்துள்ள சொற்களை மட்டும் எடுத்தெழுது.

# 10. உடற் பயிற்சி

மாணவர்களே! நாம் நல்ல உடலுடன், நோய் அற்று இருந்தால்தான், பிற்காலத்தில் இன்பமுடன் வாழ முடியும். 'நோய் அற்ற வாழ்வே குறைவற்ற செலவம்' என்று நமது முன்னோர்கள் சொல்லி யிருக்கிறார்கள். எனவே அப்படிப்பட்ட 'நோயற்ற வாழ்வு' பெற நாம் ஒவ்வொருவரும் உடற்பயிற்சி செய்யவேண்டும். இதுவு மன்றி, 'சுவரை வைத்தே சித்திரம் வரைதல் வேண்டும்' என்னும் பழமொழியும் உடற்பயிற்சியின் அவசியத்தை நன்கு விளக்குகின்றது. இப்பயிற்சியினால் மக்கள் அடையும் நன்மைகள் பல. முக்கியமாக 'சோம்பல்' என்னும் கொடிய அரக்கனை அது நம்மிடமிருந்து ஒழிக்கும். அது ஒழிந்தால் நமக்கு நேரிடும் பல துன்பங்களிட மிருந்து நாம் விடுபடலாம்.


நமது உடலை ஓர் இயந்திரத்திற்கு ஒப்பிடலாம். இயந்திரம் தொழிலின்றிப் பல நாள் இருந்தால் எங்ஙனம் துருப்பிடித்து அவ்வியந்திரம் உபயோகப்படாமல் போகிறதோ அதுபோலவே நமது உடலும், 'உடற்பயிற்சி' இல்லாவிட்டால் பலவித நோய்கள் அடைந்து அழிந்து விடும். உடல் வலிமை குறைந்தால் மனவலிமையும் குறைந்துவிடும். உடல் நல்ல நிலையில் இருக்கவேண்டு மானால் உடற்பயிற்சி செய்வதுடன் நமது மனத்தின் தூய்மையையும் பாதுகாக்க வேண்டும்.

மனத்தின் தூய்மை என்றால், நல்ல எண்ணங் களையே எண்ணுதல், பிறருக்குத் துன்பம் தராத வகையிலும் நம் கடமைகளைச் செய்தல், எல்லோரிடத்தும்

உண்மை கூறி, இன்சொல் பேசி அன்புடன் நடந்து பிறருக்கு உதவும் மனப்பான்மையுடன் நடத்தல் முதலிய நற்பழக்கங்கள் நம்மிடம் வளரவேண்டும். அவ்வாறு அன்றித் தீயன பேசி, தீயன செய்து, தீயனவே தினமும் எண்ணி வந்தால் நாம் செய்வதும், நினைப்பதும் நமக்கே பிறகு துன்பத்தைக் கொடுக்கும். எங்ஙனமெனில், நாம் பிறர்மேல் கோபம் கொண்டு உணர்ச்சி வயப்பட்டு, அவர்களுக்குத் தீங்கு செய்ய நினைக்கும்பொழுது உடல் நரம்புகள் முறுக்கு ஏறித் தன் வசம் இழந்துவிடுகின்றது. இவ்வாறு அடிக்கடி நிகழ்வதால் உடலின் உள் உறுப்புக்கள் தன் நிலை கெட்டு இயங்கும் சக்தி அற்று விடுகின்றன. இது முடிவில் உடலின் நல்ல நிலையைப் பாதிப்பதாகவே முடியும். இதனால்தான் நமது பெரியோர்கள் 'கனவிலும் பிறருக்குத் தீங்கு செய்ய நினைக்காதே' என்றார்கள்.

இனி நாம் உடற்பயிற்சி முறைகளைக் கவனிப்போம். இது பல வகைப்படும். தண்டால், படகு தள்ளுதல், நீந்துதல், தாண்டுதல், நடத்தல், ஓடுதல், பந்து விளையாடுதல் முதலியன உடற்பயிற்சியின் வகையைச் சேர்ந்தனவாம். காலையும் மாலையும் குறிப்பிட்ட தூரம் ஓடிப்பழகுதலும், நடத்தலும் எவர்க்கும் உரிய எளிய பயிற்சிகளாம். நாம் உள் இழுக்கும் காற்றைச் சில நிமிட நேரம் நிறுத்தி வைத்து மூச்சை அடக்குதலும் உடற்பயிற்சியைச் சேர்ந்ததுதான். இவ்வாறு செய்வதனால் காற்றுப்பைகள் விரிவடைந்து அதிகமான 'பிராணவாயுவை' உட்கொள்ளும். அதனால், இரத்தம் சுத்தமடைந்து தேக நலன் பாதுகாக்கப்படும். ஆசனங்கள் செய்வதும் இவ்வகையைச் சேர்ந்ததே.

இவையெல்லாம் கீழ் நாட்டுப் பயிற்சி முறைகளாகும். 'காற்பந்து', 'கிரிக்கெட்', 'ரிங் டென்னிஸ்,' 'ஹாக்கி' முதலிய விளையாட்டுக்கள் மேல் நாட்டைச் சார்ந்தன. மேலைநாட்டுப் பயிற்சியைவிட நம் நாட்டுப் பயிற்சியே அதிக நன்மை பயக்கும். அதிகச் செலவும் பிடிக்காது.



உடற்பயிற்சி செய்வதிலும் ஒழுங்கு, அளவு முதலியன வேண்டும். குறித்த நேரத்தில், குறித்த அளவு செய்யவேண்டும். இல்லையெனில் சோர்வு அதிகமாகி உடல் நலன் பாதிக்கப்படும். பொதுவாகக் காலையிலும்

மாலையிலும் உடற்பயிற்சி செய்தல் வேண்டும். உடற் பயிற்சியைப் பரந்த இடங்களிலும், காற்றோட்டமான வெளிச்சமுள்ள இடங்களிலும் செய்தல் வேண்டும். வயிறு புடைக்க உண்டுவிட்டுப் பிற்கு பயிற்சி செய்யக் கூடாது. ஒவ்வொருவரும் தமது தேக நிலைக்கு ஏற்ப, உடற்பயிற்சி செய்யவேண்டும். உடற்பயிற்சி செய்து சிறிது நேரம் கழிந்தபிறகு நீராடவேண்டும்.

இவ்வாறு நாள்தோறும் ஒழுங்காக உடற்பயிற்சி செய்து வந்தால், உடலில் இருக்கும் கெட்ட நீர் வியர்வை மூலமாக வெளிவரும். கரியமிலவாயு போன்ற விஷப் பொருள்கள் தேகத்தை விட்டு நீங்கும். கொழுப் புத் தசையைக் கரையச் செய்யும். உடல் திண்மை பெற்று மன அமைதியும் ஏற்படும். பசி, ஜீரணம் ஞாபக சக்தி முதலியவற்றை உண்டாக்கும். மலச்சிக்கலைத் தடுக்கும்.

இவையன்றி வீமன் போல் உடல் வன்மையும், முருகன்போல் அழகும் பெறச் செய்யும். எனவே, நாம் உடற்பயிற்சி செய்வது மிகவும் அவசியம் என்பது தெரி கிறதல்லவா ?

---

**அருஞ்சொற் பொருள் :** *தீயன - கெட்ட செயல்கள் ; பாதிக்கப்படும் - கெடும் ; வயிறு புடைக்க - வயிறு நிறைய ; திண்மை - வலிமை.*

## வினாக்கள்

1. *உடற்பயிற்சியின் அவசியம் யாது ?*
2. *நமது உடலை எதற்கு ஒப்பிடலாம் ? விளக்கு.*

3. நாம் நல்லவற்றையே எண்ண வேண்டும்— ஏன்?

4. உடற்பயிற்சியின் வகைகள் யாவை ?

5. உடற்பயிற்சியினுல் உண்டாகும் நன்மைகள் யாவை ?

## பயிற்சிகள்

1. கனி + இது = கனியிது. நீ + இங்கே வா = நீ இங்கேவா. வாழை + இலை = வாழையிலை.

இத்தொடர்களிலிருந்து இ, ஈ, ஐ என்னும் மூன்று உயிரீற்றின் முன் உயிர்வந்தால் 'ய்' என்னும் எழுத்துத் தோன்றும். இதற்கு உடன்படுமெய் என்று பெயர். மற்ற உயிர்களுக்கு முன் 'வ்' தோன்றும்.

'ஏ' என்னும் உயிரெழுத்துக்கு முன் ய், வ் இரண்டும் வரும்.

இவ்வாறு உடன்படுமெய் வந்ததற்கு இப் பாடத்திலிருந்து நான்கு உதாரணம் எழுது.

2.

| | | | |
|---|---|---|---|
| உரை | இரத்தல் | அரை | மரம் |
| உறை | இறத்தல் | அறை | மறம் |

இவற்றின் வேறுபாடு உணர்ந்து ஒவ்வொன்றையும் தனித்தனி வாக்கியத்தில் அமைத்து எழுது.

# 11. நமது தலைவர்

நம் நாடு, பல வளமும் பெற்று பல்லாண்டுகளாகச் சிறப்புடன் விளங்கும் பல நாடுகளில் ஒன்றாகும். ஆயினும் ஆங்கிலேயர்களின் ஆட்சிக்கு உட்பட்டு இரண்டு நூற்றாண்டுகளுக்கு மேலாக இந்நாடு அடிமைப் பட்டுக் கிடந்தது. அடிமை நாட்டில் அடிமைகளாக வாழ்ந்த மக்கள், அன்னியர் ஆட்சியின் கொடுமை களுக்கு ஆளாயினர். அச்சமே அவர்களது ஆசாரமாக இருந்தது. கட்டபொம்மனைப் போன்ற சிலர் தங்கள் உள்ளத்தில் தோன்றிய உணர்ச்சியின் காரணமாக அன்னியர்களை—தங்களை ஆளவந்தவர்களைத் - தங்கள் உயிரைக் கொடுத்தேனும் எதிர்க்கத் துணிந்தனர். ஆனால் பணத்திற்கும் பதவிக்கும் ஆசைப்பட்ட சிலர் தங்கள் நிலையை மறந்து நாட்டையும், நாட்டு மக்களையும் காட்டிக்கொடுத்தனர். இவ்வாறு சுயநலம் கொண்ட வர்கள், சுதந்திர வீரர்களின் உயிரையும் காட்டிக் கொடுத்தனர். இத்தகைய செயலாலும், ஆங்கிலேயர் களுடைய தந்திர முறைகளாலும் இந்நாடு முழுவதும் அவாகள் ஆட்சிக்கு உட்பட்டது.

நாளடைவில் மக்கள் உள்ளத்தில் அடிமைவாழ் வினை ஒழித்து விடுதலை பெறவேண்டும் என்ற எண்ணம் தோன்றலாயிற்று. அறிஞர் பலர் ஒன்றுகூடி அதற்கான வழிகளை ஆராயத் தலைப்பட்டனர். அதன் பயனாகவே **காங்கிரஸ்பேரவை இந்நாட்டில் உதயமாயிற்று. திலகர், மோதிலால் நேரு, ரானடே** முதலான சுதந்திர வீரர்கள் காங்கிரஸில் சேர்ந்து பெரும்பணி ஆற்றினர். மகாத்மா



காந்தி அடிகளும் காங்கிரஸில் சேர்ந்து அரும்பணி ஆற்றத் தொடங்கினர். மக்கள் மனத்தில் புதிய உணர்ச்சியும், உற்சாகமும் தோன்றின. ஒற்றுமை எண்ணம் பரவிற்று. வேற்றுமையை மறந்தனர். தங்களுக்குள் உள்ள பல வேறுபாடுகளையும் அறவே ஒழித்து நாட்டின் விடுதலை ஒன்றையே தங்கள் குறிக்கோளாகக் கொண்டு மகாத்மா காந்தி அடிகளின் தலைமையில் ஆங்கிலேயரை எதிர்க்க இந்தியர் திரண்டனர்.

காந்தி அடிகள் உண்மை, அஹிம்ஸை என்னும் இரண்டு பெரும் படைகளைக் கொண்டு, கத்தியின்றி இரத்தம் சிந்தாமல் ஆங்கிலேயரை எதிர்த்துச் சுதந்திர யுத்தம் செய்யத் தொடங்கினர். அவருக்குப் படைத் தலைவர்களாகப் பலர் சேர்ந்தனர், தலைவர் கட்டளையை அப்படியே ஏற்று அதன்படி நடந்தனர். அவர்களுள் முக்கியமாகக் குறிப்பிடத் தக்கவர் பலருள் மோதிலால் நேரு, ஜவஹர்லால் நேரு, இராஜேந்திர பிரசாத், இராஜகோபாலாச்சாரியார் முதலானவர்கள் சிறந்தவர்களாவார்கள். அவர்கள் ஒவ்வொருவரைப் பற்றியும் இந் நாட்டு மாணவர்கள் நன்றுகத் தெரிந்துகொள்ள வேண்டுவது மிகவும் முக்கியமாகும், அவர்களில் இப்பொழுது நம் இந்தியக் குடியரசின் இணையிலாத் தலைவராக விளங்கும் பெரியார் பாபு இராஜேந்திர பிரசாத் அவர்களைப் பற்றி இப்பாடத்தில் தெரிந்துகொள்வோம்.

இந்திய மாகாணங்களில்(இராஜ்யங்களில்) ஒன்றுக விளங்கும் பெருமை மிக்க பீகார் மாகாணத்தில் பிறந்தவர் நம் தலைவர் இராஜேந்திரர். அவருடைய தந்தையார் மகாதேவ சகாயர் என்பவராவர். அவர் மருத்து

வத்துறையில் தேர்ச்சி பெற்றவர் ; பாரசீக மொழியில் பெரும் புலவர் ; நற்குணம் பலவும் ஒருங்கே அமையப் பெற்ற நல்லார். இப்பெரியார் ஈன்ற ஐந்து மக்களுள் இளையவராக இராஜேந்திரர் 1884–ஆம் ஆண்டு தோன்றினர். இளமையில் கல்வி கற்று, கல்லூரிப் படிப்பை முடுத்து எம். ஏ., பி. எல் பட்டம் பெற்ருர், கல்வி அறிவில் சிறந்து விளங்கிய அவர் உடற்பயிற்சியி லும் ஊக்கங் காட்டினர். அதனால் இளமையில் நல்லுடல் பெற்று நல்லறிவு பெறுவதற்குத் தம்மைத் தகுதி யுள்ளவராக்கிக் கொண்டார்.

அவர் இளம் பருவத்திலே தம் மாகாண மாணவர் களின் நலங்கருதி 'பீகார் மாணவர் சங்கம்' என்று ஒரு சங்கத்தை ஏற்படுத்தி அதன் மூலமாகத் தம்மைப் போன்ற இளைஞர்கள் சொல்லாற்றல், நல்லறிவு, ஒற்றுமை யுணர்வு முதலியன பெறுமாறு செய்தார், இந்திய மக்கள் ஒற்றுமை யுணர்ச்சி மிகுந்து ஆங்கிலேயர்களுக்கு விரோதமாக இருப்பதைக் கண்டு அப்பொழுது அரசப் பிரதிநிதியாக இருந்த லார்டு கர்ஸான் என்பவர் 1905–ஆம் ஆண்டு வங்காள மாகாணத்தை இரண் டாகப் பிரித்தார். அப்பொழுது அப்பிரிவினையை எதிர்த்துப் பெருங் கிளர்ச்சி நடந்தது. அவ்வியக்கத்தில் இராஜேந்திரர் பெரும் பங்கு கொண்டு உழைத்தார்.

தமது குடும்பத்துக்கு வேண்டிய பொருள் வருவாய் தேட விரும்பிய அவர் முதலில் கல்லூரிப் பேராசிரி யராகவும், பிறகு சட்டக் கல்லூரிப் பேராசிரியராகவும் இருந்தார். இரண்டிடங்களிலும் மாணவர் மகிழ, தெளி வாகவும் விளக்கமாகவும் பாடங்களைப் போதித்து வந் தார். அதன் பிறகு வழக்கறிஞர் தொழிலை மேற்கொண்

டார். தம் சொற்றிறமையினாலும், நன்னடக்கையினாலும் அத் தொழிலில் பெரும் புகழ் பெற்றார். செல்வமும் மிகுதி யாகப் பெற்றார். பேரும் புகழும் பெற்ற இராஜேந்திரர் பெருஞ் சிறப்புடன் வாழ்ந்து வரும்போது, பீகார் மாகா ணத்தில் ஒரு ஜில்லாவான **சம்பரான்** பகுதியில் விவசாயிகளுக்கு ஆங்கிலேய முதலாளிகளால் கொடு மைகள் பல இழைக்கப்பட்டன. ஏழை விவசாயிகளுக் காகப பலர் மனமிரங்கி வாதாடினர். தென் ஆப்பிரிக் காவில் உரிமைப் போர் நடத்தி வெற்றியுடன் திரும்பிய மகாத்மா காந்தி அடிகள் அப்பொழுதுதான் இந்தியா திரும்பினார். சம்பரான் கொடுமைகளைக் கேள்வியுற்று அங்குச் சென்றார். ஆங்கில அரசாங்கம் அவருக்குத் தடையுத்தரவு போட்டுத் தடுத்தது. அப்பொழுது தலைவர் இராஜேந்திரர் அங்குச் சென்று, சம்பரான் விவ சாயிகளுக்கு நன்மை ஏற்படும்படியான செயல்களைச் செய்து புகழ்பெற்றார். அப்பொழுதுதான் இராஜேந்திரர் மகாத்மா காந்தி அடிகளைக் கண்டார். அவரைக் கண்டது முதல் இராஜேந்திரருக்கு ஒரு தனி உணர்ச்சி ஏற்பட்டது. அன்று முதல் அவரையே தமது குருவாகக் கொண்டு, அவர் கொள்கைகளில் சிறிதும் வழுவாமல் நடந்து வரலானார்.

இராஜேந்திரர், ஆங்கிலேயர்கள் இந்நாட்டில் இழைத்த அநீதியான செயல்கள் பலவற்றையும் வன்மை யாகக் கண்டித்தார். தமது பேச்சுத் திறமையினால் ஆங்கிலேயர்கள் செய்யும் கொடுஞ் செயல்களை எடுத்து விளக்கினார். காந்தி அடிகள் தொடங்கிய ஒத்துழை யாமை இயக்கத்தில் ஈடுபட்டு உழைத்தார். உப்பு சத்தியாக்கிரகத்தைக் காந்தி அடிகள் ஆரம்பித்த

பொழுது இராஜேந்திரரும் அதில் கலந்து கொண்டார். இவ்வாறு பல செயல்கள் செய்து நான்கு முறை சிறைத் தண்டனை பெற்றார். அப்பொழுது சிறைத் தண்டனை மிகவும் கடுமையானதாக இருந்தது. அத் தண்டனைகளைப் பெற்று மகிழ்ச்சியுடன் சிறையில் சில ஆண்டுகள் தங்கியிருந்தார். ஏன்? நம் நாடு விடுதலை பெற்று உய்வதற்காகவே.

உரிமைப் போரில் ஈடுபட்ட இராஜேந்திரர் எப்பொழுதும் இளகிய மனமும் இனிய முகமும் உடையவர். ஏழை மக்கள் படும் இன்னல்களைக் கண்டால் மனம் உருகுவார். அவருடைய அருள் நிறைந்த உள்ளத்தின் தன்மையை மக்கள் அறிய ஒரு வாய்ப்பு ஏற்பட்டது. பெருமை பெற்ற பீகாரில் 1934–ல் பெரும் பூகம்பம் ஏற்பட்டது. முப்பதாயிரம் சதுரமைல் பரப்புள்ள இடம் நில நடுக்கத்தால் பாழாயிற்று. பதினாயிரக் கணக்கான மக்கள் உயிரிழந்தனர். இலட்சக் கணக்கான வீடுகள் நாசமடைந்தன. கோடிக்கணக்கான ரூபாய் நஷ்டமாயிற்று. இச் செய்தியைக் கேட்ட எல்லோரும் ஏங்கினர்; கலங்கினர். ஆயினும் என்ன செய்வது? இயற்கையின் திருவிளையாடலால் அப்படி நடந்தது. இன்னல் படும் பீகார் மக்களுக்கு இன்னுரை கூறவும், ஏற்றன செய்யவும் இராஜேந்திரரால் தான் முடியும் என்ற எண்ணம் எல்லோருக்கும் உண்டாயிற்று. அப்பொழுது இராஜேந்திரர் சிறையில் இருந்தார். உடனே அவர் விடுதலை செய்யப்பெற்றார். விடுதலை பெற்ற இராஜேந்திரர் தம் உடல் நிலையையும் கவனியாது நாடு முழுவதும் சுற்றினார். நிதி திரட்டினார். கோடிக்கணக்கான ரூபாயைக் கொண்டு வந்தார்.

தொண்டர்களைத் திரட்டினார். இயற்கையின் விளைவான அழிவு வேலையைக் கண்டு உள்ளங் கலங்கிய பலரும் அதிசயிக்கும்படியான ஆக்கவேலைகளை மேற்கொண்டார். நில நடுக்கத்தால் அழிவுற்ற பீகார், நல்லவர் முயற்சியால் நன்ருகச் சீர்திருத்தம் செய்யப்பெற்றது. இந்த ஒரு தொண்டே அவருக்கு என்றும் அழியாப் புகழையும், மதிப்பையும் தந்தது. அன்பு நிறைந்த முகமும், அருள் நிறைந்த கண்ணும் உடைய அவர் இன்றும் ஏழைகளின் தோழராய் விளங்குகிருர் என்ருல் அது அவருடைய குணச் சிறப்பைக் காட்டுகிறது அல்லவா ?

நாட்டின் விடுதலை ஒன்றையே நோக்கமாகக் கொண்டு உழைத்த பெரியார் இராஜேந்திரர், பல பதவிகளை வகித்துப் பணியாற்றியுள்ளார். பீகார் மாகாணத்தின் தலை நகரான பாடலிபுரத்தின் (பாட்ஞவின்) தலைவராக இருந்தார். காங்கிரஸ் பேரவையின் செயலாளராக இரண்டுமுறை இருந்தார். காங்கிரஸின் தலைவராக இரண்டு முறை இருந்தார். இந்திய அரசியல் நிர்ணய சபையின் தலைவராகத் திகழ்ந்தார். இந்திய நாட்டின் உணவு மந்திரியாக இருந்து தமக்குற்ற கடமைகளைச் செய்தார். மேலும் பல பதவிகளைப் பெற்றுப் பணியாற்றி யுள்ளார்.

1947–ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் 15–ஆம் நாள் இந்தியா இரண்டாகப் பிரிக்கப்பட்டுச் சுதந்திரம் வழங்கப்பட்டது. உடல், பொருள், ஆவி இம்மூன்றையும் நாட்டிற்கு அர்ப்பணித்த தியாகிகளின் கனவு பலித்தது. அன்று முதல் இந்தியாவிற்கு வேண்டிய புதிய அரசியல்

தயாரிக்கும் அரசியல் நிர்ணய சபையின் தலைவராக இருந்தார். 1950-ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 26-ஆம் நாள் இந்தியா ஒரு குடியரசு நாடு என்று உலகிற்கு அறிவிக்கப்பட்டது. அக்குடியரசின் தலைவ ராக அனைவரும் போற்றும் பாபு இராஜேந்திர பிரசாத் தேர்ந்தெடுக்கப்பட்டார். மகாத்மா காந்தி அடிகளின் கொள்கைகளைச் சிறிதும் வழுவாது கடைப்பிடித்து வருபவரும், ஜவஹர்லால் நேரு முதலியவர்களால் பாராட்டப்படுபவரும், விவசாயிகளின் நண்பரும், ஏழை களின் அன்பரும், கற்றவர்களின் தலைவரும், கருணையின் இருப்பிடமுமான இராஜேந்திரர் இந்தியாவின் இணை யில்லாத் தலைவரானார்.

குடியரசின் தலைவராக அவர் பதவி ஏற்றபோது அவர் ஆற்றிய சொற்பொழிவு மிக உருக்கம் வாய்ந்தது. 'சுதந்திரம் பெறுதற்கு வழிகாட்டிய இந்நாட்டின் தந்தை மகாத்மா காந்தி அடிகளாருக்கும், தியாகிகளுக்கும் எல் லாம் வல்ல இறைவனுக்கும் தம் அஞ்சலியைத் தெரி வித்துக்கொண்டு, மிகவும் பாடுபட்டுப் பெற்ற சுதந் திரத்தை நாம் நன்றாகக் காப்பாற்றிக் கொள்ளவேண் டும் என்று தொடங்கி, மதம், மொழி, பழக்க வழக்கங் களால் பலவாறு வேறுபட்டுக் கிடக்கும் அனைவர் உள் ளத்திலும் நாம் அனைவரும் இந்நாட்டு மக்கள் என்ற உணர்ச்சியை ஏற்படுத்துவதே நமது குடியரசின் நோக்க மாகும். பசியும் பிணியும், வறுமையும், அறியாமையும் இந்நாட்டில் இல்லாதபடி செய்வதே நமது நோக்கமாக இருத்தல் வேண்டும். எல்லோரும் இக்குடியரசின் பயன் முழுவதையும் அனுபவித்து இன்ப வாழ்வு நடத்த வேண்டும்' என்றார்.

இராஜேந்திரரைத் தலைவராகப் பெற்ற நாம் அவரை 'வாழ்க' 'வாழ்க' என்று வாழ்த்துவோம்.

வாழ்க குடியரசு !

---

அருஞ்சொற் பொருள் : ஆசாரம் - ஒழுக்கம் ; உதயமாயிற்று - தோன்றியது; அறவே - முழுவதும் ; திரண்டனர் - கூடினர் ; வழுவாமல் - தவறாமல் ; பேரவை - பெருஞ்சபை ; இணையில்லா - ஒப்பில்லாத ; அஞ்சலி - வணக்கம் ; நிலநடுக்கம் - பூகம்பம் ; (நில – நடுக்கம் = பூகம்பம்).

### வினாக்கள்

1. இந்தியா ஆங்கிலேயர் வசப்பட்டது எப்படி ?
2. 'காங்கிரஸ்' தோன்றியது ஏன் ? அதில் சேர்ந்து உழைத்த பெரியார்கள் யாவர் ?
3. காந்தி அடிகள் தலைமையில் முன்னின்று போர் புரிந்தவர் யாவர் ?
4. இராஜேந்திருடைய பிறப்பு வளர்ப்பினை எழுது.
5. இராஜேந்திரர் சேர்ந்துகொண்ட போராட்டங்கள் எவை ? அவற்றுள் ஒன்றைப்பற்றி எழுது.
6. பீகாரில் நிலநடுக்கத்தால் ஏற்பட்ட கொடுமைகளை எழுது.

7. இராஜேந்திரர் பூகம்பத்தால் சீரழிந்த பீகாருக்காகச் செய்தவை எவை ?
8. இராஜேந்திரர் வகித்த பதவிகள் எவை ?
9. இந்தியா எப்பொழுது விடுதலை பெற்றது ?
10. இராஜேந்திரர் குடியரசு விழாவன்று செய்த சொற்பொழிவின் கருத்துக்களைத் தெரிவி.

### பயிற்சிகள்

1. தோன்றின, கொடுத்தனர், உட்பட்டது, திரட்டினர் — இவற்றில் ஒருமை வினைமுற்றைப் பன்மை வினைமுற்றாகவும், பன்மை வினைமுற்றை ஒருமை வினைமுற்றாகவும் மாற்று.
2. வாக்கியத்தில் அமைத்து எழுது .—வழுவாமல், கண்டித்தார், திரட்டினர், பணியாற்றி.
3. இராஜேந்திரர் அப்பொழுது அங்கு சென்றார். விவசாயிகளுக்கு நன்மை உண்டாகும்படியான காரியங்களைச் செய்தார்.—இவ்விரண்டு வாக்கியங்களையும் ஒரே வாக்கியமாக்கு.
4. அருள் நிறைந்த உள்ளத்தின் தன்மையை அறிய ஒரு வாய்ப்பு ஏற்பட்டது — இவ்வாக்கியத்தில் உள்ள பெயரெச்சங்களைக் காட்டு.

# 12. கடிதம் எழுதுதல்

உலகில் வாழும் மக்கள் ஒருவருக்கொருவர் தாம் வசிக்கும் இடத்திலிருந்து செய்திகளைத் தெரிவித்துக் கொள்வது அவசியமானதாகும். சென்னையில் வசிக்கும் ஒருவர் தஞ்சாவூரிலோ, டில்லியிலோ அல்லது பிற இடங்களிலோ உள்ள ஒருவருக்கு ஒரு செய்தியைத் தெரிவிக்க வேண்டுமானால் அப்பொழுது கடிதம் எழுதித் தெரிவிக்கின்றனர். இவ்வாறு கடிதம் எழுதிச் செய்திகளைத் தெரிவிப்பதன் மூலம் குறைந்த செலவில் கூடுமானவரை விரைவில் செய்திகள் பரவுகின்றன. நாம் எழுதும் கடிதங்கள் இரயில் மூலம், அல்லது ஆகாய விமானத்தின் மூலம், குறிப்பிட்ட இடத்திற்குப் போய்ச் சேருகின்றன. அவ்வாறு கடிதங்கள் நாம் குறிப்பிடும் ஒருவருக்கு விரைவில் போய்ச் சேரவேண்டுமானால் அவற்றில் நாம் எழுதும் முகவரி (விலாசம்) தெளிவாக இருக்கவேண்டும். ஆதலின் பொதுவாக நாம் கடிதம் எழுதும்போது கவனிக்க வேண்டிய சில விதிகள் இருக்கின்றன. அவற்றைத் தெரிந்துகொள்வது அனைவர்க்கும் நலம் பயப்பதாகும்.

கடிதம் எழுதுவதில் பலவகை உண்டு. அவை யாவன ;— 1. உறவினர்க்கு எழுதும் கடிதம். 2. நண்பர்களுக்கு எழுதும் கடிதம். 3. உத்தியோக சம்பந்தமான கடிதம். 4. வேண்டுகோள் கடிதம். 5. அழைப்புக் கடிதம் எனப் பலவாகும். இவ்வாறு பலவகைப் பட்ட கடிதங்களை எழுதும்பொழுது எல்லாவற்றிற்கும்

பொதுவானவை முகவரி எழுதும் விதியும், கடிதத்தின் தலைப்பில் வலது பக்கமாக எழுதுவோரின் முகவரி எழுதும் விதியுமாகும். யாருக்குக் கடிதம் எழுத வேண்டுமோ அவருடைய தகுதிக்கும், நமக்கும் அவருக்குமுள்ள தொடர்புக்கும் ஏற்றவாறு முதலில் அடக்கம் அல்லது வணக்கம் அல்லது வாழ்த்தைத் தெரிவிக்கும் தொடர்களை எழுதிப் பிறகு செய்திகளைத் தெளிவாக எழுதவேண்டும். அன்றியும் பத்தி பத்தியாகப் பிரித்து எழுதவேண்டும். கடிதத்தை முடித்த பிறகு அதன் கீழ், 'உங்கள் அன்புள்ள' அல்லது 'பணிவுள்ள' என்பன போன்ற பணிவான வார்த்தைகளை எழுதி அதற்குப் பிறகு எழுதுவோர் தம் கையெழுத்துப் போடவேண்டும்.

மேல் சொல்லப்பட்ட இம்முறைகளை அனுசரித்து எழுதப்படும் கடிதங்கள் சிறப்புள்ளனவாக இருக்கும். முகவரி எழுதும்போது முதலில் மரியாதைச் சொல்லும், பிறகு எழுதப்படுகின்றவர் பெயரும், அதன் பிறகு வீட்டின் எண், தெருவின் பெயர், தபாலாபீசின் பெயர், தாலுக்கா அல்லது ஜில்லா இவைகளும் முறையே எழுதப்படல் வேண்டும். உதாரணமாக பின்வரும் முகவரியைக் கவனியுங்கள் ;

திரு. சி. கமலக்கண்ணன்,
12, பரந்தாமன் வீதி,
காஞ்சிபுரம்,
செங்கற்பட்டு ஜில்லா.

மேலும் நாம் யாருக்குக் கடிதம் எழுதுகின்றேமோ அவர் பட்டம் பெற்றும் உத்தியோகத்திலும் இருப்பவரா யின் பெயருக்குப்பின் பட்டமும், உத்தியோகப் பெயரும் இருத்தல் வேண்டும். உதாரணமாக,

திரு. தி. அம்பலவாணன், எம். ஏ., அவர்கள்,
செயலாளர்,
தமிழ் நாடு கூட்டுறவு அலுவலகம்,
3, முத்து வீரப்பன் தெரு,
சிதம்பரம்,
தென்னர்க்காடு ஜில்லா.

இம் முகவரியைப் பாருங்கள்.

இவ்வாறு முகவரி தெளிவாக எழுதப்படும் கடி தங்கள், தபால் இலாகாவில் வேலே செய்பவருக்குச் சிரமம் இல்லாமலும், தாமதமில்லாமலும் விரைவில் போய்ச் சேரும். கடிதம் எழுதுபவர் முகவரியும் தேதியும் கடிதத்தின் மேற்பகுதியில் வலப்பக்கத்தில் இருக்க வேண்டுமென்று படித்தீர்கள் அல்லவா? அதையும் தெரிந்துகொள்ளுங்கள்.

ப. பரமசிவன் 48, நமசிவாயன் வீதி.
நாகப்பட்டினம்,
30-9-1953.

மேலே காட்டப்பட்டிருப்பது போல் எழுதவேண்டும். பிறகு யார் யாருக்கு எழுதும்போது எவ்வெப்படி முதலில் சிறப்பு மொழி தந்து எழுதுவது என்பதையும் அறிந்துகொள்ளவேண்டும். தந்தை தாய்க்கு எழுதும் போது 'என் அன்பார்ந்த தந்தை அல்லது தாயார் அவர்கட்கு' என்று ஆரம்பித்து வணக்கத்தைத் தெரிவிக்கும் முறையில் எழுதவேண்டும். பிறகு நலம் அறிவித்து நலம் அறிய விரும்பிச் செய்திகளைத் தீட்டுதல் வேண்டும்.

கடிதத்தை முடித்த பிறகு,

இப்படிக்குத்
தங்கள் அன்பு மறவாத
மகன்
**அ. தணிகைநாதன்**

இவ்வாறு எழுதவேண்டும்.

இப்பொழுது ஒரு முழுமையான கடிதத்தைப் பாருங்கள். கடிதம் எழுதுகையில் கவனிக்க வேண்டிய விதிகளைக் கருத்தில் இருத்துங்கள்.

மாதிரிக் கடிதம்

ஆ. நடராசன்,

20, இமய வரம்பன் வீதி,
மதுரை,
10-9-1953.

அன்பார்ந்த தந்தை அவர்கட்கு ;
வணக்கம்.

இங்கு அண்ணன், தங்கை, மாமா, மாமி முதலிய அனைவரும் நலம். உங்கள் நலத்தையும், என் தாயார் நலத்தையும் மற்றும் உள்ளவர்கள் நலத்தையும் அறிய விரும்புகின்றேன்.

உங்கள் கடிதம் கிடைத்தது. மகிழ்ச்சி. நாங்கள் அனைவரும் நன்ருகப் படித்துக்கொண்டு வருகிருேம். சென்ற ஆண்டுத் தேர்தலில் தமிழில் முதல்வனுகத் தேறிய காரணத்தால் எனக்கு முதற் பரிசு கிடைத்துள் ளது. ஒரு பொன் பதக்கமும், மூன்று தமிழ்ப் புத்தகங் களும் கொடுத்தார்கள். இச்செய்தி உங்கள் அனைவருக் கும் இன்பமளிக்கும் என்று கருதுகின்றேன். நானும் மற்றவர்களும் கல்வியில் கருத்தூன்றிக் கற்கின்ருேம்; எங்கள் படிப்பைப் பற்றி உங்களுக்குச் சிறிதும் கவலை வேண்டாம். இக்கடிதத்தை எங்கள் தாயாருக்கும் காண்பித்து எங்கள் வணக்கத்தையும் தெரிவிக்கவும்.

வணக்கம்.

இப்படிக்குத்
தங்களன்புள்ள,
மகன்
ஆ. நடராஜன்.

திரு. க. ஆளவந்தார் அவர்கள்
6, ஆறுமுகம் தெரு,
வேலூர்.

கடிதம் எழுதக் கற்றுக்கொள்வதும் கல்வியின் நோக்கங்களில் ஒன்ருகும். அதனுல் நீங்கள் அனைவரும் இங்கு சொல்லப்பட்ட விதிகளை மறவாது கடிதம் எழுதிப் பழகுங்கள்.

## வினுக்கள்

1. கடிதம் எழுதுவதால் உண்டாகும் நன்மை யாது ?
2. கடிதம் எழுதுவது எத்தனை வகைப்படும் ?
3. கடிதம் எழுதலில் கவனிக்க வேண்டிய விதிகளென்ன ?
4. முகவரி எழுதவேண்டிய முறை என்ன ?

## பயிற்சிகள்

1. பணமனுப்புமாறு தந்தைக்குக் கடிதம் எழுது.
2. உன் பள்ளியில்நடந்ததமிழ்ச்சங்கவிழா ஒன்றைப் பற்றி நண்பன் ஒருவனுக்குக் கடிதம் வரை.
3. தமிழ்ச் சங்க ஆண்டு விழா அழைப்புக் கடிதம் ஒன்று எழுது.
4. உன் ஆசிரியருக்கு ஒரு விடுமுறைக் கடிதம் வரை.

# 13. டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர்

தமிழர்களுடைய பெருமையை அறிவதற்குக் காரணமாக உள்ள பழம் பெரு நூல்களை எல்லாம் வெளிப்படுத்திய பெருமைவாய்ந்தவர் டாக்டர். உ. வே. சாமிநாத ஐயர் அவர்கள் ஆவார்கள். பனை ஏடுகளில் எழுதப்பட்டு ஓலைச்சுவடிகளாக இருந்த பழைய நூல்களை நாம் இப்பொழுது காணும் புத்தக வடிவமாக வெளிவரும்படி முதலில் அச்சிட்டுப் பதிப்பித்தவர் அவரே யாவர். ஓலைச் சுவடியை வைத்திருப்பவர் அச்சுவடியில் உள்ள பாடல்களைப் படித்து வந்தனரே தவிர, எல்லோரும் எப்பொழுதும் படித்து இன்புறக் கூடிய முறையில் அப்பொழுது இல்லை. அச்சு இயந்திரங்கள் தோன்றிப் பல்லாண்டுகளாகியும் தமிழில் சிறந்த சங்க இலக்கியங்களை நல்ல முறையில் வெளியிடுவார், ஒருவரும் முன் வராத அச்சமயத்தில் தமிழர்களுக்குள்ள இக்குறையை நீக்கி நிறை செய்ய சாமிநாத ஐயர் அவர்கள் தோன்றினார்கள்.

தஞ்சை மாவட்டத்தில் உத்தமதானபுரம் என்ற ஓர் ஊர் உண்டு. அவ்வூரில் வேதியர்க்குரிய ஒழுக்கம் எல்லாம் ஒருங்கு அமைந்த வேங்கடசுப்பையர் என்பார் ஒருவர் இருந்தார். அவருடைய மைந்தராகச் சாமிநாத ஐயர் 1855-ஆம் ஆண்டு பிறந்தார். வேங்கடசுப்பையர் தமிழ்ப் புலமையும் இசைப்புலமையும் ஒருங்கே பெற்றவர். அப்பெரியார் தம் அருமை மைந்தருக்குத் தமிழ்க் கல்வியில் பற்று உண்டாகுமாறு செய்து வந்தார். அக்காலத்தில் எங்கும் திண்ணைப் பள்ளிக்


-ப-

கூடங்களே இருந்தன. அப்பள்ளிகளில் பனை ஓலைகளில் எழுத்தாணி கொண்டு எழுதி வந்தனர். இப்பொழுது இருப்பதுபோல் பென்சில், பேனா முதலிய எழுது கருவி கள் அப்பொழுது இல்லை. அப்படிப்பட்ட திண்ணைப் பள்ளி ஒன்றில் சேர்ந்து, சாமிநாத ஐயர் ஆரம்பக் கல்வி யைப் பெற்றார். 'விளையும் பயிர் முளையில் தெரியும்' என்பது பழமொழி அல்லவா ? எதிர்காலத்தில் பேரறிஞ ராக விளங்குவார் என்பது அவர் இளமைப் பருவத் தில் கல்வி கற்க விரும்பிய ஆர்வத்திலிருந்தே தெரிகிறது. மேலும் மேலும் இலக்கிய இலக்கணங்களைத் தெரிந்து கொள்ள முயற்சி செய்தார். சோம்பலும் வீண்பொழுது போக்கும் பழக்கமும் அவரிடம் சிறிதும் கிடையாது.

திண்ணைப் பள்ளிக்கூடப் படிப்பு முடிந்தபிறகு வேறு சில நல்லாசிரியர்களிடம் கல்வி பயின்றார். அவருடைய ஆர்வத்தையும், தமிழ்ப் பற்றையும் கண்ட அவர் தந்தை யார், அவரை அக்காலத்தில் மிகப் புகழ்பெற்று விளங்கிய பேரறிஞரும், திருவாவடுதுறை மடத்துத் தமிழ்ப் புலவரு மாக இருந்த மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை என்பவரிடம் தமிழ்க்கல்வி பயில அனுப்பினார். சாமிநாத ஐயர், தமது புதிய ஆசிரியரான மீனாட்சிசுந்தரம் பிள்ளை யிடம் அன்பும் அடக்கமும் நிறைந்த ஒரு நல்ல மாண வராக நடந்துகொண்டார். ஆசிரியர்க்குச் செய்ய வேண்டிய பணிவிடைகளில் சிறிதும் குறைவின்றிச் செய்து, வழிபாட்டு முறைகளில் சிறிதும் வழுவாமல் நடந்து, அவர் குறிப்பின்படி இருந்த, நன்றாகக் கல்வி கற்று வரலானார். இவரை மாணாக்கராகப் பெற்ற மகா வித்துவானும் பெரிதும் மனம் மகிழ்ந்தார். அவரிடம்

மிகவும் அன்பாக நடந்துகொண்டார். நன்ருகப் படிக்கும் பிள்ளையைப் பார்த்தால் யாருக்குத்தான் மகிழ்ச்சி யுண்டாகாது? இலக்கண இலக்கியங்களில் நல்ல புலமை பெற்ருர். மீனுட்சிசுந்தரம் பிள்ளையின் இல்லத்துக்கு வருவோர் அனைவரும் ஐயர் அவர்களின் அறிவின் திறமையைக்கண்டு வியந்தனர். அவர்களுள், பிள்ளையவர்களின் நன்மாணுக்கர்களில் ஒருவரான **தியாகராச செட்டியார்** என்பாரும் ஒருவர் ஆவர். தியாகராச செட்டியாருக்கு ஐயர்மீது தனி அன்பு உண்டாயிற்று. அதனுல், அவர் கும்பகோணத்தில் தாம் இருந்த கல்லூரியில் தமக்குப் பிறகு தமிழாசிரியராக ஐயரை அமர்த்திஞர். சாமிநாத ஐயர் அவர்கள் தமிழாசிரியராக அமர்ந்து, மாணவர்கள் விரும்பும் வகையில் தமிழ்ப்பணி ஆற்றிஞர்கள். அவரிடம் படித்த மாணவர்கள் அனைவரும் தமிழன்பில் தலைசிறந்தவர்களாக விளங்கிஞர்கள் என்ருல் அவருடைய திறமையைத் தெரிவிப்பதற்கு வேறு என்ன சான்று வேண்டும்!

கும்பகோணத்தில் தமிழ் ஆசிரியராக இருந்த ஐயர், பிறகு சென்னை அரசாங்கக் கல்லூரிக்குத் தமிழாசிரியராக மாற்றப்பட்டார். வீட்டிலும் வெளியிலும் தமிழ்ப் பணியே செய்துகொண்டுவந்த ஐயர் தமது ஓய்வு நேரங்களைத் தமிழ் நூல்களை ஆய்ந்து பதிப்பித்து வெளியிடும் பயனுள்ள வேலையில் பயன்படுத்திஞர்.

பிறகு கலைவளர்த்த வள்ளல் என்று அறிஞர் பெருமக்களால் போற்றப்படும் இராஜா சர். **அண்ணுமலைச் செட்டியார்** அவர்களால் சிதம்பரத்தில் ஆரம்பிக்கப்பெற்ற மீனுட்சிக் கல்லூரியில் தமிழ்த்தொண்டு

ஆற்றும்படியாக ஐயரவர்கள் அழைக்கப்பட்டனர்; அங்கிருந்துகொண்டும் அருந்தமிழுக்குப் பணி பல புரிந்தார்.

ஐயரவர்கள் கும்பகோணத்தில் இருந்தபோது அங்கு இராமசாமி முதலியார் என்ற பெரியார் ஒருவர் முனிசீப்பாக இருந்தார்; அவர் தமிழார்வம் கொண்டவர்; அவர் ஐயருடன் நெருங்கிப் பழகினுர். அதனுல் ஐயருடைய குணச்சிறப்பை அறிந்து. தம்மிடம் இருந்த **சீவக சிந்தாமணிப் பிரதி** ஒன்றைக் கொடுத்து 'இதை நன்ருக ஆய்ந்து பார்த்து, எல்லோருக்கும் பயன் படும்படியாக அச்சிட்டு வெளியிடுங்கள்' என்றும் கூறினுர். முதலியாரின் வேண்டுகோளின்படி அவர் அதை வெளியிட முயற்சி எடுத்துக்கொண்டார். அதுபோன்ற சுவடிகள் யார் யாரிடம் இருந்தனவோ அவற்றையெல்லாம் முயன்று சேகரித்து, ஒப்பிட்டுப்பார்த்து அந்நூலை அழகான பதிப்பாக வெளியிட்டார். அன்றுமுதல் ஐயர் அவர்களின் புகழ் தமிழ்நாடு முழுவதும் பரவத் தொடங்கியது. மெய்வருத்தம் பாராமல், கண் துஞ்சாமல், கருமமே கண்ணுயிருந்து, தம் கடமையை நிறைவேற்றிய அவர் பேரறிஞர் என்று பெருமக்களால் பாராட்டப் பெற்ருர்.

சீவக சிந்தாமணியை வெளிட்ட பிறகு பத்துப் பாட்டு, சிலப்பதிகாரம், புறநானூறு, மணிமேகலை. பதிற்றுப்பத்து, பரிபாடல் முதலிய சங்க இலக்கியங்களைப் பதிப்பித்து அழகிய முறையில் வெளியிட்டார். பெருங்கதை. திருவிளையாடல் புராணம், சிறு பிரபந்த நூல்கள், இலக்கணங்கள், உரைநடை நூல்கள் முதலிய பலவும் வெளியிட்டுப் பெரும்புகழ் பெற்ருர்.

இவ்வாறு தமிழ் மொழியைத் தழைக்கச் செய்ய அரிய பல நூல்களை ஆராய்ந்து அச்சிட்டுதவிய பேரறிஞரை அரசாங்கமும், அறிஞர்களும் பாராட்டத் தொடங்கினர். மகா மகோபாத்தியாயர் என்னும் பட்டம் அரசாங்கத்தாரால் வழங்கப்பெற்ருர். 'திராவிடவித்யா பூஷணம்,' 'தாக்ஷிணாத்ய கலாநிதி' முதலிய பட்டங்களும் பெற்ருர். சென்னைப் பல்கலைக் கழகம் அவருக்கு 'டாக்டர்' பட்டம் அளித்துக் கௌரவித்தது. பல்லாயிரக் கணக்கான ரூபாய்கள் பொது மக்கள் சார்பில் பரிசுத் தொகையாக அளிக்கப்பட்டன. பொது மக்களாலும், பேரறிஞர்களாலும், அரசாங்கத் தாராலும், பல்கலைக் கழகத்தாராலும் பாராட்டப்பெற்ற ஐயர்என்றும் இடையருத உழைப்புடையவராக இருந்து இறுதிவரை தமிழுக்கென்றே பணியாற்றிப் பேரும் புகழும் பெற்ருர்.

1942-ஆம் ஆண்டு அவர் போரின் காரணமாகச் சென்னையிலிருந்து திருக்கழுக்குன்றம் சென்று தங்கியிருந்தார். அங்கு இருக்கும்போது அவர் உடல் நலம் குன்றியது. அதனுல் அவர் அங்கேயே தம் புகழுடம்பை நிலைநாட்டிப் பூதவுடம்பை நீத்தார்.

ஐயரவர்கள் தமிழ்ப்பணியையே தமது ஆயுள் வரையும் செய்து வந்தார். அவர் தமிழ்ப்பணி ஆற்றி வந்தபோது தமிழ் மக்களே தமிழைச் சரிவரப் படிப்பதில்லை : தமிழ்ப் புலவர்களை ஆதரிப்பதில்லை : தமிழ் பேசுவதை இழிவு என்று எண்ணினர். அப்படிப்பட்ட நிலையில் ஐயரவர்கள் பெரிதும் போற்றப் பெற்ருர்கள் என்ருல் அதற்கு அவருடைய உண்மை உழைப்பும் தமிழார்வமுமே காரணமாகும் அல்லவா ?

ஐயரவர்கள் பொறுமையே உருவமானவர்: பிறரிடம் எப்பொழுதும இன்சொல்லே பேசுபவர்; அருள் உள்ளம் கொண்டவர்' நன்றி மறவாதவர்; கடவுட் பக்தி கொண்டவர்; ஆசிரியர் மீதும், தம்மை ஆதரித்த தியாகராச செட்டியார் மீதும் பேரன்புடையவராக இருந்து, அவர்களைப் பற்றிய நூல்களும் எழுதியுள்ளார் தியாகராச செட்டியார் செய்த நன்றியை மறவாது, தமது வீட்டிற்குத் 'தியாகராச விலாசம்' எனப் பெயரிட்டார்.

இங்ஙனம் பலவகை நற்குணங்களும் ஒருங்கே அமைந்து விளங்கிய பெரியாரின் உருவச்சிலை சென்னை அரசாங்கக் கல்லூரி முன்பு வைக்கப்பட்டுள்ளது. அவர் வெளியிட்ட நூல் கள் பலவகைச் சிறப்புக்களுடன் விளங்கித் தமிழ் நாட்டின் புகழையும் தமிழின் பெருமையையும் வளர்த்துக்கொண்டு வருகின்றன. அவர் புகழ் என்றும் நின்று நிலவுக.

---

**அருஞ்சொற் பொருள்:** *ஒருங்கு - ஒன்றாக; பயின்றார் - படித்தார்: வியந்தார் - பாராட்டினர்; ஆராய்ந்து - ஆராய்ச்சி செய்து; துஞ்சாமல் - உறங்காமல்; இறுதி - கடைசி.*

## வினுக்கள்

1. *சாமிநாத ஐயர் யாரிடம் கல்வி கற்றார்?*
2. *அவர் கல்வி கற்ற முறையை எழுது.*
3. *ஐயரவர்கள் எங்கெங்கு தமிழாசிரியராக இருந்தார்கள்?*

4. ஐயரவர்கள் முதலில் வெளியிட்ட நூல் எது ?
5. ஐயர் பதிப்பித்த நூல்களுள் சிலவற்றின் பெயர்களை எழுதுக.
6. சாமிநாத ஐயர் பெற்ற பட்டங்கள் எவை ?
7. உ. வே. சாமிநாத ஐயர் அவர்களின் குணச் சிறப்புக்களை எழுது.
8. ஐயர் நன்றி மறவாதவர் என்பதற்கு ஒரு சான்று காட்டு.

## பயிற்சிகள்

1. இவரை மாணாக்கராகப்பெற்ற ஆசிரியரும் மனம் மகிழ்ந்தார் ; அவரிடம் மிகவும் அன்புடன் நடந்துகொண்டார் — இவ்விரண்டு தனி வாக்கியங்களை தொடர்வாக்கியமாக மாற்று.
2. இப்பாடத்திலிருந்து இரண்டு மூன்று, நான்காவது வேற்றுமையுருபுகள் உள்ள சொற்களை எடுத்தெழுது.
3. ஐயம் இல்லை ; இறுதியில் : நிறை செய்ய — இவைகளை வாக்கியத்தில் அமைத்து எழுது.


# 14. புத்தர்

உலகத்தில் 'அன்பு நெறி'யைப் போதித்து, 'உயிர் வதை'யைக் கண்டித்து, புலால் மறுத்தலை வற்புறுத்திக் கூறிய அறவோர்களில் புத்தர் ஒருவர். இவர் தமக்கென வாழாத தன்மையர்; உண்மையே பேசின உத்தமர்; இப்படிப்பட்டவரின் வரலாற்றை நாம் அறிந்துகொள்ள வேண்டியது அவசியம் அல்லவா?

புத்தர் பெருமான், இமயமலையை அடுத்துள்ள 'கபிலவஸ்து' என்னும் நாட்டில், அரச குடும்பத்தில் பிறந்தார். தந்தை பெயர் சுத்தோதனன் என்பது. தாயார் மாயாதேவி அம்மையார். பெற்றோர் சித்தார்த்தன் என்று பெயரிட்டனர். இளமை முதல் சீரும் சிறப்பும் பெருக வளர்ந்தார்; அரச குடும்பத்தில் பிறந்தும் அவர் நிம்மதியுடன் அரண்மனையில் 'சுகவாழவு' வாழ விரும்பவில்லை. பிறர்படும் துன்பம் கண்டு இவர் நெஞ்சம் கலங்கினார்; அதன் காரணம் என்ன என்று ஆராயத் தொடங்கினார். புத்தரின் பற்று அற்ற செயலைக் கண்ட அவருடைய பெற்றோர் மனம் வருந்தினர். இன்பக் காட்சிகளால் அவரது மனதைத் திருப்ப முயன்றார்கள். ஆனால் ஒன்றும் பயன் தரவில்லை.

முடிவில புத்தரின் பெற்றோர், யசோதரை என்னும் மங்கையை அவருக்கு மணம் முடித்து வைத்தார்கள். இல்லறத்தில் ஈடுபட்டு, பற்று அற்ற தன்மையை மறந்து விடுவான் என்று அவர்கள் எண்ணினார்கள். அவர்கள் எதிர்பார்த்தபடியே புத்தரும் சில ஆண்டுகள் இல்லறத்தில் இருந்து தம் கடமைகளைச் செய்து வந்தார்.

அதன் பயனாக ஓர் ஆண் மகவும் பிறந்தது. ஆனால் இல்லறத்தில் இருந்துகொண்டே மக்கள் படும் துன் பங்களையும், அவர்கள் ஏழ்மையில் ஏங்கும் இரங்கத்தக்க



நிலையையும் கண்டு மனம் புண்பட்டார். இவைகளே யன்றி இயற்கையாக நிகழும் சம்பவங்களைக் கண்டும் ஆச்சரியப்பட்டார். பிணியும், மூப்புத் தன்மையும், மரணமும் மனிதனைப் பற்றி நிற்பதைக் கண்டார்.

'பிறக்கின்ற ஒவ்வொருவரும் நோய்வாய்ப் பட்டும், முதுமைநிலை யடைந்தும் இறக்கத்தான் வேண்டு மா?' என்று சிந்தித்தார். மனிதன் படும் துன்பங் களுக்குக் காரணம் என்ன என்பதையும் ஆராய முற் பட்டார். அன்றாட வாழ்க்கையில் ஏற்படும் சண்டை சச்சரவுகளுக்குக் காரணம் என்ன என்பதையும் அறிய எண்ணம் கொண்டார்.

இவ்வாறு எண்ணியதன் விளைவாக அரசபோகத்தைத் துறந்து, மனைவி மக்களைவிட்டு, ஒருவருக்கும் தெரியாமல் இரவில் வெளியே புறப்பட்டுவிட்டார். தன் குழந்தையின் மழலைச் சொல்லைக் கேட்டு மகிழாமல் உலகோர் படும் துன்பத்திற்குக் காரணம் என்ன என்று அறியப் புறப்பட்டுவிட்டார். அருமைத் தாய்தந்தையரையும், மனைவியையும் குழந்தையையும் விட்டு நீங்கிக் காடும் நாடும் சுற்றினார். மக்கள்படும் துன்பங்களை நேரே கண்டார். முடிவில் கயை என்னும் இடத்தில் போதி மரத்தடியில் அமர்ந்து தவம் செய்ய ஆரம்பித்தார். பல நாட்கள் தவநிலையில் இருந்து 'அருள் உணர்வு பெற்றார். அவர் அருள் உணர்வு பெற்ற இடத்துக்கு 'புத்த கயை' என்று பெயர் இன்றும் வழங்குகிறது.

அருள் உணர்வு பெற்ற பிறகு அவர் ஊர் ஊராய்ச் சென்று, தாய் உணர்ந்த உண்மைகளை மக்களுக்கு எடுத்துச் சொன்னார். மக்கள் உண்மையே பேசவேண்டும் என்றும், ஒவ்வொருவரும் சகோதரர்களாக அன்புடன் வாழ வேண்டும் என்றும், கொல்லா விரதத்தைப் போற்றவேண்டும் என்றும், பெரியோர்களுக்குப் பணிந்து நடக்கவேண்டும் என்றும், ஆசையே துன்பத்திற்குக் காரணம் ஆதலின் ஆசையை ஒழிக்கவேண்டும் என்றும் போதித்தார்; கள் குடித்தல் முதலிய தீயபழக்கங்களையும் கண்டித்தார்.

இவ்வாறு போதித்த கொள்கைகளின் தூய தன்மைகளை அறிந்த மக்கள் அவரை ஆதரித்தனர். அவர் சொற்படி நடந்தார்கள். அவர் போதித்த கொள்கைகள் இன்று 'புத்தமதக் கொள்கைகள்' என்றும், அவற்றை

பின்பற்றுபவர்கள் 'புத்தர்கள்' என்றும் இன்றும் அழைக்கப்படுகிருர்கள். புத்தமதம் திபெத்திலும், சீனுவிலும், இலங்கையிலும், நம் நாட்டிலும், மற்று அயல் நாடுகளிலும் இன்றும் தழைத்தோங்கி நிற்கிறது.

அவருக்குப் பிறகு அவரது கொள்கைகளைப் பின்பற்றி நடந்தவர் அசோகர் ஆவார். அவரைப்பற்றி நீங்கள் படித்திருப்பீர்கள், எனவே, நீங்களும் புத்தரது அறிவுரைகளை அறிந்து, அவ்வாறே நடந்து நல்லவர்களாக விளங்கவேண்டும்.

---

அருஞ்சொற் பொருள்: நெறி — - வழி; உயிர்வதை- பிற உயிர்களைத் துன்புறுத்தல்; மூப்புத் தன்மை - கிழப்பருவம்; புலால் - மாமிசம்.

### வினுக்கள்

1. புத்தரின் இளமையைப் பற்றி ஒரு சிறு குறிப்பு வரைக.
2. புத்தர் வீட்டைவிட்டு, மனைவி மக்களைவிட்டு வெளியேறக் காரணம் என்ன?
3. புத்தர் அருள் உணர்வு பெற்றது எப்பொழுது? எங்கே?
4. புத்தர் மக்களுக்குப் போதித்த அறிவுறைகள் என்ன?
5. புத்தர் கொள்கைகள் இன்று எவ்வாறு எங்கெங்கே போற்றப்படுகின்றன?
6. புத்தர் கொள்கைகளைப் பின்பற்றிவந்த அரசன் யார்?

# செய்யுள் பகுதி

## 1. வாழ்த்து

### 1. திருவாசகம்

வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி
ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்க்
கோனாகி யான்எனதுஎன்(று) அவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை என்சொல்லி வாழ்த்துவனே.

—மாணிக்கவாசகர்.

### 2. நாலாயிரப் பிரபந்தம்

ஊரிலேன் காணி யில்லை
உறவுமற்(று) ஒருவர் இல்லை
பாரில்நின் பாத மூலம்
பற்றினேன் பரம மூர்த்தி
காரொளி வண்ண னேஎன்
கண்ணனே கதறுகின்றேன்
ஆருளர் களைகண் அம்மா
அரங்கமா நகரு ளானே.

—தொண்டரடிப்பொடியாழ்வார்.

## 3. கலைமகள்

தெய்வம் யாவும் உணர்ந்திடும் தெய்வம்
    தீமைகாட்டி விலக்கிடும் தெய்வம்
உய்வம் என்ற கருத்துடை யோர்கள்
    உயிரினுக்குயி ராகிய தெய்வம்
செய்வம் என்ரொரு செய்கை எடுப்போர்
    செம்மை நாடிப் பணிந்திடுந் தெய்வம்
கைவ ருந்தி உழைப்பவர் தெய்வம்
    கவிஞர் தெய்வம் கடவுளர் தெய்வம்

—பாரதியார்.

## 4. கடவுள் யார் ?

சூரியன் வருவது யாராலே ?
    சந்திரன் திரிவது யாராலே ?
காரிருள் வானில் மின்மினி போல்
    கண்ணிற் படுவன் அவை என்ன ?
பேரிடி மின்னல் எதனாலே ?
    பெருமழை பெய்வது எவராலே ?
யாரிதற் கெல்லாம் அதிகாரி ?
    அதைநாம் எண்ணிட வேண்டாவோ ?

—நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை.

# 2. நீதி

## 1. நல்வழி

ஆற்றங் கறையின் மரமும் அரசறிய
வீற்றிருந்த வாழ்வும் விழுமன்றே—ஏற்றம்
உழுதுண்டு வாழ்வதற்கு ஒப்பில்லை கண்டீர்
பழுதுண்டு வேறோர் பணிக்கு. (1)

தண்ணீர் நிலநலத்தால தக்கோர் குணங்கொடையால்
கண்ணீர்மை மாறாக் கருணையால் — பெண்ணீர்மை
கற்பழியா ஆற்றால் கடல்சூழ்ந்த வையகத்துள்
அற்புதமாம் என்றே அறி. (2)

நீரும் நிழலும் நிலம்பொதியும் நெற்கட்டும்
பேரும் புகழும் பெருவாழ்வும் — ஊரும்
வருந்திருவும் வாழ்நாளும் வஞ்சமில்லார்க் (கு) என்றும்
தரும்சிவந்த தாமரையாள் தான். (3)

ஆன முதலில் அதிகம் செலவானால்
மானம் அழிந்து மதிகெட்டுப்—போனதிசை
எல்லார்க்கும் கள்ளனாய் ஏழ்பிறப்பும் தீயனாய்
நல்லார்க்கும் பொல்லனாம் நாடு. (4)

மரம்பழுத்தால் வெளவாலை வாஎன்று கூவி
இரந்தழைப்பார் யாவரு மங்கில்லை — சுரநதமுதம்
கற்றா தரல்போல் கரவாது அளிப்பரேல்
உற்றார் உலகத் தவர். (5)

—ஔவையார்.

## 2. நீதி வெண்பா

கண்இரண்டே யாவர்க்கும் கற்றோர்க்கு மூன்றுவிழி
எண்ணுவிழி ஏழாகும் ஈவோர்க்கு — நண்ணும்
அநந்தம் தவத்தால் அருள்ஞானம் பெற்றோர்க்(கு)
அநந்தம் விழிஎன்(று) அறி. (1)

துர்ச்சனரும் பாம்பும் துலையொக்கி னும்பாம்பு
துர்ச்சனரை யொக்குமோ தோகையே— துர்ச்சனர்தாம்
எநதவிதத் தாலும் இணங்காரே பாம்புமணி
மந்திரத்தி லாமே வசம். (2)

வென்றி வரிஉகிரும் வெண்கவரி மானமயிரும்
துன்றுமத யானைச் சுடர்மருப்பும் — நின்றநிலை
வேறுபடி னும்சிறப்பாம் மெய்ஞ்ஞானி நின்றநிலை
வேறுபடி னும் சிறப்பா மோ ? (3)

தென்புலத்தார் தெய்வம் விருந்துஒக்கல் என்றிவரோடு
இன்புறத்தான் உண்டல் இனிதாமே — அன்புறவே
தக்கவரை யின்றித் தனித்துண்டல் தான்கவர்மீன்
கொக்கருந்தல் என்றே அறி. (4)

தீயவர்பால் கல்வி சிறந்தாலும் மற்றவரைத்
தூயவர் என்றுஎண்ணித் துன்னற்க — சேயிழையே
தண்ஒளிய மாணிக்கம் சர்ப்பம் தரித்தாலும்
நண்ணுவரோ மற்றதனை நாடு. (5)

உத்தமர்தாம் ஈயுமிடத்(து) ஓங்குபனை போல்வரே
மத்திமர்தாம் தெங்குபனை மானுவரே — முத்தலரும்
ஆங்கமுகு போல்வார் அதமர் அவர்களே
தேங்கதலி யும்போல்வார் தெரிந்து. (6)

## 3. திருக்குறள்

1. அகர முதல எழுத்தெல்லாம் ; ஆதி
பகவன் முதற்றே உலகு.

2. அறத்தினூங்கு ஆக்கமும் இல்லை, அதனை
மறத்தலின் ஊங்கில்லை கேடு.

3. மகன்தந்தைக்கு ஆற்றும் உதவி இவன்தந்தை
என்னோற்றான் கொல்எனுஞ் சொல்.

4. அன்பிலார் எல்லாம் தமக்குரியர் ; அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு.

5. இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு.

6. விருந்து புறத்தாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று.

7. முகத்தான் அமர்ந்தினிது நோக்கிஅகத்தானும்
இன்சொ லினிதே யறம்.

8. நன்றி மறப்பது நன்றன்று ; நன்றல்ல(து)
அன்றே மறப்பது நன்று.

9. சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்
கோடாமை சான்றோர்க்(கு) அணி. [தொருபால்

10. அடக்கம் அமரருள் உய்க்கும் ; அடங்காமை
ஆரிருள் உய்த்து விடும்.

11. ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்.

12. அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை.

13. ஒழுக்காறுக் கொள்க ஒருவன்தன் நெஞ்சத்து
அழுக்கா(று) இலாத இயல்பு.

14. ஏதிலார் குற்றம்போல் தம்குற்றம் காண்கிற்பின்
தீதுண்டோ மன்னும் உயிர்க்கு?

15. தீயவை தீய பயத்தலால் தீயவை
தீயினும் அஞ்சப் படும்.

16. ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்
பேரறி வாளன் திரு.

17. நல்லாறு எனினும் கொளல்தீது; மேலுலகம்
இல்லெனினும் ஈதலே நன்று.

18. தோன்றின் புகழொடு தோன்றுக; அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று.

19. புறந்தூய்மை நீரான் அமையும்; அகத்தூய்மை
வாய்மையால் காணப் படும்.

20. தன்னைத்தான் காக்கின் சினங்காக்க, காவாக்கால்
தன்னையே கொல்லுஞ் சினம்.

21. சிறப்புஈனும் செல்வமும் ஈனும் அறத்தினூங்(கு)
ஆக்கம் எவனோ உயிர்க்கு.

22. தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும்
நீங்கா நிலன்ஆள் பவர்க்கு.

23. கற்க கசடறக் கற்பவை, கற்றபின்
நிற்க அதற்குத் தக.

24. எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு.

25. மேல்பிறந்தார் ஆயினும் கல்லாதார் கீழ்ப்பிறந்தும்
கற்ருர் அனைத்திலர் பாடு.

26. செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம், அச்செல்வம்
செல்வத்துள் எல்லாம் தலை.

27. அறிவுடையார் எல்லாம் உடையார் ; அறிவிலார்
என்னுடைய ரேனும் இலர்.

28. வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும்.

29. உற்றநோய் நீக்கி உருஅமை முற்காக்கும்
பெற்றியார்ப் பேணிக் கொளல்.

30. நிலத்தியல்பால் நீர்திரிந்து அற்ருகும் : மாந்தர்க்கு
இனத்தியல்ப தாகும் அறிவு.

31. நுனிக்கொம்பர் ஏறிஞர் அஃதிறந்து ஊக்கின்
உயிர்க்கிறுதி ஆகி விடும்.

32. பகல்வெல்லுங் கூகையைக் காக்கை ; இகல்வெல்லும்
வேந்தர்க்கு வேண்டும் பொழுது.

33. கடலோடா கால்வல் நெடுந்தேர் ; கடலோடும்
நாவாயும் ஓடா நிலத்து.

34. காக்கை கரவா கரைந்துண்ணும் ; ஆக்கமும்
அன்னநீ ரார்க்கே உள.

35. உள்ளியது எய்தல் எளிதுமன் மற்றுந்தான்
உள்ளியது உள்ளப் பெறின்.

36. வான்நோக்கி வாழும் உலகெல்லாம் ; மன்னவன்
கோல்நோக்கி வாழுங் குடி.

37. வெள்ளத்து அனைய மலர்நீட்டம், மாந்தர்தம்
உள்ளத்து அனையது உயர்வு.

38. நெடுநீர் மறவி மடிதுயில் நான்கும்
கொடுநீரார் காமக் கலன்.

39. முயற்சி திருவினை யாக்கும் ; முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்.

40. வெள்ளத்(து) அனைய இடும்பை அறிவுடையான்
உள்ளத்தின் உள்ளக் கெடும்.

41. கருவியும் காலமும் செய்கையுஞ் செய்யும்
அருவினையும் மாண்டது அமைச்சு.

42. ஈன்றாள் பசிகாண்பான் ஆயினும் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை.

43. பிணியின்மை செல்வம் விளைவின்பம் ஏமம்
அணியென்ப நாட்டிற்கிவ் வைந்து.

44. உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு.

45. குணனுங் குடிமையும் குற்றமும் குன்றா
இனனும் அறிந்துயாக்க நட்பு.

46. கனவிலும் இன்னாது மன்னோ வினைவேறு
சொல்வேறு பட்டார் தொடர்பு,

47. நிலத்தில் கிடந்தமை கால்காட்டும் ; காட்டும்
குலத்தில் பிறந்தார்வாய்ச் சொல்.

48. தலையின் இழிந்த மயிர்அனையர் மாந்தர்
நிலையின் இழிந்தக் கடை.

49. பிறப்புஒக்கும் எல்லா உயிர்க்கும், சிறப்புஒவ்வா
செய்தொழில் வேற்றுமை யால்.

50. உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார், மற்றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்.

## 4. திருவேங்கட சதகம்

பெற்றதாய் தந்தைதன் சுற்றமே முதலான
பெரியோரை முனிதல் வேண்டாம்
பின்னென்று முன்னென்று பேசியே அவமானப்
பேர்கொண்டு திரிதல் வேண்டாம்
உறறவர்கள் போலஉட் பகையான வஞ்சகரை
ஒருநாளும் நம்பல் வேண்டாம்
ஒருவருக்(கு)இச்சையாய்ப் பொய்சொல்லிப் பின்சபையில்
ஊமைபோல் நிற்றல் வேண்டாம்
சற்றுமே பொறுமைஇல் லாதவர்கள் சண்டையில்
தான்போய் விலக்கல் வேண்டாம்
தைரியந் தனில்விக்கிர மாதித்தன் என்னினும்
தன்னையே புகழ்தல் வேண்டாம்
மற்றொன்றும் எண்ணாது செய்யல்வேண் டாம்என்பர்
மணவாள நாராயணன்
மனதிலுறை அலர்மேலு மங்கைமண வாளனே.
வரதவேங் கடராயனே.

—நாராயண பாரதியார்.

## 3. வருணனை

### 1. பொதியமலைச் சிறப்பு

திங்கள்முடி சூடும்மலை தென்றல்விளை யாடும்மலை
தங்குபுயல் சூழும்மலை தமிழ்முனிவன் வாழும்மலை
அங்கயற்கண் அம்மைதிரு அருள்சுரந்து பொழிவதெனப்
பொங்கருவி தூங்கும்மலை பொதியமலை என்மலையே.

—குமரகுருபரர்.

### 2. மங்கிய வானம்

மறைகின்றான் பரிதி ; குன்ற
மங்கையோ ஒளியிழந்து
நிறைமூங்கில் இளங்கை நீட்டி
வாராயோ என அழைப்பாள்!
சிறுபுட்கள் அலறும் ; யானை
இருப்பிடம் சேரும்! அங்கோர்
குருநரி ஊளைச் சங்கால்
இருள் இருள் என்று கூவும்!

—பாரதிதாசன்.

### 1. தேசிங்கு ராஜன் கதை

## 4. கதை

தெற்கே வெகுதூர மிருக்குது பாரு
செஞ்சிக் கோட்டை
செஞ்சிக் கோட்டை யாளும் ராஜன்
தேரணி மகாராஜன்

தேரணி ராஜன் குமாரன் நான்தான்
தேசிங்கு மகிபாலன்
சிற்றப் பதுரை தரணி தேசிங்கும்
சிறையி லிருக்கிறாராம
குதிரையேறி சவாரி செய்து நான்
கொண்டு போகவந்தேன்
சல்திசல்தி குதிரை கொண்டுவா
டில்லிப துரையே நீ
கொல்லுஞ் சிங்கக் குட்டியேபோல்
சீறியே நின்றனும்
அந்தச் சொல்லைக் காதிலே கேட்டான்
டில்லி மகாராஜன்
தேரணி ராஜன் காதிலே கேட்டு
தேடியே வந்தானும்
சிற்றப்பதுரை தரணி இங்குமே
தேடி யோடிவந்தான்.
வாரி யெடுத்து மடிமீது வைத்து
மகனை முத்தமிட்டார்
சந்தோஷமாகத் தழுவியெடுத்து
திருஷ்டி கழிப்பாராம்
ஐம்பத்தாறு தேச ராஜாக்கள்
அதிசயப் பட்டாராம்
டில்லிபதுரையும் சந்தோஷமாக
சேர ஓடி வந்தார்
கண்ணே மணியே ரத்னமே என்
கருவிளமே கேளாய்

என் மகனைக் கண்டு நானும்
மகிழ்ச்சி யடையாமல்

உந்தன் சொல்லைக் கேட்டு நானும்
உளமிக மகிழ்தேன்.

பெற்ற தாயு முன்னைப் பிரிந்து
பின் உயிர் வைப்பாளா

அரசனைக் கேட்டு செஞ்சிக்குப்
போவோம் கண்மணியே

மனுவுகேட்டு வருகிறேனப்பா
வாருங்குழந்தை யென்றான்.

## 2. கர்ன மகாராஜன் சண்டை

### கண்ணன் மறையவர் வேடம் பூண்டு கர்னனை வேண்டுதல்

கற்பகத் தருவைநிகர் கர்னப் பெருமானே!
கேட்டவர்க்கு இல்லையென்னாக் கீர்த்தி மணிவிளக்கே!
ஐயமென்று வந்தேன்காண் அங்கவள நாட்டானே!
என்றுசொல்லி மாயவனார் எடுத்துரைத்தா ரப்போது
மாயவனார் கூறியதை மன்னவனார் தான்கேட்டு
கணையால் களைத்திருக்கும் கர்னப் பெருமாளும்
மாயவனார் சொல்மொழியை மனதிலே தானினைந்து
ஐயமென்று கூறினதை அங்கராயன் தான்கேட்டு
மறைய வனாகவந்த மாயவரைத் தான்பார்த்து
பேய்கள் தழைக்கப் பெரும்பூதம் கொக்கரிக்க

அமர்க்களத்துக் கஞ்சாமல் ஐயாநீ வந்ததென்ன
என்றுசொல்லக் கேட்டு ஏதுரைப்பார் மாயவனுர்
ஈரேழு தேசத்து ராஜாதி ராஜர்முன்னே
*கார்மேகந் தனில் மிச்சங் கர்னகொடை என்றுசொன்னுர்.*
ஆகையினுல் கர்னரே ஐயமென்று வந்தேன் காண்
என்று சொல்லக்கேட்டு எம்பெருமாள் வார்த்தைதன்னே
ஆயனுர் சொல்வார்த்தை அங்கராயர் தான்கேட்டு
காசினி யாண்டதொரு கர்னன் எடுத்துரைப்பான்
தேசத்தை யாண்டுநான் தியாகம் அளிக்கையிலே
அப்போது ஐயமென்று அடியேனே நாடிவந்தால்
தேவரீர் மனமகிழத் திரவியத்தை நானளிப்பேன்
அடியேனுன் செய்ததொரு அபசாரந் தன்னுலே
தம்பிமார் பணத்தினுலே தாழா திருக்கையிலே
*தியாகமென்று தந்தக்கால் தயாபரனென்சொல்லுவேனுன்*

## 3. பஞ்சதந்திரம்

### முயல் சிங்கத்தைக் கொன்றது

1. குறுமுயல் சிங்கந் தன்னேக்
 கொன்றதொன் றுண்டே தென்னில்
செறியுமோர் காட்டி லேயோர்
 சிங்கமுண் டந்தக் காட்டில்
உறுவிலங்(கு) அனேத்தும் வேட்டை
 யாடிஊண் மிகவுந் தின்று
வெறிகொடு திரியும் நாளில்
 விலங்கெலாம் ஒருங்கு கூடி

2. "ஆண்இளஞ் சிங்க மேஉன்
அடவியில் விலங்கை எல்லாம்
வீணிலே கொல்ல வேண்டாம்
விதத்தினில் தினம்ஒன்(று) ஆக
ஊண்உனக்(கு) அளிப்போம்" என்ன
உண்மையாக் கொண்டு சீயம்
ஆணையும் இட்டுஒவ் வொன்றாய்
அருந்திஅங்(கு) இருக்கும் நாளில்

3. தனிமுயல் ஒன்றுக்(கு) ஓர்நாள்
தன்முறை வருத லோடும்
இனியது விடாது நம்மை
என்னுமோர் எடுப்பு எடுத்து
வினையை இப்போது செய்து
வென்றுநாம் உய்ந்தோம் ஆகில்
நனிவிலங்(கு) அனைத்தும் உய்யும்
நமக்கும்நற் புகழுண் டென்றே

4. கருதிஅச் சிங்கத் தின்றன்
கடும்பசி வேளை தப்பி
வருதலும முயலை நோக்கி
மன்னன் "நம் பசிவேளைக்குப்
பெருமத வேழ மேனும்
பிந்துவ தில்லை பிந்தி
வருவதென் உரைநீ" என்று
மனந்தனிற் சினத்து கூற

5\. "ஐயநின் பசிவே ளைக்(கு)
அடியனேன் வந்தேன் ஆங்கோர்
வெய்யசிங் கத்தைக் கண்டு
வெருவியங் கொளித்(து) இருந்தேன்
பையவே சிங்கம் ஆங்கோர்
பருமுழை புகுந்த பின்னர்
துய்ய! உன் பக்கல் வந்தேன்
சுவாமி" என்(று) இறைஞ்சி நிற்க

6\. "சிங்கம் நாமல்லாமல் வேறோர்
சிங்கம் நீ கண்டா யாகில்
அங்கதைக் காட்ட வா" என்று
அழைத்தலும், அழைத்துப் போய்ஓர்
பங்கமும் புனலும் சேர்ந்த
பாழ்ந்துர(வு) அதனைக் காட்ட
அங்கதை எட்டிப் பார்த்(து)
அதன்நிழல் உருவம் தோன்ற

7\. தன்உரு நிழலைத் தானே
சத்துரு என்று பாய்ந்து
துன்னுபங் கத்(து) அழுந்தித்
துளங்கியே உயிர்இழந்த(து)
என்னலால் உபாயத்தாலே யாவையும்
வெல்லலா மென்(று)
இன்னமோர் நண்டு கொக்கை
ஈர்ந்ததோர் கதையும் சொல்லும்.

— **வீரமார்த்தாண்ட தேவர்.**

## 5. பல்சுவை

### 1. தனிப்பாடல்

பாம்புக்கும் வாழைப் பழத்துக்கும் சிலேடை

நஞ்சிருக்கும் தோலுரிக்கும் நாதர்முடி மேலிருக்கும்
வெஞ்சினத்தில் பல்பட்டால் மீளாது—விஞ்சுமலர்த்
தேம்பாயும் சோலைத் திருமலைரா யன்வரையில்
பாம்பாகும் வாழைப் பழம். (1)

பூநக்கி ஆறுகால் புள்ளினத்துக்(கு) ஒன்பதுகால்
ஆனைக்குக் கால்பதினே ழானதே — மானேகேள்
முண்டகத்தின் மீது முழுநீலம் பூத்ததனைக்
கண்டதுண்டு கேட்டதில்லை காண். (2)

### 2. வேண்டுவதென்ன ?

நல்லவர் வாழ வேண்டும் நாடெல்லாம்
செழிக்க வேண்டும்

நல்லவர் அல்லார் இங்கு நலம்பெறத்
திருந்த வேண்டும்

நல்லவர் ஆட்சி நின்று நாள்தொறும்
உயர வேண்டும்

நல்லவர் சொல்லை என்றும் நானிலம்
போற்றல் வேண்டும். (1)

ஊருக்கு உழைப்போர் தம்மை உணர்ந்துநாம்
போற்றல் வேண்டும்

போருக்குச் செல்லும் வீரப் படைகளைப்
புகழ்தல் வேண்டும்

சீருக்கு அடியாய் நிற்கும் ஏரது
துறக்க வேண்டும்

பாருக்குள் பசித்தோர் இல்லாப் பெருமையே
வேண்டும் வேண்டும் (2)

—எஸ். எஸ். அருணகிரிநாதர்.

## 3. தமிழ்நாடு வாழ்க

கொல்லாமை உயர்வுஎன்னும் தமிழ்நாடு வாழ்க!
கொடை வள்ளல் பலர்நின்ற தமிழ்நாடு வாழ்க!
இல்லாமை அறியாத தமிழ்நாடு வாழ்க!
இரவாமை அரமென்னும் தமிழ்நாடு வாழ்க!
படையாமல் உண்ணாத தமிழ்நாடு வாழ்க!
பகையாரும் எண்ணாத தமிழ்நாடு வாழ்க!
அடையாத துன்பங்கள் அவைவந்த போதும்
அநியாயம் எண்ணாத தமிழ்நாடு வாழ்க!

—நாமக்கல் கவிஞர்.

# குறிப்புரை

## செய்யுட் பகுதி

### 1. வாழ்த்து

1. திருவாசகம்: இயற்றியவர் மாணிக்கவாசகர். திருவாதவூரில் அந்தணர் குலத்தில் பிறந்தவர். திருவாதவூரர் என்னும் பெயரினர். இறைவனிடத்து பக்திகொண்டு மாணிக்கம் போன்ற பாடல்களைப் பாடினமையின் அப்பெயர் பெற்றார்.

வான் - ஆகாயம், வளி - காற்று, ஊன் - உடல், கோன் - தலைவன், கூத்தாட்டுவானாகி - ஆட்டி வைப்பவனாகி.

2. நாலாயிரப் பிரபந்தம்: பன்னிரண்டு ஆழ்வார்கள் திருமால்மீது பாடிய பாடல்களுக்கு இப்பெயர். 'ஊரிலேன்' என்னும் பாடல் தொண்டரடிப்பொடி ஆழ்வார் பாடியது.

கார் - மேகம், வண்ணன் - நிறமுடையவன், களைகண் - ஆதாரமானவர்.

3. கலைமகள்: வரகவி சுப்பிரமணிய பாரதியாரால் பாடப்பெற்றது. கலைமகள் யார் யாருக்குத் தெய்வமாகக் காட்சி தருகிறாள் என்பதை இப் பாடலில் உணர்த்துகின்றார்.

உய்வம் - மகிழ்வோம், கவிஞர் - புலவர்.

4. கடவுள் யார்? : நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம் பிள்ளை அவர்கள் இயற்றியது. சென்னை அரசாங்க அவைப்புலவராக இருந்து புகழ் பெற்றவர். படிப்பதற்கு இனிய பாடல்களைப் பாடித் தமிழ்த் தொண்டாற்றுகின்றார்.

கடவுள் ஒருவர் உண்டு என்பதைப் பல காரணம் காட்டி விளக்கி அக்கடவுளை நாம் வழிபட வேண்டாமா? என்று வினவுகின்றார்.

கார் இருள் - கரிய இருள், அதிகாரி - தலைவன்.

## 2. நீதி

### 1. நல்வழி

மக்கள் கடைப்பிடிக்க வேண்டிய நல்ல வழிகளைத் தெரிவிக்கும் பாடல்களைக் கொண்ட இந்நூலுக்கு 'நல்வழி' எனப் பெயர் இடப்பட்டுள்ளது. இதை இயற்றியவர் ஔவையார் என்னும் பெண் புலவராவர்,

1. அரசு அறிய - அரசர் சிறப்புச் செய்ய, வேறோர் பணிக்கு - (உழவுத் தொழில் அல்லாத) மற்ற வேலைகளுக்கு, பழுது உண்டு - அழிவு உண்டு.

2. நிலநலம் - நிலத்தின் தன்மை அல்லது வளம், கண்ணீர்மை - கண்ணின் தன்மை, கண்ணோட்டம், வையகம் - பூமி (உலகம்).

3. பொதியும் - மறைக்கும், திரு - செல்வம், சிவந்த தாமரையாள் - செந்தாமரை மலரில் வீற்றிருக்கும் திருமகள்.

4. மதி - புத்தி, (அறிவு), தீயனாய் - கொடியவனாக, நாடு - தெரிந்து கொள்வாயாக.

5. இரந்து - (வருமாறு) வேண்டி, கன்று + ஆ = கற்று - கன்றையுடைய பசு, கரவாது - மறைக்காமல், (இல்லையென்று கூறாமல்)

## 2. நீதி வெண்பா

மக்களுக்குத் தேவையான நீதிகளை எடுத்துக் கூறும் வெண்பாப் பாடல்களினால் ஆகிய நூல். இதை இயற்றியவர் இன்னார் என்பது தெரியவில்லை.

1. கற்றோர்க்கு மூன்று விழி - எல்லோர்க்கும் உரிய கண்கள், இரண்டு, ஞானக்கண் ஒன்று, ஆக மூன்று கண்கள். விழி ஏழு - நகக் கண்கள் ஐந்து+ கண்கள் இரண்டு, ஆக ஏழு கண்கள். ஈவோர்க்கு - கொடுப்போர்க்கு; அநந்தம் - முடிவற்ற, அநந்தம் விழி - கணக்கற்ற கண்கள், நண்ணும் - சேர்கின்ற.

2. துர்ச்சனர் - அறிவில்லாதவர், (கீழ் மக்கள்) துலை - ஓர் அளவில், தோகையே - மகடூஉ முன்னிலை, இணங்கார் — உடன்படார்.

3. வென்றி - வெற்றி, வரிஉகிர் - புலியின் நகம், துன்று - மிகுந்த, மருப்பு - தந்தம்.

4. தென்புலத்தார் - இறந்தவர், (பிதிரர்), ஒக்கல் - உறவினர், இனிதுஆம் - மனத்திற்கு இன்பம் தருவதாகும். கவர்மீன் - கவர்ந்த மீனை, அருந்தல்- தின்னுதல்.

5. துன்னற்க - நெருங்கக்கூடாது, சர்ப்பம் - பாம்பு, நண்ணுவரோ ? - அருகில் செல்வார்களா ?

6. ஈயும் இடத்து - கொடுக்கும்போது, தெங்கு - தென்னை மரம், கமுகு - பாக்குமரம், அதமர் - கடைப் பட்டவர் ; கீழோர், தேம்கதலி - இனிய வாழை.

## 3. திருக்குறள்

தமிழர்களுக்குப் பெருமைதரும் இந்நூல் திருவள்ளுவரால் இயற்றப்பட்டது. திருக்குறளைப் படிக்காத தமிழர் இந்நாட்டில் ஒருவரும் இருத்தல் கூடாது. மக்களை நல்வழிப்படுத்தும் வழிகள் அனைத்தும் இதில் சொல்லப்பட்டுள்ளன.

1. அகரம் - 'அ' என்னும் எழுத்து, முதல் - முதலாகக் கொண்டுள்ளன.
2. அறத்தின் ஊங்கு - தருமத்தைக் காட்டிலும், ஆக்கம் - செல்வம்.
3. ஆற்றும் - செய்யும், நோற்றான் - தவஞ் செய்தான், கொல் - வினை.

எல்லாம் - எல்லாப் பொருளும், என்பு - எலும்பு, (உடல்.)

5. இல் இருந்து ஓம்பி வாழ்வது என்று மாற்றுக ஓம்பி - உபசரித்து, வேளாண்மை - உதவி.
6. புறத்ததா - வெளியில் இருக்க, சாவாமருந்து - அமிர்தம்.

9. சமன் செய்து - சமப்படுத்தி, கோல் - துலாக் கோல் (தராசு). ஒருபால் கோடாமை - ஒரு பக்கமாகச் சாயாதிருத்தல், (நீதி தவருதிருத் தல்), அணி - அழகு.
10. உய்த்து - செலுத்தி.
11. விழுப்பம் - மேன்மை.
12. அகழ்வார் - தோண்டுபவர்.
13. அழுக்காறு - பொருமை.
14. ஏதிலார் - அயலார்.
15. பயத்தலால் - உண்டாக்குவதனுல்.
16. ஊருணி - குளம், உலகு அவாம் - உலகத்தின ரால் விரும்பப்படுகின்ற.
17. நல்லாறு - நல்லவழி, ஈதல் - கொடுத்தல்.
18. தோன்ருமை - பிறவாதிருத்தல்.
19. புறம் தூய்மை - உடல் சுத்தம், அகம் தூய்மை - மனப் பரிசுத்தம், வாய்மை - உண்மை.
20. காவாக்கால் - காப்பாற்ருவிட்டால்.
21. எவன்ஓ? - வேறு என்ன இருக்கிறது? (வினு)
23. கசடுஅற - குற்றம் நீங்க.
24. எண் - கணக்கு, எழுத்து - இலக்கண இலக்கியம்.
25. கீழ்ப் பிறந்தும் கற்ருர் அனைத்துப் பாடு இலர் என்று மாற்றுக. பாடு - பெருமை.
26. செவிச்செல்வம் - அறிஞர் கூறுவதைக் கேட்ட லாகிய செல்வம்.

28. வைத்தூறு - வைக்கோற் போர்.

29. உரு அமை - தகுதியில்லாத செயல்களை.

31. கொம்பர் - மரத்தின் கிளை, இறந்து - கடந்து.

32. கூகை - கோட்டான் என்னும் பறவை, இகல் - போர்.

33. கால்வல் - வலியசக்கரம் உடைய, நாவாய் - கப்பல்.

34. கரவா - மறைக்காமல், கரைந்து - கூவி (அழைத்து), அன்ன நீரார்க்கே - அப்படிப்பட்ட தன்மை உடையவர்களுக்கே.

35. உள்ளியது - நினைத்ததை.

36. வான் - மழை, கோல் - செங்கோல்.

37. உள்ளம் - ஊக்கம்.

38. நெடு நீர்மை - தாமதமாகச் செய்யும் தன்மை மறவி - மறதி, மடி - சோம்பல், காமக்கலன் விருப்பத்துடன் ஏறிக்கொள்ளும் கப்பல்.

39. இன்மை - வறுமை.

40. இடும்பை - துன்பம், உள்ள - நினைக்க.

41. மாண்டது - சிறப்பான.

42. ஈன்றாள் - பெற்ற தாய்.

43. பிணி யின்மை - நோயில்லாமை, ஏமம் - பாதுகாப்பு.

44. உடுக்கை - உடை, (ஆடை.)

45. குடிமை - குடிபிறப்பின் தன்மை, நட்புயாக்க - நட்புக்கொள்க.

46. இன்னாது - தீமையானது, வினை - செயல், தொடர்பு - நட்பு.

47. கால் - முளை.

48. தலையின் - தலையிலிருந்து.

## 4. திருவேங்கட சதகம்

இயற்றியவர் நாராயண பாரதியார் என்பவர். முனிதல் – கோபித்தல், உற்றவர்கள் – வேண்டியவர்கள், இச்சையாய் – விருப்பமாய், சற்றும் – சிறிதும், எண்ணாது - ஆலோசனை செய்யாது.

## 3. வருணனை

1. பொதிய மலைச் சிறப்பு: திங்கள் - சந்திரன். முடி – உச்சி, புயல் - மேகம், தமிழ் முனிவன் – அகத்தியர், அங்கயற்கண் அம்மை – மீனாட்சி அம்மை, தூங்கும் - தொங்குகின்ற (சிந்துகின்ற).

2. மங்கிய வானம்: பரிதி - சூரியன், குன்ற மங்கை - மலையாகிய பெண், மூங்கில் இளங்கை - மூங்கிலாகிய மெல்லிய கை, புட்கள் – பறவைகள், குறுநரி - குள்ளநரி, ஊளை - குள்ளநரியின் குரல்.

## 4. கதை

### 1. தேசிங்குராஜன் கதை

தேசிங்கு மன்னன் வரலாற்றை விளக்கிப் பாடப்பட்ட ஒரு சிறுநூல் ஆகும். இது படிப்பதற்கு எளிமையானது.

3. மகிபாலன் - மன்னன்.

7. சீறி - கோபித்து.

10. தரணி - பூமி.

17. உளம் - மனம்.

20. மனுவு - உத்தரவு.

## 2. கர்ன மகாராஜன் சண்டை

கர்னன் என்ற கொடை வள்ளலைப் பற்றிப் பாடப்பட்ட இச்சிறு நூல் புகழேந்திப் புலவரால் பாடப்பட்டதாகச் சொல்லப்படுகின்றது.

1. ஐயம் – பிச்சை, அங்கராயன் - அங்கநாட்டுத் தலைவன் கர்னன்.

2. கீர்த்தி - புகழ், என்னு - என்று சொல்லாத.

6. கணை – அம்பு.

9. மறையவன் - வேதியன்.

10. கொக்கரிக்க - ஆரவாரம் செய்ய.

11. அமர் – போர்.

17. ஆயனர் - கண்ணன்.

18. காசினி - பூமி.

20. நாடி - தேடி.

22. அபசாரம் - குற்றம், (பழி).

24. தயாபரன் – கருணைமூர்த்தி.

## 3. பஞ்சதந்திரம்

வீர மார்த்தாண்ட தேவர் இயற்றியது. சிறந்த நீதிகளை உணர்த்தும் பல கதைகளை உடைய இந் நூல் படிப்பவர்க்கு அறிவு புகட்டுவதாகும்.

1. குறுமுயல் - சிறிய முயல், செறியும் - மரம் அடர்ந்திருக்கும், உறு விலங்கு - பெரிய விலங்கு, ஊன் - மாமிசம், கொடு - கொண்டு.

2. அடவி - காடு, ஊண் - உணவு, சீயம் - சிங்கம், ஆணை - கட்டளை, அருந்தி - சாப்பிட்டு.

3. எடுப்பு - காரணம், உய்ந்தோம் - பிழைத்தோம், நனி - மிகுதியான, உய்யும் - பிழைக்கும்.

4. வேழம் - யானை, பிந்துவது - காலம் தாமதிப்பது, சினந்து - கோபித்து.

5. ஆங்கு - அவ்விடத்தில், வெய்ய - கொடிய, வெருவி - பயந்து, பைய - மெதுவாக, பரு முழை - பெரிய குகை, துய்ய - தூய்மை உள்ளவனே (விளி), பக்கல் – அருகில், இறைஞ்சி - வணங்கி.

6. பங்கம் - சேறு, புனல் - நீர், பாழ்ந்துரவு – பாழடைந்த கிணறு.

7. சத்துரு - விரோதி, துன்னும் - மிகுதியான, துளங்கி - சிக்கிக்கொண்டு, என்னலால் - என்பதனால், ஈர்ந்தது - பிளந்தது, கொன்றது.

## 5. பல்சுவை

### 1. தனிப்பாடல்

பாம்புக்கும் வாழைப்பழத்துக்கும் சிலேடை

சிலேடை என்றால் இரண்டு பொருள்படச் சொல்வது.இப்பாடலில் இரண்டுபொருள்கள் உண்டு

| பாம்பு | வாழைப்பழம் |
|---|---|
| நஞ்சுஇருக்கும் - விஷம் உடையதா யிருக்கும், தோல் உரிக்கும் - தன் தோலைத் தானே உரித்து விடும். | நஞ்சு இருக்கும் – நன்றாகக் கனிந்து இருக்கும், தோல் உரிக்கும் - அதன் தோலை உறித்துவிடும் படியாக இருக்கும். |
| நாதர்முடி மேல் இருக்கும் – சிவன் தலையில் வீற்று இருக்கும். | நாதர்முடிமேல் இருக்கும் - சிவன் தலைமீது அபிடேகம் செய்யப் படும் காலத்தில் காணப் படும், (பஞ்சாமிர்தம்). |
| சினத்தில் பல்பட்டால் மீளாது - அதன் பல்பட்டால் (கடித்தால்) உயிர் பிழைக்காது. | பல்பட்டால் மீளாது - தின்பதற்காக வாயில் போட்டு மென்றால் மீண்டும் வெளி வராது. |

அதனால் பாம்பும் வாழைப்பழமும் பலவகையினால் ஒன்றுபட்டவையாம்.

2. பூ நக்கி-வண்டு,புள்ளினம்-பறவைக்கூட்டம், ஒன்பதேகால் - இரண்டேகால், கால் பதினேழு =

பதினேழேகால் - நாலேகால், (பறவைக்கு இரண்டு கால் என்பதையும், யானைக்கு நான்கு கால் என்பதையும்,வண்டுச்கு ஆறுகால் என்பதையும் இவ்வாறு வேடிக்கையாகக் கூறுகின்றார்.)

முண்டகம் - தாமரை, நீலம் – நீலோற்பலம், முண்டகத்தின்மீது முழு நீலம் பூத்தது - தாமரை போன்ற முகத்தில் நீலோற்பலம்போன்ற கண்கள் இருக்கின்றன என்பதை வேடிக்கையாகக் கூறியுள்ளார்.

2. வேண்டுவதென்ன ? இயற்றியவர் திரு. எஸ். எஸ். அருணகிரிநாதர் அவர்கள்.

1. நல்லவர் அல்லார் - தீயவர், நானிலம் - உலகம் (உலகமக்கள்) போற்றல் – கேட்டு அதன்படி நடத்தல்.

2. சீருக்கு - சிறப்புக்கு, ஏர்–உழவுத் தொழில்.

3. தமிழ்நாடு வாழ்க : நாமக்கல் கவிஞர் பாடியது.

இல்லாமை - வறுமை (இல்லை என்று சொல்லாமை), இரவாமை-பிறரிடம் ஒரு பொருளை யாசியா திருத்தல், படையாமல் – பிறருக்கு அளிக்காமல்;

தமிழ்நாட்டின் சிறப்பை விளக்க ஆசிரியர் தமிழ் பண் பாட்டினை விளக்கியுள்ளார்.

Printed at the Caxton Press, Madras.1. 1954

131535

RGR 1200

# குமரன் தமிழ் வாசகம்

முதற் படிவம் — பொதுப் பகுதி

ஆசிரியர் :

வித்துவான் ந. சண்முகம்

விலை 12 அணா